2017 மார்ச் 10 – 12
விலை: 30/-
ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 10 - 12 | பக்கங்கள் 16 | மணி 10 | ஒளி 011
நவமணி සති අන්ත NAVAMANI WEEKLY
# நவமணி
தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
QD / 154 / NEWS / 2017



விமலின் சர்ச்சையும் தினேஷின் தடையும் 04



இன ரீதியான அரசியலால் இனத்துக்கே விடிவில்லை 07

# சைடமை மூடினால் சிறை செல்ல நேரும்

## O / L முடிவுகள் மார்ச் 28 இல்

■ பா.மலரம்பிகை

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற 15 »»»

## சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல



■ அ. அருண் பிரசாந்த்

சைடம் தனியார் பல்கலைக்கழகத்தை நாம் தடை செய்தால் எமக்கு சிறை செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என நெடுஞ்சாலைகள் மற்றும் 15 »»»

## புலிகளுக்கு எதிரான போர்க் குற்றச் சாட்டு 13 இல் ஜெனீவா செல்கிறது

■ எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

இலங்கை இராணுவத்துக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களை முறியடிக்கும் நோக்கில் புலிகளுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்களை ஜெனீவா மனித 15 »»»

மத்திய வங்கி பிணைமுறி

## பொய் கூறிய பந்துலவுக்கு ஆணைக்குழு எச்சரிக்கை



■ பீ.எப்.எம் றிஷாட்

பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திய திறைசேரி பிணை முறிப்பத்திர விவகாரத்தை விசாரிப்பதற்காக 15 »»»

## ஹக்கீம் சவூதி பயணம் ஒப்பந்தங்களில் கைச்சாத்து



■ பிறவ்ஸ்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று வியாழக்கிழமை (09) சவூதி அரேபியா பயணமானார்.

சவூதி அரேபிய சுற்றுச்சூழல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அப்துல் ரஹ்மான் அல் பெட்லியை ஞாயிற்றுக்கிழமை சந்தித்து 15 »»»

## எனக்கு தேசிய பட்டியல் கிடைக்க துஆ கேளுங்கள்

சட்டத்தரணி கபூர் 15 »»»



## பொது எதிரணி தலைவராக டளஸை நியமிக்க கோரிக்கை

■ அ. அருண் பிரசாந்த்

பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் 15 »»»

## முஸ்லிம் முற்போக்கு முன்னணியில் தொகுதிக்கு இரு அமைப்பாளர்கள்

முஸ்லிம் முற்போக்கு முன்னணி தேர்தல் தொகுதிதோறும் இரு முஸ்லிம் அமைப்பாளர்களை நியமிக்கவுள்ளதாக முன்னணியின் தேசிய அமைப்பாளர் அப்துல் சத்தார் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுக் கட்சியான முஸ்லிம் முற்போக்கு முன்னணி இவ்வாறு 15 »»»

## கண்டி வீதி நெரிசல் குறைக்க வரகாப்பொலையில் மாற்று வீதி

15 »»»

1717 FOLLOW US www.mobitel.lk
LIFE இன் SPEED இற்கு செட்டாகும் INTERNET

மிகவும் வேகமான இன்டர்நெட் அனுபவத்தை உங்களுக்குத் தரும்
முற்கொடுப்பனவு திட்டங்கள்
ரூ.29 இற்கு 160MB
ரூ.49 இற்கு 400MB
ரூ.99 இற்கு 800MB
ரூ.199 இற்கு 2GB
ரூ.299 இற்கு 3GB
செயற்படுத்த #170# இனை அழையுங்கள்
TRIAD 33113
TRC/M/Promo/16/13
*நிபந்தனைகள் உண்டு
4G LTE
Sri Lanka Telecom Mobitel

MOULANA Travels & Tours (Pvt) Ltd
Since 1989
UMRAH | HAJJ | TICKETING | TOURS
Head Office: No 195, Level 01, Bambalapitiya, Colombo 4
T: +94 114 422 423, M: +94 720 999 555, +94 114 954 954
Email: info@moulanatours.com Website: www.moulanatours.com
நாம் ஏன் சொல்கிறோம்? "சென்றவரை கேளுங்கள் செல்வோம் வாருங்கள்"
எமது கட்டணங்களையும், சேவைகளையும் எவராலும் உடைக்க முடியாது. உம்ரா, ஹஜ்ஜுக்கான இலங்கையின் 1ஆவது தெரிவு
வாராந்த குழுக்கள் | நட்பான ஊழியர்கள் | அனுபவமிக்க வழிகாட்டிகள் | நட்சத்திர ஹோட்டல்கள் | 24 மணி நேரமும் தொடர்புகொள்ளலாம்
விரையுங்கள்!!! ஏப்ரல் | ரமழான் | ஹஜ்ஜில் உங்களது உம்ரா பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்!
கொழும்பு: 0720 999 555 மட்டக்களப்பு: 0720 999 666 கண்டி: 0720 999 777
மக்காவில் ஹோட்டல் அல் மாஷா குறூப் | மதீனாவில் ரமாடா ஹோட்டல்
Since 1989

புதிய மகளிர் சேமிப்புக் கணக்குகளை அறிமுகப்படுத்தி பரிசுகளை பெற்றிடுங்கள்!
இச்சலுகை 2017 மார்ச் 31 வரை அல்லது பரிசுகள் கையிருப்பிலிருக்கும் வரை மாத்திரம்
இச்சலுகை அமானா மகளிர் சேமிப்புக் கணக்குரிமையாளரால் அறிமுகப்படுத்தப்படுபவர்களுக்கு மாத்திரமே.


அறிமுகப்படுத்தும் 2 கணக்குகளுக்கு
அறிமுகப்படுத்தும் 10 கணக்குகளுக்கு
BBQ தொகுதி அல்லது கேக் மிக்சர்
அறிமுகப்படுத்தும் 5 கணக்குகளுக்கு
இலத்திரனியல் கேத்தல்
புதிய கணக்குரிமையாளருக்கு 6 கோப்பைகள் கொண்ட கோப்பி கோப்பை தொகுதி
அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk
இது உங்கள் வங்கி
Amãna Bank

# திரைக்கு பின்னால்

- சஞ்சாரி

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தோனேசிய விஜயம், முஸ்லிம் காங்கிரஸுக்குள் தொடரும் ஹக்கீம் - ஹஸனலி மோதல், மஹிந்த ராஜபக்ஷ, முஸ்லிம்கள் சந்திப்பு, விமல் வீரவன்சவின் பிறந்த தினக் கொண்டாட்டம், தினேஷ் குணவர்தனவின் பாராளுமன்றத்தடை போன்ற முக்கிய நிகழ்வுகளால் இவ்வாரமும் அரசியல் களம் சூடாகவே இருந்தது.**

## இயற்கை தேவையை தவிர்ப்பதற்காக இரவு நேரம் உண்ணாது குடிக்காதிருக்கும் விமல் வீரவன்ச

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் வழக்கு விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டத் தரணிகள் எவருமின்றி விமல் தனக்காக வாதாடினார். பொதுச் சொத்துக்கள் ஒழுங்குவிதிச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள தமக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குற்றவாளிக் கூண்டிலிருந்து விமல் குறிப்பிட்டுள்ளார். சிறைச்சாலையில் தான் இயற்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு எதிர்கொள்ளும் கஷ்டம் பற்றிக் குறிப்பிட்டார். தான் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூடம் மாலை 5.30 மணிக்கு மூடப்பட்டு மறுநாள் காலை 6.00 - 6.30 மணிக்கே திறக்கப்படுகின்றது. அக்காலகட்டத்தில் இயற்கைத் தேவையை நிறைவேற்றும் தேவை ஏற்பட்டால் இரு வாளிகள் தரப்படுவதாக குறிப்பிட்ட விமல், அந்த வாளியைத் தான் பயன்படுத்தினால் மலசலகூடத்துக்குள் இருக்கும் நிலையில் சிறைக்கூட்டுக்குள்ளும் இருக்க வேண்டியிருப்பதால் தான் அதனைப் பாவிப்பதில்லை என்றும் கூறினார். தான் இந்த நிலையைத் தவிர்த்துக் கொள்வதற்காக இரவு நேரங்களில் உணவு உண்ணுவதில்லை என்றும் தண்ணீர்க்கூடக் குடிப்பதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தெரிவான தனக்கு மக்கள் சேவையைத் தொடர பிணை வழங்கப்பட வேண்டும் என்றும் விடுத்த வேண்டுகோள் தொடர்பாக எதிர்வரும் 20ஆம் திகதி தீர்ப்பளிப்பதாக கொழும்பு மஜிஸ்திரேட் லங்கத ஜயரத்ன தெரிவித்தார்.

## விமல் வீரவன்சவின் கேக்கின் மேல் இருந்தது 'ஐசிங்' கைவிலங்கா

தான் அமைச்சர் பதவி வகித்த போது வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கடந்த செவ்வாயன்று அகவை 47க்குள் பிரவேசித்தார். தொடர்ந்து இரு மாதங்களாக விளக்கமறியலிலிருந்து வரும் விமலின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று பாராளுமன்றத்தின் பொதுமக்கள் போசன சாலையில் இடம்பெற்றது. பிறந்த தினத்துக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கேக் வெட்டப்பட்டு பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். விமல் வீரவன்சவின் மனைவி மற்றும் பிள்ளையும் கலந்து கொண்டனர்.

கேக்கிற்கு மேலாக கைவிலங்கு ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்துக்குள் கைவிலங்கு எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பது அத்தினத்தன்று பாராளுமன்ற அமர்வில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. குருநாகல் மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் பிறந்தநாள் கொண்டாட்டம் நடத்தப்படலாமா என கேள்வி எழுப்பினார். இன்று பாராளுமன்றத்தில் பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. அவ்வாறு இந்த இடத்தில் பிறந்தநாள் விருந்து கொடுக்கலாமா? வெட்டப்பட்ட கேக்குக்கு மேல் கைவிலங்கொன்றும் வைக்கப்பட்டிருந்தது. அது உண்மையான கைவிலங்குதானா இதனைக் கொண்டு வந்திருந்தால் அது பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை உடன் விசாரணை நடத்தப்பட வேண்டுமென இந்துனில் துசார வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக விளக்கமளித்த பாராளுமன்ற உறுப்பினர் வீரகுமார திசாநாயக்க இது விமல் செய்த வேலையல்ல. அது விமல் சார்பில் நாம் செய்த வேலை கேக்கிலிருந்த கைவிலங்கு ஐசிங் கைவிலங்கே என்றதும் முழு சபையிலும் சிரிப்பொலி எழுந்தது.

## பேராசிரியர் மொண்டி காசிமுக்கு ஜப்பானின் உயர் கௌரவம்

ஜப்பானின் ரிட் சுமிகன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் மொண்டி காஸிம் ஜப்பான் இலங்கை உறவை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறார். பேராசிரியர் காஸிமின் சேவையை கௌரவிக்கும் முகமாக கொழும்பிலுள்ள ஜப்பான் தூதுவராலயத்தின் இல்லத்தில் பாராட்டுபசாரம் ஒன்று நடைபெற்றது. இங்கு பேராசிரியருக்கு ஜப்பானின் கௌரவம் வழங்கப்பட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேராசிரியர் இலங்கையில் கல்வி நிலையை மேம்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பாராட்டுத் தெரிவித்ததோடு, நாடு பொருளாதார ரீதியாக துரித அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும் இவ்வேளையில் பேராசிரியர் காஸிம் மூலம் கிடைக்கும் பெரும் ஒத்துழைப்பு குறித்தும் பிரதமர் இங்கு குறிப்பிட்டார். ஜப்பான் தூதுவர் கெனிச் சுகனுமாவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

## தமிழர் கூட்டணிக்குள் பிளவை உருவாக்கியுள்ள ஜெனீவா கால அவகாசம்

ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழு கூட்டத்தில் இலங்கைக்கு இரு வருட கால அவகாசம் வழங்குவதற்கு எடுத்துள்ள தீர்மானம் பிரதான தமிழ் அரசியல் கட்சியான தமிழர் கூட்டமைப்புக்குள் பிளவை உருவாக்கியுள்ளது. 2015இல் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை அமுல்படுத்துவதில் இலங்கை கடைப்பிடித்து வரும் மந்தப் போக்கு குறித்து தமிழ் தரப்பில் கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக்கு கால அவகாசம் அளிக்கக் கூடாதென பத்து எம்.பிக்கள் கையொப்பமிட்டு வேண்டுகோள் விடுத்துள்ள அதேவேளை, இவ்வாறான கடிதம் ஒன்றை அனுப்புவது குறித்து தமிழர் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இக்கடிதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம். ஏ. சுமந்திரன் ஆகியோரும் கையொப்பமிடவில்லை. நான்கு தமிழ்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து இயங்கும் தமிழர் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த கட்சிகள் காலம் வழங்குவதனைக் கடுமையாக ஆட்சேபித்து வருகின்றனர்.

அரசுக்கு மேலும் சில கால அவகாசம் வழங்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் இருக்கிறார்கள். இது அரசுக்கு ஆதரவளிக்கும் செயற்பாடே என தீவிர போக்குள்ள தமிழர் தரப்பு தெரிவித்து வருகின்றது.

இதேநேரம், இக்கடிதத்தில் போலிக் கையொப்பங்கள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களான சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, ஸ்ரீநேசன் கோடிஸ்வரன் ஆகியோர் கையொப்பமிடாது அவர்கள் பெயர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். இதேநேரம் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்படுத்துவதனைத் தவிர்ப்பதற்காக கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் கூட்டமொன்று சனியன்று நடைபெறவுள்ளது.

## இந்தோனேசியாவில் மைத்திரிக்கு கண்கவர் நிகழ்வுடன் வரவேற்பு

உலகில் முஸ்லிம்கள் கூடுதலாக வாழும் நாடான இந்தோனேசியாவில் நடைபெற்ற இந்து சமுத்திர வலய நாடுகளின் அமைப்பின் 20ஆவது மகாநாடு புதனன்று நடந்து முடிந்தது. இந்து சமுத்திர நாடுகளின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்ட இந்த மகாநாட்டில் இலங்கை சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட உயர் மட்டத் தூதுக்குழு ஒன்று கலந்து கொண்டது. மகாநாட்டில் கலந்து கொண்டதற்கு மேலதிகமாக ஜனாதிபதி இந்தோனேசிய ஜனாதிபதியையும் சந்தித்தார். முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க 1976இல் இந்தோனேசியா சென்ற பின் இலங்கைத் தலைவர் ஒருவர் இந்தோனேசியாவுக்குச் சென்ற முதற் சந்தர்ப்பம் இதுவாகும். இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தோனேசிய ஜனாதிபதி ஜேகோவிதோதாவுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு புதனன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. இலங்கை ஜனாதிபதியை வரவேற்பதற்காக நிகழ்வு கண்கவர் முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜனாதிபதி மாளிகை முன்னால் இந்தோனேசிய கலை, கலாசார பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் கலை கலாசார நிகழ்வுகளுடன் வரவேற்புபசாரம் நடைபெற்றது. இந்தோனேசிய மகாநாட்டில் இலங்கை ஜனாதிபதிக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. இம்மகாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்களில் இலங்கை ஜனாதிபதி மற்றும் அரபு நாடொன்றின் பிரதிநிதி தவிர்ந்த சகலரும் ஆங்கில உடையினையே அணிந்திருந்தார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டும் வழமை போன்று வெள்ளை நிற ஆடையே அணிந்திருந்தார். முழு மகாநாட்டிலும் அவர் வெட்டித் தென்பட்டார். உச்சி மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றியபோது இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கை அதற்குரிய இடத்தைப் பெறுவதற்காக தேசிய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாக விளக்கினார்.

ஜனாதிபதி ஜகார்த்தா சென்ற முதல் நாளே அங்கு வாழும் இலங்கையர்களைச் சந்தித்தார். இலங்கைத் தூதுவராலயத்தில் இடம்பெற்ற ஒன்றுகூடல் நிகழ்வில் இலங்கையர்களைச் சந்தித்த ஜனாதிபதி அரசினைச் சிக்கலுக்குள்ளாக்கும் சில இணையத்தளங்கள் பற்றி தனதுரையில் குறிப்பிட்டார். இலங்கை அரசின் செயற்பாடுகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்காக சில இணையத்தளங்களினூடாக தவறான பிரசாரங்களை எதிர் அரசியல்வாதிகள் மேற்கொண்டு வருகிறார்கள். இவற்றை நம்ப வேண்டாம் என வேண்டுகோள் விடுத்த ஜனாதிபதி, கடந்த காலத்தில் சில நாடுகள் இலங்கையுடனான தொடர்புகளை நிறுத்திக் கொண்டிருப்பது பற்றியும் கூறினார். இன்று இந்த நிலைமை மாறி ஐ.நா. பொதுச் செயலாளர் உட்பட அநேக நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு அழைப்பு விடுப்பதாகவும் கூறினார்.

## 2001இல் ஐந்து எம்.பிக்கள் அஸ்வரை தூக்கிச் சென்றனர்

பாராளுமன்றத்தில் சபாநாயகரின் கட்டளைகளை மீறியதற்காக 2001இல் அப்போதைய பிரதி சபாநாயகர் அனில் முனசிங்கவினால் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம். அஸ்வர் வெளியேற்றப்பட்டார். ஏ.எச்.எம். அஸ்வரை பொலிஸார் வெளியேற்ற வந்த போதும் அதற்கு இடமளிக்காது ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து தூக்கிச் சென்றனர். மேர்வின் சில்வா, காமினி லொகுகே, கபீர் ஹாசிம், சரத் குணவர்தன, டி.எம். பண்டாரநாயக்க ஆகியோரே இந்த எம்.பிக்களாவார்கள். இதேநேரம் 2011இல் ஏ.எச்.எம். அஸ்வர் சபைக்குத் தலைமைதாங்கிய போது தயாசிறி ஜயசேகரவை சபையிலிருந்து வெளியேற்றினார்.




பாணந்துறை தொட்டவத்தை தாய்மார், குழந்தைகள் சுகாதார நிலையத்தின் புதிய கட்டிடத்தை திறன் அபிவிருத்தி தொழிற்பயிற்சி அமைச்சர் மஹிந்த சமரசிங்க திறந்து வைப்பதையும் இந்த சுகாதார நிலையத்தின் முன்னைய கட்டிட நிர்மாணத்துக்காக இதே இடத்தில் 1982ஆம் ஆண்டில் இடம்பெற்ற அத்திவாரக்கல் நாட்டு விழாவில் மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பத்மின் பொன்சேகா உரையாற்றுவதையும் சுகாதார நிலையத்தின் முன்னோடி முன்னாள் கிராமோதய சபை தலைவர் ஏ.எம்.எம். நளீர் ஹாஜியார், மர்ஹூம்களான எம்.எஸ்.எம். மாஹிர், எம்.எஸ்.எச்.எம். அமீர்ஹாஜி, மௌலவி ஷரீப் ஆலிம், எம்.எச்.எம். மஹ்தி மற்றும் முன்னாள் கிராமோதய சபை உறுப்பினர்களான எம்.ஏ.எம். ரவூப், எம்.எஸ்.எம். முன்தஸிர் உள்ளிட்ட நிகழ்வில் கலந்துகண்ட பிரமுகர்கள் பலரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# ஜே.வி.பி. தலைவரின் பாராட்டுக்குள்ளான இப்றாஹிம் ஹாஜியாரின் பெருந்தன்மை

## ஜே.வி.பி. தலைவரின் பாராட்டுக்குள்ளான இப்றாஹிம் ஹாஜியாரின் பெருந்தன்மை

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க கடந்த சனியன்று விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் பகிரங்கச் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். தற்போதைய அரசியல் சூழ்நிலை என்ற தலைப்பிலான இந்த சொற்பொழிவினை மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் அபேட்சகராக இருந்த பிரபல தொழில் அதிபர் வை.எம். இப்றாஹிம் ஏற்பாடு செய்திருந்தார். நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொண்ட இந்த சொற்பொழிவினை ஆரம்பிக்க முன் அநுர குமார திசாநாயக்க தனது பேச்சில் இடம்பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படும் விடயங்கள் ஏதும் இருப்பின் அவற்றைக் கேட்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

பார்வையாளர்கள் சிலர் முஸ்லிம் சமூகம் தொடர்பாக மற்றும் நாட்டின் பொருளாதார நிலை தொடர்பாக கேள்விகளை எழுப்பினர். அநுர குமார திசாநாயக்க தனதுரையை நாட்டின் பொருளாதாரத்தில் கடன் பளு ஏற்படுத்தும் தாக்கம் பற்றித் தொட்டுப் பேசினார். நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையைப் பெறாது முன்னேற்றம் சாத்தியமில்லை என்று கூறிய அவர், சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ மேலும் 50 வருடங்கள் ஆட்சி செய்தாலும் நாடு இதே நிலையிலிருக்கும் என்று கூறினார். ஜே.வி.பி. இந்த நாட்டின் முற்போக்கு மற்றும் சிவில் சமூக அமைப்புக்களை உள்ளடக்கி புதிய முன்னணி ஒன்றை உருவாக்கி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் கூறினார்.

தமது கட்சியை ஆதரிக்கும் இப்றாஹிம் ஹாஜியார் பற்றிக் குறிப்பிட்ட அநுர குமார திசாநாயக்க, கடந்த வெள்ளப் பெருக்கின் போது அவரது ஒரு தொழிற்சாலையே நீரில் மூழ்கியது. அது தொடர்பாக அவரைத் தொடர்பு கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டபோது, அவரளித்த பதில், அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது என்றார். என்னை விட உதவ வேண்டியவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள் அவர்களுக்கு உதவுங்கள் என்றுதான் கேட்டார் என்றும் அனுரகுமார கூறினார். நிகழ்வில் அநுர குமார முஸ்லிம்கள் சார்பில் குரல் கொடுப்பதற்காக நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## கூடிய ஊடக அவதானத்தை ஈர்த்த அமைச்சர்களின் வாகன நிதி ஒதுக்கீடு

நாடு பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையிலும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வசதிகளை வழங்குவதில் அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. அமைச்சர்களுக்கு வாகனங்களை வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வது மக்கள் எதிர்ப்பினையடுத்து சில மாதங்களுக்கு முன் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இவ்வாரம் மீண்டும் அதற்காக நிதி ஒதுக்கிடும் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 11 அமைச்சர்களுக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு 49 கோடி 4962790 ரூபாவை குறை நிரப்பு பிரேரணை மூலம் பெறும் பிரேரணை கடந்த செவ்வாயன்று பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பான செய்திக்கு நாட்டின் ஊடகங்கள் மிக முக்கியத்துவமளித்திருந்தன.

பாராளுமன்றத்தை நவீனமயப்படுத்துவதற்கு 37 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

## முஸ்லிம் எம்.பி. ஒருவருக்கு மரண அச்சுறுத்தல்

பாராளுமன்றத்தில் அடிக்கடி கடந்த அரசின் ஊழல் பற்றிப் பேசும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது குறித்து பாராளுமன்ற வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. கடந்த ஆறு மாத காலத்துக்குள் இரண்டாவது முறையாக அச்சுறுத்தல் கடிதம் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட உறுப்பினர் அது தொடர்பாக அக்கறை காட்டாது தன் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

## முஸ்லிம்களுடன் மனம் திறந்து பேசிய மஹிந்த ராஜபக்ஷ

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாயன்று வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த முஸ்லிம்களைச் சந்தித்தார். கொழும்பு - 7 விஜேராம மாவத்தையிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்தது போன்று ஆட்கள் வருகை தரவில்லை. அதே தினத்தன்று கூட்டு எதிர்க்கட்சியினர் ஏற்பாடு செய்திருந்த மாதர்தின நிகழ்வுக்கு வந்தவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர் முன்னாள் ஜனாதிபதி வழமை போன்று தன்னை முஸ்லிம்களிடம் பிரித்து வைப்பதற்கு சதி நடந்தது என்று குறிப்பிட்டார். தனது காலத்தில் முஸ்லிம்களுக்கு ஆற்றிய சேவைகளை நினைவு கூர்ந்த மஹிந்த, முஸ்லிம்களைத் தன்னிடமிருந்து பிரிப்பதற்கு வெளிநாட்டுச் சக்திகள் சதித் திட்டங்களை தீட்டுகின்றன. அதற்காகப் பெருமளவில் நிதியும் ஒதுக்கப்படுவதாகவும் இந்த சூழ்ச்சிக்குள் முஸ்லிம்கள் சிக்கி விடக்கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

தனது ஆட்சியில் முஸ்லிம்களுக்கு உரிய கௌரவமளிக்கப்பட்டது என்றும் கூடுதலானவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, தம்புள்ளையில் பள்ளிவாசலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியைப் பயன்படுத்தி பள்ளிவாசலை நிர்மாணிப்பது நல்லது என்றும் ஆலோசனை தெரிவித்துள்ளார். முற்போக்கு முஸ்லிம் முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் அதன் செயலதிபர் ஏ.எச்.எம். அஸ்வர், தேசிய அமைப்பாளர் அப்துல் சத்தார் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அண்மையில் அரசினை ஆதரித்த முஸ்லிம் பிரமுகர் ஒருவர், அரசின் தலைவர்களால் முஸ்லிம் தலைவர்கள் மதிக்கப்படுவதில்லை என்று தெரிவித்த கருத்து ஒன்று முஸ்லிம்களிடையே பேசு பொருளாக மாறியுள்ளது. சம்பந்தன், சுமந்திரன் வரும் போது எழுந்து நிற்கும் ஜனாதிபதி முஸ்லிம் அமைச்சர்களுக்கு மதிப்பளிப்பது இல்லை என்று தெரிவித்தார். முஸ்லிம் தலைவர் இப்படி அகௌரவப்படாது எளிமையாக சந்தித்து எந்த விடயத்தையும் பேசக்கூடிய மஹிந்த ராஜபக்ஷவுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டு அவரை ஆதரிக்க முன்வர வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் அரசிலுள்ள முஸ்லிம் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

## பாராளுமன்றத்திலிருந்து முதலில் தூக்கிச் செல்லப்பட்டவர் சி. சுந்தரலிங்கம்

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியை சுதந்திரமாக இயங்க அனுமதிக்க வேண்டும் என விடுத்துவரும் கோரிக்கையினால் பாராளுமன்றத்தில் கூட்டு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் தினேஷ் குணவர்தனவிற்கு ஒரு வாரகால பாராளுமன்றத் தடை விதிக்குமளவிற்கு புதனன்று பெரும் சர்ச்சை ஏற்பட்டது. சபாநாயகரின் கட்டளைகளுக்கு அடிபணியத் தவறிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இதற்கு முன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். 1952இல் வவுனியா எம்.பியான அடங்காத் தமிழர் முன்னணியின் தலைவர் சி. சுந்தரலிங்கம் சபையின் கதிரையுடனே தூக்கிச் செல்லப்பட்டார். 1952 - 1955இல் முன்னாள் பிரதமராக இருந்த கலாநிதி டபிள்யூ. தஹநாயக்க சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார். 1960ல் ரொபட் குணவர்தன பொலிஸாரினால் தூக்கிச் செல்லப்பட்டார். 1955இல் மொரடுவ பாராளுமன்ற உறுப்பினர் சோமவீர சந்திரசிறி சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார். 1964ல் வெலிமட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கே.எம்.பி. ராஜரத்ன தூக்கிச் செல்லப்பட்டார். 1980இல் கலவானைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சரத் முத்தொட்டுவேகமயும் தூக்கிச் செல்லப்பட்டார். கடைசியாகப் பாராளுமன்றத்தில் தூக்கிச் செல்லப்பட்டவர் ஏ.எச்.எம். அஸ்வராவார்.

# இணைய தளங்களில் புலிக்கொடி ஏந்திப் பிரசாரம்

## பாராளுமன்றில் நேற்றும் வாக்குவாதம்

(அ.அருண் பிரசாந்த்)

புலிக்கொடி ஏந்தியும் புலி உடையணிந்தும் இணையத்தளங்களில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுதாக பொது எதிரணி உறுப்பினரான பத்ம உதயசாந்த தெரிவித்த கருத்தை அடுத்து சபையில் நேற்றைய தினமும் கடும் சொற்போர் ஏற்பட்டது.

வியாழக்கிழமை சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடிய பாராளுமன்றில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கானக் கேள்வி நேரத்தின்போது தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினரான பத்ம உதயசாந்த, 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் புலிகளால் படுகொலைசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பில் சட்டம், ஒழுங்கு அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இவற்றுக்கான பதில்களை அமைச்சர் வழங்கியதையடுத்து, அரசியல்வாதிகள் சிலரும் தனி நபர்களும் இணையம் மற்றும் ஊடகங்கள் ஊடாக பிரிவினை வாத்தைத் தூண்டும்வகையில் செயற்படுகிறார்கள். இதுபோன்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா? என இடைக் கேள்வியொன்றை உதயசாந்த எம்.பி. எழுப்பினர்.

இதற்கு, அவ்வாறு நடைபெறுமாயின் நீதிமன்றத்தின் ஊடாக, சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பதிலளித்தார்.

இதனைத் தொடர்ந்து புலிக்கொடியை ஏந்தியவாறும் புலி உடையணிந்தும் காணப்படும் ஒரு பெண்ணின் புகைப் படம் தற்போது இணையங்களில் பரவிவருகின்றது. இவ்வாறான புலிப் பிரசாரங்கள் இடம்பெறுவது அரசுக்கு தெரியாதா? என குறித்த பாராளுமன்ற உறுப்பினர் மீண்டுமொரு கேள்வியை அமைச்சரிடம் முன்வைத்தார்.

இதன்போது எழுந்த சபைமுதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியல்ல, இது உள்நாட்டு இணையத்தளமா அல்லது வெளிநாட்டு இணையமா என்று முதலில் குறிப்பிடுங்கள். சபாநாயகரே. இவர்கள் கூறுவதெல்லாம் பொய். முற்றாக அழிந்துவிட்டதாக கூறிய புலிகளுக்கு தற்போது இவர்களே பிரசாரம் கொடுக்கின்றனர் என்று காட்டமாகத் தெரிவித்தார்.

இவ்வேளையில், ஆளும் எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டமையால் இது விடயம் தொடர்பில் கருத்து வெளியிட எழுந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

இணையத்தளத்தின் பெயரை குறிப்பிடச்சொல்லுங்கள். நான் ஆஸ்திரேலியா சென்றிருந்தபோதும் இவர்களின் சகாக்கள்தான் மெல்போர்ன் பல்கலைக்கு முன்னாள் நின்று கொண்டு எனக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர் என்று சற்றுக் கிண்டல் தொனியில் குறிப்பிட்டார். இந்த சர்ச்சைக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சரான சாகல ரத்னாயக்கவும், உறுப்பினரே. எந்த இணையத்தில் அந்தப் படம் இருக்கின்றது என குறிப்பிடுங்கள். அதுதொடர்பில் தகவல்கள் இருந்தால் சமர்ப்பிக்கவும். தேவையேற்படின் நடவடிக்கை எடுக்கப்படும் என பத்மஉதயசாந்த எம்.பியை பார்த்துக் கூறினார். எனினும், இறுதிவரை எந்த இணையத்தளத்தில் புலி உடையணிந்த பெண்ணின் படம் வெளிவந்தது என்பதை பத்ம உதயசாந்த எம்.பி. குறிப்பிடவேயில்லை. சில இணையத்தளங்களில் வந்துள்ளன என்று மட்டுமே குறிப்பிட்டார். இவருக்கு சார்பாக மஹிந்த அணியிலுள்ள சில இளம் எம்.பிக்களும் குரல் எழுப்பினர். இவ்வாறு சர்ச்சைகளும் கூச்சல்களும் சபையில் நீடித்துக் கொண்டிருக்கையில், நாமல், மஹிந்தவுக்கு சார்பான குழுக்களே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களை இலக்கு வைத்து சமூகவளைத்தளங்களில் இவ்வாறான போலி தகவல்களை வெளியிடுகின்றனர் என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டினார். இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான எஸ்.எம்.மரிக்கார், சபாநாயகரே, அது இணையத்தளம் அல்ல. மாறாக அந்த புகைப்படம் ப்ரோபைல் (தனியார் பக்கம்) ஒன்றில் தான் வெளிவந்துள்ளது எனக் குறிப்பிட, இருதரப்பினரும் சபையில் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

## முஸ்லிம் காங்கிரஸ் ஜே.வி.பி சந்திப்பு

எல்லை மீள்நிர்ணயம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை காரணமாக உள்ளூராட்சித் தேர்தல் தாமதமாகுமானால், அந்தத் தேர்தலை நடைமுறையிலுள்ளவாறு அவசரமாக நடாத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணிக்குமாறு ஜனாதிபதியையும்,பிரதமரையும் சந்தித்து சிறுபான்மைக் கட்சிகளும், சிறிய கட்சிகளும் வேண்டுகோள் விடுப்பது சிறந்ததென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன ஆலோசனை நடாத்தியுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க, அக்கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் அக்கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோருக்கும் இடையில் கடந்த புதனன்று நடைபெற்ற சிநேகபூர்வமான கலந்துரையாடலின் போதே இதுபற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இச்சந்திப்பு அமைச்சர் ஹக்கீமின் இல்லத்தில் இடம் பெற்றுள்ளது.

## சட்டவிரோத தீப்பெட்டி தொழிற்சாலைக்கு சீல்

### நுகர்வோர் அதிகாரசபை அதிரடி

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிஷாத் பதியுதீனின் பணிப்பின் பேரில் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தரச்சான்றிதழ் அனுமதி பெறாது நிட்டம்புவ, பணாவலவில் சட்டத்துக்கு முரணாக இயங்கி வந்த தீப்பெட்டி தொழிற்சாலை ஒன்றை திடீர் சுற்றிவளைப்பு செய்த நுகர்வோர் பாதுகாப்புசபை அதிகாரிகள் அதனை மூடி சீல் வைத்துள்ளனர்.

வியாழன் கிடைத்த தகவலின்படி அந்த தொழிற்சாலையை முற்றுகை செய்த நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் தரச்சான்றிதழ் அனுமதி பெறாது நடாத்தப்பட்டு வந்த்தொழிற்சாலையில் 28080 தீப்பெட்டிகளை கைப்பற்றியதோடு தொழிற்சாலையையும் மூடி சீல் வைத்தனர்.

## பாராளுமன்றுக்கு பொலிஸார் வந்தவிதம் பற்றி விசாரணை சபாநாயகர் அறிவிப்பு



(அ.அருண் பிரசாந்த்)

பாராளுமன்றுக்குள் பொலிஸார் நேற்று முன்தினம் வருகை தந்த விதம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார எம்.பி, பாராளுமன்றில் நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) சர்ச்சை ஏற்பட்டபோது, எதிரணி உறுப்பினர்கள் நுழையும் நுழைவாயிலின் ஊடாகவே பொலிஸார் சபைக்குள் நுழைந்துள்ளனர். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்கள் வருகை தரும் நுழைவாயிலில் பொலிஸார் வருவதானது முறையற்ற ஒன்றாகும். மாறாக அவர்கள் பிரதான நுழைவாயிலின் ஊடாகவே சபைக்குள் வந்திருக்க வேண்டும். எனவே, இது விடயம் தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும் என்றுக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் பதிலளித்த சபாநாயகர், பொலிஸார் சபைக்குள் எவ்வாறு நுழைந்தார்கள் என்பதை தேடிப்பார்த்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் ஏற்பட்ட பெரும் சர்ச்சையை அடுத்து, தினேஷ் குணவர்த்தன எம்.பியை வெளியேற்றுவதற்காக சுமார் 25 வருடங்களுக்குப் பின்னர் பொலிஸார் சபைக்குள் வருகைத் தந்தனர். இதன்போது வந்த 21 பொலிஸாரும் எதிர்க்கட்சியினர் நுழையும் நுழைவாயிலின் ஊடாகத் தான் வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயிலுநர் ஆசிரியர்களது கொடுப்பனவை மீளப்பெறலாம்

பயிலுநர் ஆசிரியர்களாக 1988, 1989 ஆம் ஆண்டுகளில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக கொடுப்பனவை மீளவும் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு அக்கொடுப்பனவை பெற்றுகொள்ள முடியும்.

கொடுப்பனவு தேசிய சேமிப்பு வங்கியில் சம்பந்தப்பட்ட ஆசிரியரின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு வந்தது. மீளப்பெற்றுக் கொள்ளாதோர் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக கல்வி அமைச்சிற்கு அறியத்தருமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

## தெற்கு ஆசிரியர்களுக்கான நேர்முக தேர்வில் சிக்கல்

தென் மாகாண பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு 17ஆம் திகதி 12 மணிக்கு இடம்பெறவுள்ளதால் முஸ்லிம்கள் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை தினங்களில் 12மணிக்கு முஸ்லிம்கள் பள்ளிக்கு செல்வார்கள் என்றும் தெரிந்தும் மேற்படி நேர்முகத் தேர்வை 12 மணிக்கு வைத்துள்ளது குறித்து உரியவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். முஸ்லிம்கள் மேற்படி தேர்வுகளில் பங்கேற்பதிலிருந்து தடுப்பதற்காக இவ்வாறான சிக்கல்கள் என்று பாதிக்கப்பட்டவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

தமிழ் மொழி மூல பட்டதாரிகளுக்கு தனிச் சிங்களத்தில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

தாய்நாட்டுக்கு பொருளாதார, வர்த்தக வாய்ப்புகள் பலவற்றை பெற்றுக்கொண்டு தனது இந்தோனேசியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை நிறைவு செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதன்கிழமை இரவு நாடு திரும்பினார்.

ஜனாதிபதிக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வு இந்தோனேசியாவின் சுகர்னோ விமான நிலையத்தில் புதன்கிழமை மாலை இடம்பெற்றது. இந்தோனேசியாவின் உயர் மட்ட அரசாங்க அதிகாரிகள் இதில் கலந்து கொண்டார்கள்.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோவின் அழைப்பின் பேரில் ஜகார்த்தா நகரில் நடைபெற்ற இந்து சமுத்திர பிராந்திய அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி இந்தோனேசியாவுக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




ලංකා සතොස
LANKA SATHOSA லங்கா சதொச

தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவர்

தொழில் மற்றும் வர்த்தக முறை அமைச்சு

**தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவருடன் தொழில் வாய்ப்புக்கள்**

லங்கா சதொச வலையமைப்பானது நாடு முழுவதும் 300ற்கும் மேற்பட்ட கிளைகளுடன் 30 பில்லியன் ரூபா புரள்வை கொண்ட இலங்கையின் பாரிய சில்லறை விற்பனை நிலையமென்ற நாமத்தை கொண்டுள்ளது. நாம் நமது கீழ்காணும் குறிக்கோள்களை அடைய எதிர்பார்த்துள்ளோம்.

- வாழ்க்கை செலவை குறைத்தல்
- நாட்டு மக்களை வியாபாரங்களுடன் சம்பந்தப்படுத்தல்
- சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கான வியாபார கோரலை நாடு முழுவதும் கொண்டு வர வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.

மேற்குறிப்பிட்ட நம் இலக்குகளை அடைய எமது வியாபார நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்த எமது கிளைகளை 500 ஆக அதிகரித்து புரள்வை ரூபா. 50 பில்லியனாக அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம். எமது அணியில் இணைத்து கொள்ள விற்பனை உதவியாளர்கள், களஞ்சிய உதவியாளர்கள் வெற்றிடங்களுக்காக தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கான தகைமைகள் உங்களுக்கு இருக்குமாயின் உங்களின் தபாலுறையின் இடது பக்க மூளையில் பதவியை குறிப்பிட்டு பதிவுத்தபாலில் விண்ணப்பத்தை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

**விற்பனை நிலைய முகாமையாளர்**

லங்கா சதொச வலையமைப்பில் உள்ள விற்பனை நிலையங்களுக்காக செயற்திறன் மிக்க, துடிப்பான விற்பனை நிலைய முகாமையாளர்களை தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சூப்பர் மார்க்கட்கள் அல்லது திணைக்களங்களின் களஞ்சியசாலைகளில் வாடிக்கையாளர்களுக்கான பொருட்கள் சில்லறை விற்பனையில் ஈடுபட்டிருப்பின் மேலதிக தகைமையாக கொள்ளப்படும். வாடிக்கையாளர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை தன்மை ஏற்படாதவாறு களஞ்சியசாலை செயற்பாடுகளுடன் இணைந்து செயற்படும் தன்மையுடன் அதி உயர் வாடிக்கையாளர் சேவையை பெற்றுக்கொடுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

விற்பனை நிலைய முகாமையாளர்களிடம் முக்கியமாக எதிர்பார்க்கப்படுவது விற்பனை செலவுகளை கட்டுப்படுத்தும் முறை மற்றும் அதிக அனுகூலங்களை பெறும் செயற்திறன் மிக்க செயற்பாட்டுடன் தனி முகாமைத்துவத்தின் மூலம் விற்பனையை அதிகரிக்கும் திறன் என்பவற்றை கொண்டிருத்தல் வேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி அல்லது வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டம்

அல்லது

02. ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்துறை சம்பந்தமான நிறுவனத்தில் வெற்றிடத்திற்கு பொருத்தமான இடைநிலை பரீட்சையொன்றில் சித்தி அடைந்திருத்தல்.

சம்பள குறியீடு : MA4
சம்பளம் : ரூபா. (17,720 – 10x 325- 15x 400- 5x475- 29,345)
ஏனைய கொடுப்பனவுகள் : (வாழ்க்கைச்செலவு கொடுப்பனவுகள்- ரூபா. 7,800/- + தொலைபேசி கொடுப்பனவுகள் - ரூபா. 1,500/- மேலதிக கொடுப்பனவுகள் - ரூபா. 10,000/- )
வயதெல்லை : 45 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

**நீங்கள் இத்தகைமைகளை கொண்டுள்ளீர்களெனின் உங்களுடைய சுயவிபரக்கோவையுடன், உங்கள் சான்றிதழ் பிரதிகளை இந்த விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வையுங்கள்.**
**(விண்ணப்பிக்கும் பதவியினை உறையின் மேல் இடது கை பக்க மூலையில் குறிப்பிட்டு அனுப்பவும்.)**

தலைவர்
**வரையறுக்கப்பட்ட லங்கா சதொச,**
இல: 108, நெக்ரிஸ் கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு-01

# விமலின் சர்ச்சையும் தினேஷின் தடையும்

■ எம்.எஸ்.அமீர் ஹுசைன்

மக்கள் ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவரும் கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தனவிற்கு ஒருவார காலத்திற்கு பாராளுமன்ற அமர்வுகளுக்கு சமூகமளிக்க முடியாது என்ற தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த தடை உத்தரவை சபாநாயகர் கரு ஜயசூரிய 2017 மார்ச் 08 ஆம் திகதி பிறப்பித்தார். தொடர்ச்சியாக பாராளுமன்ற சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்ற காரணத்தின் அடிப்படையில் பாராளுமன்ற நிலையில் கட்டளைகள் சட்டத்தின் பிரிவு 74/1 இன் கீழ் சபாநாயகர் இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பாராளுமன்றம் 2017 மார்ச் 08 ஆம் திகதி கூடியபோது விமல் வீரவன்சவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி கட்சி பாராளுமன்றத்தில் சுதந்திரமாக இயங்குவதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து கருத்து வெளியிட முற்பட்டபோது அதற்கு அனுமதி வழங்க முடியாது என்று சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து சர்ச்சை ஏற்பட்டது. இந்த சர்ச்சையில் கூட்டு எதிரணியின் உறுப்பினர் தினேஷ் குனவர்தன தலையிட்டு விமல் வீரவன்சவிற்கு ஆதரவாக செயற்பட்டார். ஆனாலும் இந்த பிரச்சினையால் சபையில் கூச்சலும் குழப்பமும் எற்பட்டதால் பாராளுமன்ற அமர்வை நடத்த முடியாதபடி இடையூறு ஏற்பட்டதால் உறுப்பினர்களை அமைதிப்படுத்த சபாநாயகர் கடும் பிரயத்தனப்பட வேண்டி ஏற்பட்டது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சபாநாயகர் உறுப்பினர் ஒருவரை சபையில் இருந்து வெளியேறுமாறு அல்லது அதனையும் மீறி உறுப்பினரை வெளியேற்றுமாறு படைக்கல சேவிதருக்கு உத்தரவு வழங்கும் நிலை ஏற்படுமானால் ஒன்றில் குறிப்பிட்ட உறுப்பினர் பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கும், நிலையியல் கட்டளைகளுக்கும் மாற்றமான முறையில் ஒழுங்கீனமாக நடந்தவராக இருக்க வேண்டும். அத்துடன் சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தி நடவடிக்கைகளைக் குழப்பினால் சபாநாயகரால் பாராளுமன்ற அமர்வை நடத்திச் செல்ல முடியாது என்ற நிலை ஏற்பட்டால் இத்தகைய முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

அந்த அடிப்படையிலே கடந்த 08 ஆம் திகதி புதன் கிழமை பாராளுமன்றம் கூடியபோது ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக சபாநயகர் இந்த உத்தரவை வழங்கியுள்ளார். உறுப்பினர் தினேஷ் குனவர்தன தொடர்ச்சியாக ஒழுங்கீனமாக நடந்துகொண்டதால் அவரை சபையில் இருந்து வெளியேறுமாறு பல முறை சபாநாயகர் உத்தரவிட்டார். ஆனால் அந்த உத்தரவிற்கு இணங்க தினேஷ் குனவர்தன மறுத்தார். அதன் பின்னர் படைக்கல சேவிதரை அழைத்து அவரை வெளியேற்றுமாறு உத்தரவு வழங்கியும் படைக்கல சேவிதராலும் உறுப்பினர் தினேஷ் குணவர்தனவை வெளியே அனுப்ப முடியவில்லை.

இதனால் சபை நடவடிக்கைகள் முறையே பி.ப 1.25 மணிக்கும் 2.10 மணிக்கும் 2.40 மணிக்கும் மூன்று முறை இடைநிறுத்தப்பட வேண்டியேற்பட்டது. ஈற்றில் சபாநாயகர் கடுமையான உத்தரவாக தினேஷ் குணவர்தனவை சபையில் இருந்து வெளியேற்றுமாறு உத்தரவு வழங்கியதோடு அதற்காக சபைக்குள் பாராளுமன்ற காவல்துறை பிரிவின் பொலிஸாரும் அழைக்கப்பட்டனர். அப்போது தான் வெளியேறுவதில்லை என்றும் அவ்வாறு வெளியேற்றுவதானால் கூட்டு எதிரணியின் 53 உறுப்பினர்களையும் சேர்த்து வெளியேற்றுமாறு தினேஷ் குணவர்தனவும் அவருடன் இணைந்த ஏனைய உறுப்பினர்களும் தெரிவித்தனர். அப்போது உறுப்பினர் சபாநாயகரின் கட்டளைக்கு இணங்காததால் ஒருவார காலத்திற்கு பாராளுமன்ற அமர்வுகளுக்கு சமூகமளிக்க முடியாதவாறு தடைவிதிப்பதாக அறிவித்தார்.

இந்த அறிவிப்பை ஆட்சேபித்த பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன அவ்வாறு செய்வதாயின் உறுப்பினர்களது பெயர் கூறி அழைத்து வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன்படி ஆளும் கட்சி உறுப்பினரும் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல உறுப்பினர் தினேஷ் குனவர்தனவை ஒருவார காலத்திற்கு பாராளுமன்ற அமர்விற்கு தடைவிதிக்கும் பிரேரணையை முன்மொழிந்தார். அந்த முன்மொழிவை அதே தரப்பு உறுப்பினர் ஒருவர் வழி மொழிய பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.



பிரேரணைக்கு ஆதரவாக 85 வாக்குகளும் எதிராக 22 வாக்ககளும் கிடைத்தன. அதன்படி 63 மேலதிக வாக்குகளால் பிரேரணை நிறைவேற்றப்பட்டதால் சபாநாயகரின் உத்தரவு நிறைவேறியது. சபையில் இருந்த மூன்று உறுப்பினர்கள் வாக்களிப்பில் இருந்து தவிர்ந்து கொண்டனர். வாக்களிப்பு நடைபெற்ற சந்தர்ப்பத்தில் சபையில் 111 உறுப்பினர்கள் அளவில் இருந்துள்ளனர். இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் இவ்வாறு சபை ஒழுங்கு விதிகளை மீறும் அல்லது ஒழுங்கீனமாக நடந்துகொள்ளும் உறுப்பினர்களை சபையில் இருந்து வெளியேற்றுவதற்கு பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின்படி சபாநாயகருக்கு அதிகாரம் இருந்து வருகின்றது. குறிப்பாக 2000 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் உறுப்பினர்கள் இவ்வாறாக செயற்பட்டு சபாநாயகரின் கட்டளைக்கு இணங்காவிட்டால் அந்த உறுப்பினர் அமர்ந்திருக்கும் ஆசனத்தோடு தூக்கிச் சென்று சபைக்கு வெளியே விடுவதே சம்பிரதாயமாக இருந்து வந்திருக்கின்றது. ஆனாலும் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் பாராளுமன்றம் நவீனமயப்படுத்தலுக்குட்பட்டதோடு ஆசனங்கள் நிலத்தில் பொருத்தப்பட்டிருப்பதால் ஆசனத்தை தூக்கிச் செல்ல முடியாததால் உறுப்பினரை படைக்கல சேவிதர் அழைத்துச் சென்று வெளியே விடுவதே மரபாக மாறியிருக்கின்றது.

விமல் வீரவன்ச தற்போது ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறைவாசம் அனுபவித்தாலும் அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருவதால் சபை அமர்வு நடைபெறுகின்ற தினங்களில் பொலிஸாரின் பாதுகாப்புடன் பாராளுமன்றத்திற்கு அழைத்து வரப்படுகின்றார். கடந்த சில தினங்களாக அவரது கட்சி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வந்துள்ளார். ஆனாலும் கடந்த 08 ஆம் திகதி இந்த விடயம் முன்வைக்கப்பட்டபோது அதற்கு சபாநாயகர் தேர்தல் சட்டவிதிகளின்படி மறுப்பை தெரிவித்துள்ளார். அதன் காரணமாகவே சர்ச்சை ஏற்பட்டிருக்கின்றது.

பொதுத் தோதல் ஒன்றின் பின்னர் எந்தவொரு கட்சியும் பாராளுமன்றத்தில் தனிக் கட்சியாக இயங்க அனுமதிப்பதாயின் அந்த கட்சி பொதுத் தேர்தலில் தனிக் கட்சியாக தனியான சின்னத்தில் போட்டியிட்டு உறுப்பினர்கள் தெரிவாகி இருக்க வேண்டும். அத்துடன் அந்த தெரிவு தொடர்பாக தேர்தலின் பின்னர் தேர்தல் ஆணையாளரால் செய்யப்படுகின்ற விஷேட வர்தத்தமானி அறிவித்தலின் அடிப்படையில் தனிக்கட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். 2015 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்தில் ஆசனங்களைப் பெற்றுள்ள தனிக் கட்சிகளாக தேர்தல் ஆணையாளரால் 06 கட்சிகளே அறிவிக்கப்பட்டுள்ளன.

ஐ.தே.கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, இலங்கை தமிழ் அரசுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஈ.பி.டி. பி. கட்சி, ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் ஆகிய ஆறு கட்சிகள் மாத்திரமே தனியாக உறுப்பினர்களை பெற்றுள்ள கட்சிகளாகும். இதன்படி வீரவன்சவின் கட்சி ஐ.ம.சு.கூட்டமைப்புடன் கூட்டு சேர்ந்து போட்டியிட்டு 05 உறுப்பினர்களுடன் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தாலும் அதனை தனிக் கட்சியாக தேர்தல் ஆணையாளர் அங்கீகரிக்கவில்லை. அக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு கட்சியின் உறுப்பினர்களாவர். இந்த கூட்டமைப்பில் 11 சிறிய கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த அடிப்படையில் விமல் வீரவன்சவின் கட்சியை பாராளுமன்றத்தில் சுயாதீனமாக தனிக்கட்சியாக இயங்க அனுமதிப்பதாயின் பாராளுமன்றத்திற்குள் அக்கட்சிக்கான பல வசதிகள் வழங்கப்பட வேண்டியிருப்பதோடு கட்சித் தலைவர் என்ற அந்தஸ்தில் அக்கட்சியின் தலைவர், கட்சித் தலைவர் மாநாட்டிற்கு அழைக்கப்படுவதோடு இன்னும் பல வசதி வாய்ப்புக்களைப் பெறுகின்றார்.

இந்த நிலைமைகளை உணர்ந்தே தற்போது தடுப்புக்காவலில் உள்ள தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் தனித்து இயங்கும் உரிமையை கோரினார். ஆனால் அந்த வேண்டுகோள் இப்போது நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தில் குழப்பம் அல்லது உறுப்பினர்களின் ஒழுங்கீனமான செயற்பாடு என்பது புதிய விடயமாக நோக்க முடியாது. ஏற்கனவே 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஏ.எச்.எம். அஸ்வர் சபையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். அதற்கடுத்ததாக 1996 முதல் 2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அடிக்கடி அவர் சபையில் குறுக்கீடுகளை செய்து வந்த சந்தர்ப்பங்களில் அப்போதைய சபாநாயகராக இருந்த கே.பி ரத்நாயக்காவால் எச்சரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. அதேபோன்று அன்றைய காலகட்டத்தில் சபையில் விவாதங்களின்போது குறுக்கீடு செய்து இடையூறு ஏற்படுத்தும் உறுப்பினர்களான எதிரிவீர பிரேமரத்ன, ஆனமடுவ தொகுதி உறுப்பினர் டி.எம்.தசநாயக்கா, ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே போன்றோர் இருந்து வந்துள்ளனர்.



அவ்வாறே அண்மைக்கால வரலாற்றை எடுத்து நோக்கின் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அப்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பிரதான எதிர்க்கட்சியாக இருந்து ஐ.தே.க. உறுப்பினர்களான டாக்டர் ஜெயலத் ஜெயவர்தன, ரவி கருணாநாயக்கா உட்பட பல உறுப்பினர்கள் இடையூறு ஏற்படுத்தியதால் சபையில் குழப்பமும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் நிலையும் எற்பட்டது. 2004 ஆம் ஆண்டும் பாராளுமன்றத்திற்குள் ஏற்பட்ட கைகலப்பின்போது அன்றைய ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இரண்டு பிக்கு உறுப்பினர்களான அக்மீமன தயாரத்ன, அக்கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்த கெலன்னாவே சுமங்கள தேரர் ஆகியோர் கடுமையான முறையில் சபைக்குள் வைத்து தாக்கப்பட்டனர்.

அதன்பின்னர் நடைபெற்ற நிகழ்வொன்றில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சபைக்குள் படுத்து உறங்கிய சந்தர்ப்பமும் நிகழ்ந்திருக்கின்றது. பொதுவாக நோக்கின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளாவே பாராளுமன்றத்திற்கு மக்களால் தெரிவுசெய்து அனுப்பப்படுகின்றனர். பாராளுமன்றம் சென்றால் மக்களின் தேவைகளை முன்வைத்து அவர்களது உதிமைகளுக்காகவும் பிரச்சினைகளை முன்வைத்து அவற்றுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் குரல் எழுப்ப வேண்டிய தார்மீக பொறுப்பை பெற்றவர்களாக உள்ளனர். வெறுமனே எதற்கும் ஆமாம் போட்டுவிட்டு மௌனம் சாதிப்பவர்களாக இருந்துவிட்டு வருவதற்காக மக்கள் பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்து அனுப்பவில்லை. இந்த பொறுப்பை நிறைவேற்றும்போது பாராளுமன்ற சம்பிரதாயங்களை மீறாமலும் ஒழுக்க மாண்புகளைப் பின்பற்றியவர்களாகவும் நடந்து கொள்ளவேண்டியுள்ளனர். கடந்த காலப்பகுதியில் குறிப்பாக 1994 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வுகளை அவதானிக்கையில் பல சந்தர்பப்ங்களில் உறுப்பினர்கள் ஒழுங்கீனமாகவும், சபை அமர்வை நடத்தவிடாது இடையூறு ஏற்படுத்தும் விதமாகவும், இன்னும் சில சந்தர்ப்பங்களில் பார்வையாளர் கலரியில் பாடசாலை மாணவர்கள் சமூகமளித்திருக்கின்றார்கள் என்ற உணர்வு கூட இல்லாமல் மிகவும் மோசமான வார்த்தைகளைப் பிரயோகிக்கும் சந்தர்ப்பங்களும் பதிவாகியிருக்கின்றன.

அதன் காரணமாகவே நீண்ட வாத, விவாதங்களுக்குப் பின்னர் பாராளுமன்ற அமர்வுகளை நாட்டு மக்களும் நேரடியாக கண்டுகொள்ளும் வகையில் தேசிய தொலைக்காட்சியில் நேரடியாக ஒலிபரப்புச் செய்வதென்ற முடிவு எடுக்கப்பட்டது. இந்த தீர்மானத்தின் பின்னணி நாட்டுமக்கள் தமது நடத்தையையும் செயற்பாடுகளையும் கண்காணிக்கின்றனர் என்ற உணர்வில் பாராளுமன்றத்தில் ஒழுக்கமாண்புகளை கடைப்பிடித்து நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும் தொடர்ச்சியாக நடக்கின்ற நிகழ்வுகளை அவதானிக்கையில் அந்த இலட்சியமும் நிறைவேறாத ஒன்றாகவே இருந்து வருகின்றது.

---

# இந்தியாவின் பலம்பெரும் சக்தியாக முஸ்லிம் லீக்

தமிழ் நாட்டின் மூத்த அரசியல் வாதியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பேராசிரியர் காதர் முகைதீன் 1940 ஜனவரி 05இல் பிறந்தவர்.

தோல்வியைக் கண்டு துவளாத பேராசிரியர் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் முழு நேரப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி இயக்கம் வளர்க்க வீறு கொண்டெழுந்தார். 1980இல் தொடங்கி முஸ்லிம் மாணவர் பேரவை அமைப்பாளர், இளைஞர்அணி பொறுப்பாளர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில அமைப்புச் செயலாளர், மாநில பொதுச் செயலாளர் என தான் வகித்த பதவிகளில் எல்லாம் திறம்பட செயலாற்றினார். படிக்கும் காலம் தொட்டு பத்திரிகைகளில் ஈடுபாடுடைய பேராசிரியர், ஆரம்ப காலங்களில் ''மறுமலர்ச்சி'' பத்திரிக்கையில் எழுதினார். ''முபாரக்'' மாதம் இரு முறை ஏட்டை தொடங்கினார். 1981 முதல் 10 ஆண்டுகாலம் ''தாருல்குர்ஆன்''மாதமிருமுறை ஏட்டை நடத்தினார். இஸ்லாம் தமிழர்க்கு வந்த மதமா? சொந்தமதமா?என்றஆராய்ச்சிக் கட்டுரையை தொடர்ந்து எழுதினார். அதை அடிப்படையாகக் கொண்டே 2010 ஜூன் 2 3 முதல் 27 வரை கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் செம்மொழித் தமிழும் அரபியும் ஓர் ஒப்பாய்வுஎன்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

சிராஜுல் மில்லத் ஆ.கா.அ.அப்துல்ஸமத் 29.4.1983இல் ஆரம்பித்த மணிசுடர் நாளேட்டின் நிர்வாக ஆசிரியராக 1996இல் பொறுப்பேற்றுபின் 1999 ஏப்ரல் 27 முதல் அதன் ஆசிரியராக பணியாற்றுகிறார்.

தேசிய தலைவராக பொறுப்பேற்ற பிறகு நவமணி நாளிதழுக்காக எமது இந்திய செய்தியாளர் திருச்சி எம்.கே ஷாஹுல் ஹமீட் சிறப்பு பேட்டி கண்டார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவராக பொறுப்பேற்ற பேராசிரியர் கே.எம் காதர் மொகிதீனுக்கு ஸ்ரீலங்கா நவமணி நாளிதழின் நிர்வாகம் மற்றும் பிரதம ஆசிரியர் என்.எம் அமீன் சார்பாகவும் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நிர்வாகிகள் சார்பாகவும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

■ திருச்சி சாஹுல் ஹமீது

**இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவர் பேராசிரியர் காதர் முகைதீன் நவமணிக்கு வழங்கிய செவ்வி:**



அகில இந்திய முஸ்லிம் லீக்கினை நாட்டில் முஸ்லிம்கள் பரவலாக வாழும் இலங்கையில் ஒரு பலமான அரசியல் சக்தியாக கட்டியெழுப்புவதற்கு எனது பதவி காலத்தில் முன்னுரிமையையும், முக்கியத்துவமும் அளிப்பேன் என அகில இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் புதிய தலைவர் பேராசிரிர் கே.எம்.காதர் முகைதீன் தெரிவித்தார். இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவராக இருந்த ஈ.அகமத்தின் மறைவியடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு தெரிவான பேராசிரியர் காதர் முகைதீன் நவமணிக்கு அளித்த பேட்டியிலேயே தெரிவித்தார்.

**கேள்வி :** தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு உங்களுடைய செயல்பாடுகள் எப்படி இருக்கும்?

**பதில் :** தலைவராக பொறுப்பேற்ற பிறகு கட்சியை பலப்படுத்துவது குறித்து வட மாநிலங்களிலும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வலுவாக காலூன்றும் வகையில் டெல்லியில் நிரந்தர அலுவலகம் அமைக்கப்படும் என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் கூறினார். அலுவலகம் தொடங்குவது தொடர்பாகவும், இதர பிரச்சனைகள் குறித்து விவாதிக்கவும் புதுடெல்லியில் மார்ச் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தேசிய அளவிலான நிர்வாகிகள் கூட்டம் நடைபெறும். அந்த கூட்டத்தில் கட்சியை பலப்படுத்துவதற்கான ஆயத்தப் பணியை மேற்கொள்ள இருக்கிறோம். உ.பி, பீகார், ஜார்கண்ட், டெல்லி, அரியானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் கட்சியை பலப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டெல்லியில் கட்சியை தீவிரப்படுத்த முதற் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது தென் மாநிலங்கள் மற்றும், மகாராஷ்டிரத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பிரபலமாக உள்ளது. இதே போன்று மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப்பிரதேசம், ஹரியானா, ஜார்க்கண்ட் மற்றும் புதுடெல்லி உள்ளிட்ட வட மாநிலங்களில் வலுவாக காலூன்றும் வகையில் டெல்லி யில் புதிய அலுவலகம் தொடங்கப்பட உள்ளது. இதற்காக புத்துணர்வு, விடாமுயற்சி மற்றும் ஈடுபாடு ஆகியவற்றை மக்கள் மத்தியில் உருவாக்கும் வகையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செயல்படும். டெல்லியில் நடைபெறும் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

**கேள்வி :** தமிழகத்தைப் போன்று மற்ற மாநிலங்களில் கட்சியைப் பலப்படுத்த எந்த மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறீர்கள்?

**பதில் :** தமிழகத்தைப் போன்று ஏற்கனவே ஒரு சில மாநிலங்களில் கட்சி அமைப்பு ரீதியாக செயல்பட்டு வருகிறது. அமைப்பு ரீதியாக இல்லாத இடங்களில் கட்சியை பலப் படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அரசியல் அங்கீகாரம் கிடைப்பதற்கு பல்வேறு கட்ட முயற்சிகள் எடுத்தப் பிறகு தான் அங்கீகாரம் தேர்தல் கமிஷனால் வழங்கப்பட்டது. இந்த அங்கீகாரம் பெறுவதற்கு நிறைய இடையூறுகள் இருந்தன. அதெல்லாம் தாண்டி நானும் மறைந்த தலைவர் இ.அஹமது சாகிப் அவர்களும் முயற்சி செய்ததன் பேரிலே அல்லாஹ்வின் கிருபையால் எங்களுக்கு வெற்றி கிடைத்தது. இஸ்லாத்தை பொறுத்த வரை பல ஒழுக்கங்களை கற்றுக் கொடுத்துள்ளது. அதன் அடிப்படையிலேயே நாங்கள் கட்சியை வழிநடத்தி செல்கிறோம். கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள் கட்சியை எந்த அளவிற்கு கட்டி காத்தார்களோ, அதே போன்று எந்த பிரச்சனையில்லாமல், இடையூறு இல்லாமல் கட்சியை வளர்க்க முயற்சி செய்வேன். இஸ்லாம் எப்படி நடக்க வேண்டும், உண்பது, உடை உடுத்துவது, போன்ற அனைத்தையும் இஸ்லாத்தின் வழியிலே செய்கிறோம். அதையே பிறர்க்கும் வழிகாட்டுகிறோம்.

**கேள்வி :** வருகின்ற உள்ளாட்சி மன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் இடம் பெறுவீர்களா?

**பதில் :** நாங்கள் தொடர்ந்து திமுக கூட்டணியில் தான் இருக்கிறோம். எப்போதும் திமுக கூட்டணியில் தான் இருப்போம். உள்ளாட்சி மன்ற தேர்தல் தேதி அறிவித்த பிறகு திமுக உடன் கலந்து பேசி எந்த எந்த இடங்களில் என்று அப்போது பேசி முடிவெடுப்போம். சிறுபான்மையினர் உரிமைகள் கலாசாரம் மற்றும் மொழிவாரி தனித்தன்மைகளுக்கு நமது அரசியல் அமைப்பு சட்டம் உத்தரவாதம் அளிக்கிறது. இதற்கு முரணாக மத்திய பா.ஜ.க அரசு பொது சிவில் சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கிறது. மற்றும் ஷரீஅத் சட்டம் தொடர்பாக தவறான பிரச்சாரத்தையும் மேற்கொண்டு வருகிறது.

**கேள்வி :** தேசிய தலைவராக பொறுப்பேற்ற பிறகு நீங்கள் வகித்த மாநில தலைவர் பதவி வேற யாருக்காவது வழங்கப்படுமா?

**பதில் :** காயிதே மில்லத் தலைவராக இருந்த காலத்தில் அவர் தேசிய தலைவராகவும், மாநில தலைவராகவும் பொறுப்பு வகித்தார். அதே போன்று அந்த வாய்ப்பு எனக்கும் கிடைத்துள்ளது. இப்போதைக்கு மாநில தலைவர் பதவியை யாருக்கும் வழங்கப் போவதில்லை.

காலப்போக்கில் மாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கட்சியின் பொதுச் செயலாளராக இருக்க கூடிய சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம் முஹம்மது அபூபக்கர் சிறப்பாக கட்சி பணி ஆற்றி வருகிறார். அவருடைய பணி பாராட்டத்தக்கதாகும். கட்சிக்கு பொதுச் செயலாளர் பணிக்கு பொருத்தமானவர்.

**கேள்வி :** கட்சியின் மாநாடு பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன?

**பதில் :** கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறுவன நாள் விழா சிறுபான்மையினர் உரிமை பாதுகாப்பு மாநில மாநாடு நெல்லையில் மார்ச் 10,11 ஆகிய இரு நாட்கள் நடைபெறுகின்றன. முதல் நாள் மாநாட்டில் கட்சியின் சாதனை குறித்த கண்காட்சி நடைபெறுகிறது. இரண்டாவது நாள் மாநாட்டில் சமூக நல்லிணக்கத்திற்காக பாடுபடும். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ அறிஞர்களுக்கு சிராஜ் மில்லத் விருது வழங்கப்படுகிறது. இந்து மதத்தை சேர்ந்த நெல்லை கண்ணன், கிறிஸ்துவ மதத்தை சேர்ந்த அமுதன் அடிகளார், முஸ்லிம் மதத்தை சேர்ந்த பேராசிரியர் நாகூர் ஒலி என்ற முஹம்மது நாரி ஆகியோருக்கும், அல்லமா அமானி ஹஜ்ரத் விருது ஈரோடு மவ்லவி உமர் பாருக் தாவூதிக்கும், சிஹாப் தங்கல் விருது வளுத்தூர் டாக்டர் எம்.கே முஹம்மது இக்பாலுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த விருதின் போது தலா ஐம்பதானாயிரம் வீதமும், கேடயமும் வழங்கப்படுகிறது.

கட்சியில் 70ஆண்டுகளாக பணி புரிந்து சேவை ஆற்றிய மவ்லவி சலாவுதீன் ரியாஜி, மதுரை குலாம் ரசூல், திண்டுக்கல் அப்துல் ரஹ்மான், மேட்டுப்பாளையம் முஹம்மது குட்டி, லால்பேட்டை அப்துல் ஜப்பார்,வளுத்தூர் பீர் முஹம்மது,ஹெச். அபுல் ஹசன்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## படுபிட்டியில் ரிபாய் மஜ்லிஸ்

(எச்.எம்.மன்சூர்-கண்டி)

உடுநுவர-படுபிட்டிக் கிராமத்தில் லஜ்னதுர் ரிபாயி சபையினரால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் ரிபாய் மஜ்லிஸ் (149-ஆவது வருட மஜ்லிஸ்) சனி,ஞாயிறு (11,12) இரு தினங்களிலும் நடைபெறவுள்ளது.

தற்போது இலங்கை வந்துள்ள சன்மார்க்கப் பெரியார் செய்கு செய்யது நல்ல கோயா தங்கள் (காதிரிய்யி-ரிபாஇய்யி) தலைமையில் நடைபெறவுள்ள மஜ்லிஸில் அஸ்ஸெய்யது அஹ்மது கபீருர் ரிபாயி நாயகத்தின் புகழ் பாடும் மௌலித் ரிபாய் ராத்திப் மற்றும் உலமாக்களின் உபந்நியாசங்களும் இடம்பெறவுள்ளது. விஷேட பயான் உரையை மௌலவி அஸ்ஸெய்யது ஸாலிஹ் மௌலானா (முர்ஷி) நிகழ்த்தவுள்ளார்.

## பொதுக்கூட்டம்

(எஸ்.அஷ்ரப்கான், யூ.கே.காலித்தீன்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் எம்.ரீ. ஹசன் அலி கலந்து கொள்ளும் 2 ஆவது பொதுக் கூட்டம் (10) வெள்ளிக் கிழமை மாலை 5 மணியளவில் பொத்துவில் 'மைலன் பழைய தியேட்டருக்கு முன்னால் நடைபெறவுள்ளது.

பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உதவித் தவிசாளர் ஏ.எம். எம். தாஜுதீன் தலைமையில் நடைபெறும் இப்பொதுக் கூட்டத்தில், மு.கா.வின் உயர் பீட உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எம். அன்ஸில் (அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்), எம்.ஏ.எம். தாஹிர் (நிந்தவூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர்) ஆகியோர்கள் உட்பட உயர் பீட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கல்முனையில் இலவச ஊடகக் கருத்தரங்கு

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

அம்பாறை மாவட்ட சமூகசேவை அமைப்பான அட்சோ (ADSSO) நிறுவனம் நடத்தும் இலவச ஊடகச் செயலமர்வு 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழைமை காலை 09.00 மணி முதல் நண்பகல் 12 மணிவரை கல்முனை ஆஸாத் பிளாஸா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கலந்து கொள்ளும் முகமாக ஏற்கனவே தங்களது பெயர்களைப் பதிவு செய்தவர்களுக்கு இது பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமைப்பின் செயலாளர் எம்.பி.எம். ரின்ஸான் நவமணிக்குத் தெரிவித்தார். ஊடகத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியல் கல்லூரி பயிலுனர்கள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளும் இச்செயலமர்வில் இதுவரை தமது பெயர்களைப் பதிவுசெய்யத் தவறியவர்கள் 0777-666 366, 077-209 35 44 ஆகிய தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு பெயர்களைப் பதிவு செய்யமுடியும் என்றும் தெரிவித்தார். இச்செயலமர்வைத் தொடர்ந்து இலவச பாடநெறி நடத்தபபட்டு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படவுள்மை குறிப்பிடத் தக்கது.

## அரனாயக்க பிரதேசங்களில் டெங்கு பரவும் அபாயம்

(அரனாயக்க பாரா தாஹிர்)

அரனாயக்க- திப்பிடிய, வில்பொலை பிரதேசத்தில் டெங்கு பரவுவதற்கான அவதானம் இருப்பதாகவும், சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளும்படியும் வில்பொலை கிராம உத்தியோகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

டெங்கு பரவும் அவதானம் உள்ள இடங்களை பரிசோதிப்பதற்கான மேற்படி பிரதேசங்களுக்கு இன்றும் நாளை மற்றும் நாளை மறுநாள் சுகாதார அதிகாரிகள் வருகைதரவுள்ளதாகவும் கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகள் பரிசோதிக்கும்போது, டெங்கு பரவுவதற்கு ஏதுவான விடயங்கள் சுற்றுச் சூழலில் கண்டெடுக்கப்படும்போது தண்டப்பணம் மற்றும் வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ளும்படியும் அவர் எச்சரித்தார்.

# புதிய அரசியலமைப்பு நகர்வு குறித்து சிறுபான்மை விழிப்புற வேண்டும்

## கிழக்கு முதல்வர் நஸீர் அஹமட்



புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் ஒவ்வொரு நகர்வு குறித்தும் சிறுபான்மை சமூகங்கள் விழிப்பாக இருக்கவேண்டுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்,

புதிய அரசியலமைப்பொன்றின் ஊடாக சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்புக்கு ஏதுவான காரணிகள் குறித்து மக்களுக்குரிய தெளிவை வழங்க வேண்டியது அரசியல் கட்சிகளினதும் ஊடகங்களினதும் பிரதான கடமையாகும் என கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புதிய அரசியலமைப்பு சீர்திருத்த முஸ்தீபுகள் குறித்து வினவியபோதே கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இதனைக் கூறினார். அத்துடன் புதிய எல்லை நிர்ணய முறைமை தொடர்பில் முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் எனவும் இதனூடாக இரு சமூகங்களிடையே இலகுவாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை பெருப்பித்து பிரித்தாளும் தந்திரத்தை உபயோகப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை நாம் ஒருபோதும் வழங்கக் கூடாது எனவும் கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இரு சிறுபான்மை சமூகங்களுக்கும் அநீதி இழைக்கப்படாத வகையிலான அரசியல் தீர்வொன்றை பெற்றுக்கொள்வதற்கு இரு தரப்புக்களும் வெளிப்படைத்தன்மையுடன் பரஸ்பர முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும், நாட்டில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் பல்வேறு அரசியல் நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் பல இழப்புக்களை சந்தித்துள்ளதால் இனிமேலும் அவர்களுக்கு இழப்புக்கள் ஏற்படா வண்ணமான பொறிமுறையொன்றையே இரு சமூகங்களும் வேண்டி நிற்கின்றன.

கிழக்கில் இன்று பெரும்பாலான பொதுமக்களின் காணிகள் இன்னும் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளாகவே உள்ளதுடன் அவற்றில் மக்களின் பாரம்பரியக் காணிகளும் அடங்குவதால் குறித்த காணிகள் விடுவிக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயத்தினால் சிறுபான்மை மக்களுக்கு எந்தளவு தூரத்துக்கு சாதகமான சூழ்நிலை உள்ளது என்பது தொடர்பில் கேள்விகள் உள்ளன.

இந்த தீர்மானம் மிக்க காலகட்டத்தில் உணர்ச்சி மிக்க உரைகளும், வீர வசனங்களும் சிறுபான்மை சமூகங்களின் உறுதியான அரசியல் இருப்புக்கு துணை புரியாது என்பதை சிறுபான்மை சமூகங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பேரினவாத சிந்தனைகளும் பெரும்பான்மை அடக்குமுறை கலாசாரமும் புரையோடிப் போயுள்ள இந்த நாட்டில் சிறுபான்மை சமூகத்துக்கான நியாயமான அரசியல் தீர்வு என்பது சூட்சுமம் மிக்க இராஜதந்திரமான மற்றும் சாணக்கியமான நகர்வுகள் மூலமே சாத்தியப்படும் என்பதில் சிறுபான்மை சமூகங்கள் தெளிவுபெற வேண்டும். இந்நிலையில் தமிழ் சமூகம் உத்தேச அரசியலமைப்பில் தமது கோரிக்கைகள் குறித்து தெ ளிவாக உள்ள நிலையில் முஸ்லிம் அரசியற்கட்சிகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமே உத்தேச அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் தமது பிரதிநிதிகளுக்கு செயலமர்வுகளை நடத்தியுள்ளது,

இதனூடாக பல தரப்பட்ட துறை சார் நிபுணர்களால் மக்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கு யாப்பு சார் நடவடிக்கைகள் தொடர்பில் போதிய தெளிவுகளை வழங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமையை சுட்டிக்காட்ட வேண்டும்,

எனவே இந்த தீர்மானம் மிக்க தருணத்தில் உத்தேச தேர்தல் முறைமை திருத்தம் மற்றும் அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக சிறுபான்மை மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்பதுடன் இந்த விடயம் தொடர்பில் பொறுப்புடன் நடந்து கொள்ளும் அரசியல் தலைமைகள் யார் என்பதையும் மக்கள் அடையாளங் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கும் என கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கூறினார்.

## மள்வானையிலிருந்து கல்வி நிர்வாகசேவைக்கு பாஸில் தெரிவு



மள்வானையைச் சேர்ந்த ஏ.எச்.எம். பாஸில் இலங்கை கல்வி நிர்வாகசேவை திறந்த போட்டிப்பரீட்சையில் சித்தி பெற்று கல்வி நிர்வாகச் சேவைக்கு நியமனம் பெற்றுள்ளார். அரச உயர்நிலை பதவிகளுக்காக இளம் பட்டதாரிகளை ஆட்சேர்க்க இடம்பெறும் திறந்த போட்டிப்பரீட்சையில் இவர், சித்திபெற்று தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மல்வானையிலிருந்து இப்பதவிக்கு தெரிவான முதலாமவர் இவராவார்.

மள்வானை அல்முபாறக் கல்லூரியில் ஆரம்பக்கல்வி பெற்ற இவர் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று இரண்டாம் நிலைக்கல்வியை கொழும்பு இசிபத்தன மற்றும் டி.எஸ். சேனாநாயக்க கல்லூரியில் கற்றார்.

கணனி, விஞ்ஞான, மற்றும் பொறியியல் பட்டதாரியான இவர் தற்போது சட்டக்கல்லூரியில் சட்டத்துறையில் 2ஆம் ஆண்டு மாணவனாகவும் கல்வி பயின்று வருகின்றார். இவரது சகோதரன் ஏ.எச்.எம்.பஸ்லி சட்டத்தரணி பரீட்சையில் சித்தி பெற்று பயிலுனராக கடமை புரிகிறார்.

இவர் நிதி அமைச்சின் தகவல் பணிப் பாளராகக் கடமையாற்றும் மொஹமட் அலிஹஸன் பாத்திமா சிஹாரா தம்பதிகளின் மூத்த புதல்வராவார். இவர் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் நியமனம் பெறுகிறார்.

## பொலன்னறுவை பாடசாலைகளுக்கு கணனி போதனா ஆசிரியர்கள்

(பொலன்னறுவை ஏ.றபீக்)

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பல பாடசாலைகளில் கணனி தகவல் தொழில்நுட்ப நிலையங்களில் கடமையாற்றுவதற்கான ஆசிரியர்களுக்கு விஷேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

க.பொ.த உயர்தரத்தில் கணனி தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக கற்பிக்கப்படுவதால் பயிற்சி வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கணனி தகவல் தொழில்நுட்ப பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றன.

தமன்கடுவ, திம்புளாகல, மெதிரிகிரிய, லங்காபுர ஹிங்குராங்கொட, எலஹர ஆகிய கல்வி வலயங்கள் தோறும் பல பாடசாலைகளில் கணனி தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான விஷே பயிற்சிகள் கட்டம் கட்டமாக வழங்கப்படுகின்றன.



சர்வதேச மகளிர் தினத்தை (8) மனித அபிவிருத்தி தாபனமும் வேள்வி பெண்கள் ஒத்துழைப்பு முன்னனியும் இணைந்து கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் நடாத்தியது.

இதில் தேர்தல் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் 25 வீதம் பெண் பிரதிநிதித்துவ ஒதுக்கீடு மற்றும் சட்ட ஏற்பாடுகள் பற்றி உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

(கல்முனை எம்.ஐ.சம்சுதீன்)

**மணமகள் தேவை**

முஸ்லிம் பெற்றோர், தகுந்த காரணங்களுக்காக பஸ்ஹ் முறையில் விவாகரத்துப் பெற்ற நான்கரை வயது ஆண் குழந்தையுள்ள பொது நிறம், 29 வயது 5'x2" மும்மொழிகளிலும் பரிச்சயம் உள்ள உயர்தரம் கற்ற தமது மகளுக்கு மார்க்கப் பற்றுள்ள படித்த மணமகனை எதிர்பார்க்கின்றனர். மத்திய மாகாணத்தில் வீடும் நகையும் கொடுக்கப்படும். துணைவியை இழந்தோரும் விவாகரத்துப் பெற்றோரும் விண்ணப்பிக்கலாம்.

Phone : 077 - 8900429

**இலங்கை பைத்துல்மால் நிதியம்**

CEYLON BAITHULMAL FUND (INC.) Estd. 1967 IN THE NAME OF ALLAH

**பல்கலைக்கழக புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

கீழே குறிப்பிட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

- ஸகாத் பெற தகுதியுள்ள வறிய முஸ்லிம் குடும்பம்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்.
- இலங்கை அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில் தற்போது முதலாம் ஆண்டில் கல்வி கற்பவர்கள்.

விண்ணப்பப் படிவங்களை 2017 ஏப்ரல் 10ஆம் திகதி வரை பைத்துல்மால் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையை அனுப்பி தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2017 ஏப்ரல் 30 ஆம்** திகதிக்கு முன்னர் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பல்கலைக்கழக புலமைப் பரிசில்'' எனக் குறிப்பிடவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
இலங்கை பைத்துல்மால் நிதியம்,
44A, ஹேக் வீதி, பம்பலபிட்டிய, கொழும்பு-04.

**Ceylon Baithulmal Fund,**
44A, Haig Road, Bambalapitiya, Colombo - 04

**புனித உம்றா**

மார்ச் / ஏப்ரல் உம்றா

இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் மார்ச் 23ம் (March 23rd ) திகதி குழு பயணம்.

April விடுமுறையில் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் ஏப்ரல் 06ம் | 11ம் | 13ம் | 20ம் | 27ம் திகதிகளில் குழு பயணம்.

நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி, நிறைந்த சேவை, நேர்த்தியான வழிகாட்டல் என சொல்வதை செய்யும், செய்வதை சொல்லும் எம்மோடு உம்றா பயணிக்க இப்பொழுதே பதிவு செய்து கொள்ளுங்கள்.

இறுதி நேர சிரமத்திலிருந்து விடுபட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

அல்ஹாஜ் அமீருல் அன்வர் - 0777667152
அல்ஹாஜ் சையாப் அன்வர் - 0775046995

| | |
|---|---|
| அல்ஹாஜ் ஜாபிர் (பாணந்துறை) | - 0772928093 |
| அல்ஹாஜ் அலியார் (காத்தான்குடி) | - 0779598375 |
| அல்ஹாஜ் சபீக் (ஓட்டமாவடி) | - 0778020300 |
| அல்ஹாஜ் முத்தலிப் ( பதுளை) | - 0777947008 |
| அஸ்ஸெய்யது பஹுல்டீன் மௌலானா (நீர்கொழும்பு) | - 0773110589 |
| அல்ஹாஜ் மவ்லவி அப்துல் காதர் (சம்மாந்துறை) | - 0713331026 |
| அல்ஹாஜ் ஹனீபா (தோப்பூர்) | - 0771971646 |
| எம்.எம்.ஏ.றஹ்மி மாஸ்டர் (மாதறை) | - 0773732124 |
| அல்ஹாஜ் ஹபீல் (வெலிகம) | - 0776627793 |

Safra Travels & Tours (PVT) Ltd
FLG -4 Dias Place,Gunasinghapura,Colombo-11.
Tel : (0094)0112-335699 / 0112335043 Fax : (0094) 0112-335043
E-Mail:- Safra_travels@yahoo.com
"Our Service includes AIR-TICKETING | TOURS | HOTELS | VISA | TRANSPORT Specialist in Hajj & Umrah Tours".

**சேப்வே ட்ரவல்ஸ்**
**2017 புனித உம்றா**

29 வருட ஹஜ் உம்றா சேவையில் சேப்வே ட்ரவல்ஸ் மூலம் பயணித்த ஹாஜிகளைக்கேட்டால் புரியும் சேப்வே ட்ரவல்ஸின் சேவைகள்...

இன்ஷா அல்லாஹ் எமது உம்றா குழு மார்ச், ஏப்ரலில் பயணிக்க அனைத்து ஏற்பாடுகளையும் மிகச்சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது.

எமது உம்றா குழு: March. 14ம், 29ம் திகதி புறப்படும்.

ஏப்ரல் விடுமுறையில் ஏப்ரல் 06ம், 11ம், 12ம், 13ம் 14ம், 15ம், 16ம் திகதிகளிலும் பயணம்

மக்கா, மதீனாவில் நட்கத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி, விஷேட உணவு, சொகுசு போக்குவரத்து, அனுபவமுள்ள வழிகாட்டி உடபட அனேக வசதிகள். சேப்வே ட்ரவல்ஸ் மூலம் உம்றா பயணிக்க விரும்புவோர் இறுதி நேர சிரமத்திலிருந்து விடுபட இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அழையுங்கள்:

Alhaj M.R.M. Farook J.P. - 0777660637
Alhaj Fazrin Farook - 0777444333
IATA ACCREDITED AGENT

அல்ஹாஜ் மவ்லவி தல்ஹா (பாரி) - 0777516786
கொழும்பு பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம்
அல்ஹாஜ் மவ்லவி சலாஹுதீன் (பாரி) - பலாங்கொடை - 0776165768
அல்ஹாஜ் மவ்லவி அப்துல் அஸீஸ் (பலாஹி) வாழச்சேனை - 0777922831

SAFEWAY TRAVELS & TOURS (PVT) LTD.
No:8A, Vajira Road, Bambalapitiya, Colombo - 04. Tel:0115 238528 -32
E mail : info@safewaytt.com WEB :www.safewaytravelsandtours.com

SAFEWAY TRAVELS காரியாலயம் # 228, Grandpass, Colombo - 14 இலிருந்து No:8A, Vajira Road, Bambalapitiya, Colombo - 04. இடம்மாற்றப்பட்டுள்ளது

நவமணி NAVAMANI WEEKLY
தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
12TH MARCH 2017 - SUNDAY

# அரச தொழில் வாய்ப்பு பதவி உயர்வுகளில் இன விகிதாசாரம் பேணப்படுமா?

அரசாங்க நியமனங்கள், பதவி உயர்வுகளில் முஸ்லிம் சமூகம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவது குறித்து கடந்த பல வருடங்களாகப் பேசப்பட்டு வந்த போதும் இதுவரை அது தொடர்பாக ஆக்கபூர்வமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இன்று அரச துறையில் மூன்று சதவீதத்திற்கும் குறைந்த முஸ்லிம்களே இருந்து வருகிறார்கள்.

ஆசிரியர் சேவை தவிர்ந்த எந்த ஒரு துறையிலும் முஸ்லிம்கள் மிகச்சிறிய எண்ணிக்கையினரே இருக்கிறார்கள். சில அலுவலகங்களில் ஒருவர், இருவரே இருக்கிறார்கள். அமைச்சர்கள் வழங்கும் நியமனங்களில் கூட சிறுபான்மையினர்கள் உள்வாங்கப்படுவதில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அறிமுகப்படுத்திய அரச நியமனங்களில் விகிதாசார முறை காரணமாக ஒரு சில வருடங்கள் தமிழ், முஸ்லிம் சமூகங்களது விகிதாசார அடிப்படையில் தொழில் வழங்கப்பட்டன. பின்பு சிறுபான்மையினர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கொன்றின் பின் அந்த வாய்ப்பு பறிபோனது.

நல்லாட்சி அரசில் கூட நியமனம் பதவி உயர்வுகளில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் புறக்கணிப்பு தொடர்கிறது.

நியமனங்களில் மட்டுமன்றி. பதவி உயர்வுகளிலும் முஸ்லிம்களுக்கு புறக்கணிப்பே நிகழ்கின்றது. இலங்கை நிர்வாகச் சேவையில் கூட சேவை மூப்புள்ள பல முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்படாதுள்ளது.

இலங்கையில் ஒரே ஒரு முஸ்லிம் அதிகாரியே அமைச்சின் செயலாளராக இருக்கிறார்.

திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகளில் கூட ஒரு முஸ்லிம் பிரதானியாக இல்லை. அரச நியமனம், பதவி உயர்வுகளில் தமிழ், முஸ்லிம் மக்களது விகிதாசாரத்திற்கு ஏற்ப நியமனங்களைச் செய்வதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து குறைந்த பட்சம் இன விகிதாசாரப்படியேனும் நியமனங்களை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

நாட்டில் பெருந்தொகையான பட்டதாரிகள் வேலையில்லாதிருக்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தில் ஆகக் கூடுதலான பட்டதாரிகள் வேலையற்று இருக்கிறார்கள். கடந்த இருவார காலமாக இவர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களது பிரச்சினை குறித்தும் விசேட அவதானஞ்செலுத்த வேண்டும்.

நாட்டுக்குத் தேவையான சந்தையில் விலைபோகக் கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதற்கு நமது பல்கலைக்கழகங்களது கவனம் ஈர்க்கப்படுமாயின் பட்டதாரிகள் வேலை தேடிப் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்படாது.

---

# யார் இந்த இலங்கை முஸ்லிம்கள்?

VI





லண்டனிலிருந்து
இர்பான் இக்பால்

Galle Trilingual Inscription நமது உரைத்தொடரிலும் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

தமிழில் காலி மும்மொழி கல்வெட்டு என அறியப்படும் இக்கல்வெட்டு கடந்த வார உரையில் பார்த்ததற்கிணங்க எனும் செங் ஹே சீனக் கடலோடியால் இந்நாட்டில் வாழும் மூவின மக்களுக்கும் தனது இலங்கை விஜயம் நன்நோக்கிலானது என்பதைத் தெரியப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டது.

பல் சமூகங்கள் வாழும் இந்நாட்டில் முஸ்லிம் பாரம்பரியம் பற்றிப் பேசும் போது சில வேளைகளில் நாம் பெரும்பாலும் தமிழ் மொழியைப் பேச்சு மொழியாகக் கொண்டிருப்பதால் அதன் பின்னணியில் வணிக நோக்குடன் வந்த அரேபியர்கள் இங்கு வந்து தமிழ் பெண்களைத் திருமணம் செய்ததனாலேயே இச்சமூகம் உருவானதெனவும் ஆதலால் முஸ்லிம்கள் அல்லது சோனகர்கள் எனும் தனியொரு இனம் இந்நாட்டில் இல்லையெனவும் பின்நாளில் ஆங்கிலேய சட்டசபைகளில் பொன் இராமநாதன் போன்றோர் வாதாடி எமது இனத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்க முனைந்தனர்.

நமது உரையில் பார்த்து வந்ததற்கிணங்க சோனகர் என்றழைக்கப்பட்ட இனமும் அவர்களுடனான ஹம்போயாக்களும் மற்றும் ஏலவே இப்பூமியில் குடியிருந்த ஓரிறைக்கொள்கையாளர்களின் ஈர்ப்பின் தொடர்ச்சியில் செங்ஹே கொண்டு வந்த கல்வெட்டை இங்கு முக்கிய ஆதாரமாகக் காண்கிறேன்.

காரணம், அந்தக் கல்வெட்டு மும்மொழிகளில் எழுதப்பட்டிருந்தது மாத்திரமன்றி குறிப்பாக மூன்று சமூகங்களையும் அடையாளப்படுத்தி எழுதப்பட்ட விடயங்களாக இருக்கிறது.

இக்கல்வெட்டானது சீன மொழியிலே பௌத்தர்களையும், தமிழ் மொழியில் சைவர்களையும் முஸ்லிம்களை 'பாரசீக' மொழியிலும் அணுகியுள்ளது.

ஏலவே இரு தடவைகள் வந்து இலங்கை மன்னர்களின் மனதை வெல்ல முடியாது விரட்டியடிக்கப்பட்ட சென்ஹே இந்நாட்டின் சமூகங்களை நன்கு புரிந்து கொண்டு மூன்று சமூகங்களுக்கும் புரியும் வகையில் அவரவருக்கு தமது நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள அன்பளிப்புகளை வழங்கிய விடயங்களே அக்கல்வெட்டில் பதிவாகியுள்ளது.

அந்த வகையில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்களிடம் சென்ஹே போன்ற உலகின் முக்கிய கடலோடி ஒருவர் தமிழரல்லாத வேறு மொழியில் செய்தி சொல்லியிருக்கிறார் என்பது மாத்திரமன்றி, அதுவும் பாரசீகத்தில் சொல்லியிருக்கிறார் என்பதை ஆற அமர அலசும் போது ஹம்போயாக்களின் அல்லது ஹம்பயாக்கள் என்று முற்காலத்தில் அறியப்பட்ட சமூகமும் பூரணப்படுத்தப்பட்ட இஸ்லாம் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பின் முஸ்லிம்களாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக அமைகிறது.

இதன் அடிப்படையில், அரேபியர்கள் தனியாக வந்தார்கள், தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்தார்கள் என்ற அடிப்படை வாதம் நிராகரிக்கப்படுகிறது.

ஆயினும், அவ்வாறு தமிழ் பேசிய சைவ மதத்தைப் பின்பற்றியோர் முஸ்லிம்களாக மாறாமலும் இல்லை. வரலாற்றில் ஒரு கட்டத்தில் முக்குவர் குல சமூகம் பெருமளவில்; முஸ்லிம்களானது குறித்த பதிவுகளும் உண்டு.

இன்றும் புத்தளத்தில் பரந்து வாழும் முக்குவர் குலத்தைச் சேர்ந்தோர் பற்றிய வாத விவாதங்கள் நிறையவே உண்டு. பொன் இராமநாதன் போன்றோர் அவர்கள் தமிழர்களே என நிரூபிக்க முயற்சிக்கும் அதேவேளை முத்துக்குளிக்கும் சமூகத்தினரே இவ்வாறு அறியப்பட்டதாகவும் அவர்களின் திராவிட தொடர்புகள் கேரளாவிலிருந்து வந்ததென்று கூறுவோரும் உண்டு.

எது எவ்வாறாயினும், ஒரு காலத்தில் சைவ நாயனார்களை வழிபட்ட சமூகங்கள் பின்நாளில் முஸ்லிம்களான வரலாறும் உண்டென்பது இங்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதொன்று.

எனினும், சென்ஹே போன்ற ஒரு முக்கிய வரலாற்றுப் பிரமுகரால் இலங்கையின் முஸ்லிம் சமூகம் 15ம் நூற்றாண்டில் கூட பாரசீக மொழியால் விளிக்கப்பட்டிருக்கின்றமையை உதாசீனம் செய்து வரலாறு நிறுவப்பட முடியாது.

ஹம்பயாக்கள் என நாளடைவில் மருவியிருக்கக் கூடிய சொல் ஹம்போயாக்களைக் குறிக்கும் அதே வேளை கி.மு 300 அளவிலேயே ஹம்போயாகம எனும் குடியிருப்பை உருவாக்கி வாழ்ந்த ஹம்போயாக்களின் பின்னணி பாரசீகத்திலிருந்து உருவானது என பண்டைய இந்திய வரலாற்றிசிரியர்கள் எடுத்தியம்புகிறார்கள்.

கி.பி 15ம் நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம்கள் ஒட்டு மொத்தமாகவோ அல்லது ஒரு பகுதியினரோ பாரசீக மொழி கொண்டு விளிக்கப்பட்டிருக்கின்றமையானது இந்த வரலாற்றை நியாயப்படுத்துகிறது.

எனவே கி.பி. 8ம் நூற்றாண்டு அரேபியர்கள் வந்தார்கள், வந்ததும் இங்கிருந்த தமிழ்ப் பெண்களை மணந்தார்கள், அதன் மூலம் தம் சந்ததியினருக்குத் தமிழைத் தாய் மொழியாகத் தந்தார்கள் எனும் வாதம் இங்கே வலுவற்றதாக இருக்கிறது.

வியக்குமளவுக்கான இன்னொரு தகவல் இருக்கிறது, அதுதான் Zheng He வுக்கு Hajji Mahmud Shamsuddin (ஹாஜி மஹ்மூத் ஷம்சுதீன்) என்று இன்னொரு பெயரும் இருப்பதாகும்.

இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம் குறித்து பேசப்படும் இவ்விடத்தில் Zheng He யின்; இலங்கை வரவும், உலக அறிவும் மற்றும் அவர் சார்ந்த வேறு சில விடயங்களையும் ஓரளவு அலசுவதும் தேவையாக இருப்பதனால் அது குறித்தும் சில மேலதிக விளக்கங்களை இணைத்துக்கொள்ள விளைகிறேன்.

அதில் குறிப்பாக Zheng He யின் இலங்கை வாழ் முஸ்லிம்களை அணுகுவதற்கு அதுவும் 15ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எதற்காக பாரசீக மொழியைக் கையாண்டார் என்பது ஆராய்வுக்குரியதாகும்.

அடிப்படையில் இஸ்லாமியர்களாகவே பண்டைய காலந்தொட்டு அறியப்படும் சீனாவின் ஏதடி பழங்குடி இனத்தனவராக அறியப்படும் சென்ஹேயைப் பொறுத்தவரை அன்றைய காலத்திலேயே கிழக்கு ஆபிரிக்கா வரையான கடல் பிராயணத்தில் தேர்ச்சி பெற்றவராகவும் , ஆசியா, தெற்காசியா முதல் ஆபிரிக்கா வரையிலான மக்கள் மற்றும் அங்கு காணப்படும் மதங்கள், வழி முறை கள் தொடர்பான போதுமான அறிவைப் பெற்றவராகவும் இவர் இருந்திருப்பதை வரலாறு நமக்கு எடுத்தியம்புகிறது.

அப்பேற்பட்ட ஒரு மனிதருக்கு நிச்சயமாக இலங்கை வாழ் முஸ்லிம்கள் மற்றும் அவர்களது தொடர்புகள், கலாசாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பான நிறைந்த அறிவு இருந்திருக்கும் என்பதை சந்தேகத்துக்கிடமின்றி ஏற்றுக்கொள்ளலாம். அது மாத்திரமன்றி சீனாவின் ஏதடி பழங்குடியினரைப் பொறுத்தவரை பிற்காலத்தில் சீனாவில் வாழும் அனைத்து முஸ்லிம்களையும் குறிப்பிடும் ஓர் இன அடையாளமாக இப்பழங்குடிப் பெயர் மாறி வந்தமையையும் சீன வரலாறு நமக்கு அறியத்தருகிறது.

சீனாவைப் பொறுத்தவரை துருக்கிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள், பாரசீகம் மற்றும் மொங்கோலிய மொழிகளைப் பேசும் அனைத்து முஸ்லிம்களும் ஏதடி பழங்குடியினருக்குள் வகைப்படுத்தப்படுவதிலிருந்து அவர்களின் தொன்மையான தொடர்புகளை மாத்திரமன்றி அவர்களின் தூர தேசத் தொடர்புகளையும் கூட தொடர்பு படுத்தி அறிந்து கொள்ள எம்மால் முடிகிறது.

அந்த வகையில் சீனா வரை பரவிச் சென்ற பாரசீகர், அன்றைய கால வசதி நிலைகளைக் கருத்திற்கொண்டு நோக்குமிடத்து, நிச்சயமாக முதலில் இந்தியா, பின்னர் இலங்கையையும் தாண்டிச் சென்றவர்களாகவே இருந்திருப்பார்கள் என்பதை ஏற்றுக்கொள்வதில் யாருக்கும் தயக்கம் இருக்காது எனக் கருதுகிறேன்.

அப்படியாயின், Zheng He யின் வருகையின் போது இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் பெரும்பாலும் பாரசீகர்களாக இருந்தார்களா? எனும் கேள்வியும் இங்கு எழுவது தவிர்க்க முடியாததாகும்.

இந்தக் கேள்விக்கு பதிலளிக்க முதல் ஆகக்குறைந்தது, அக்கால கட்ட முஸ்லிம்கள் உலகின் பார்வையில், அதுவும் உலகப்புகழ் பெற்ற தூர கிழக்கின் கடலோடிகளின் முன்னோடி Zheng He யின் பார்வையிலும் கூட அவர்கள் 'தமிழர்களாக' இருக்கவில்லை என்பதை ஆணித்தரமாக முன்னெடுத்து இயம்பி நம் கேள்விக்கான விடையை அலச விளைகிறேன்.

இந்த சந்தேகத்தினைத் தெளிவு படுத்திக்கொள்ள இலங்கைக்குள் பாரசீகரின் ஆளுமை அல்லது வரவு பற்றி நமக்கு அறியக்கிடைக்கும் தகவல்களிலிருந்து சில அலசல்களை மேற்கொள்வது பொருத்தமாக இருக்கிறது. அந்த வகையில் அது நோக்கிச் செல்லும் வழியில் இலங்கையில் காலூன்றியிருக்கக்கூடிய இன்னொரு மறக்கப்பட்ட பழங்குடியினர் பற்றிய விபரத்தினை இணைத்து ஆராயவும் விளைகிறேன்.

இதற்காக நாம் Iron Age India எனக் குறிப்பிடப்படும் கி.மு 1200 - கி.மு 270 வரையான காலத்திற்குச் சற்று பின்நோக்கிச் செல்லும் தேவை ஏற்படுகிறது.

உப கண்டத்தில் வேதங்களின் தோற்றங்கள் (பௌத்த மதம் உட்பட) இக்கால கட்டத்திலேயே உருவாக்கம் பெறுவதும் பின் வந்த இலக்கிய காலம் (வட இந்தியா) அதாவது (தமிழில்) சங்க காலம் (தென் இந்தியா) வேதாந்த காலத்தைப் பின்தள்ளி வரலாற்றுப் பதிவுகளை புராணங்களாக்கியதும் இக்கால கட்டத்தின் தொடர்ச்சிகளாகும். இதனை நிறுவியே நமது முந்தைய பதிவில் பிரபல இந்திய இதிகாச இலக்கியங்களின் கால அளவு குறித்த எனது கருத்தினை முன் வைத்திருந்தேன்.

இச் சங்க காலத்திற்கும் முற்பட்ட காலத்திலேயே இந்திய உப கண்டப் பிரதேசத்தோடு தொடர்புடைய போர்த் திறமை மற்றும் குதிரை வீரர்களாகவும் பலசாலிகளாகவும் வர்ணிக்கப்பட்ட ஓர் இனத்தினர் பற்றிய இலங்கை முஸ்லிம்களின் பார்வையும் அறிவும் இது வரை இல்லாமலேயே இருந்திருக்கிறது. எனினும் அவர்கள் தொடர்பில் நம் கவனம் செலுத்தப்படுவது நம் முன்னால் வைக்கப்படும் சில வரலாற்றுக் கேள்விகளுக்குத் தகுந்த பதிலளிக்க உதவக்கூடியனவாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

இலங்கை இலக்கியப் பதிவுகளின் தொன்மை மிக்க மொழியாகக் கருதப்படும் பாலி மொழியும், சமஸ்கிருதமும் கூட அடிக்கடி அலசிக்கொண்ட இவ்வினத்தினர் இலங்கையின் தென் பகுதியில் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்து வந்திருந்தமை குறித்து வரலாற்றாசிரியர்கள் கு.பரணவிதான மற்றும் ; C.W. நிக்கலஸ் ஆகியோர் கி.மு 2ம் நூற்றாண்டளவிலான ஆதாரங்களை முன்வைத்து சில குறிப்புகளைத் தருகின்றனர். ங்கு. Paranavitana. See: History of Ceylon, 1973]

அது தவிரவும் கி.மு 7ம் நூற்றாண்டளவில் பதிவான, நான்கு இந்து வேதங்கள் குறித்த விளக்கவுரை வழங்கும் இலக்கியங்களுள் ஒன்றான வம்ச பிராமணாவிலும், பின் வந்த இந்தியப் பெரும் இலக்கிய இதிகாசமான மகாபாரதத்திலும் கூட இவர்கள் குறித்த பதிவுகள் காணப்படுகின்றன.

அதனடிப்படையில் இந்திய வரலாற்றின் தொன்மையில் கலந்து கொள்ளும் இவர்கள் சத்திரியர்கள், ஆரியர்கள் போன்ற வாதங்களில் ஆரம்பித்து இறுதியில் இவர்கள் இந்தோ - ஈரானியர்கள் எனும் முடிவு நிலை வரை கடந்த கால வரலாற்றாசிரியர்கள் அலசி ஆராய்ந்து, இறுதியில் இவர்கள் தொடர்புகளை ஆப்கானிஸ்தானிலிருந்து ஒரு பிரிவாகவும் கூட விளித்து நிற்கிறார்கள்.

எது எவ்வாறாயினும் முன்சொன்ன அனைத்து வரலாற்றுப் பதிவுகளிலிருந்தும் இவ்வாறொரு இனத்தினர் உப கண்டப் பிரதேசத்தில் ஆளுமையுடன் இருந்தமை அல்லது ஆகக்குறைந்தது வாழ்ந்தமை ஏற்றுக்கொள்ளப்படுவதோடு இலங்கைத் தீவின் வரலாற்றுப் பதிவிலிருந்து இவர்கள் இலங்கையிலும் குடியிருந்தார்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டே ஆக வேண்டும்.

எனினும், வரலாறு அவர்களை நமக்கு எவ்வாறு அறிமுகப்படுத்தியது அல்லது அவர்களை நாம் எவ்வாறு அறிந்திருக்கிறோம் என்பதிலிருந்தே நம் கேள்வி ஆரம்பமாகிறது.

Moors என்பது இலங்கையில் வாழ்ந்த சோனக அல்லது சுவனக மக்களுக்கு போர்த்துக்கீயர் இடையில் வழங்கிய பெயர் என்பதை நாம் சந்தேகத்துக்கிடமின்றி அறிந்து கொண்டிருக்கிறோம். அது தவிரவும் சிங்கள மக்கள் நம் சமூகத்தை வெவ்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கிறார்கள், நம்மில் பலர் அதில் ஒன்றை அறிந்து இன்னொன்றை அறியாதோராகவும் அதன் காரணப்பெயர்களை சரிவரப் புரியாதவர்களாகவும் கூட இருக்கிறோம் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

உதாரணமாக சிங்கள மக்கள் முஸ்லிம்களை 'மரக்கலயா' என்று அழைப்பதை நம்மிற் சிலர் கேள்விப்பட்டிருப்போம், ஒரு சில வேளைகளில் இதையொரு பழிச்சொல்லாகக் கூட ஒரு சிலர் பாவித்தாலும் காலப்போக்கில் 'மா ரெக வே' அதாவது 'என்னைக் காப்பாறிய வம்சம் (இரத்தம்)' என்று அன்னிய ஆட்சிக்கெதிராகப் போர் புரிந்த சுதேசிய அரசனால் வழங்கப்பட்ட நற்பெயராக அதைச் சித்திரிக்கும் புராணக் கதைகளும் நம்மிடையே இருக்கின்றன.

இது தவிரவும் இலங்கைச் சோனகர்களை விளிக்க சிங்கள மக்களால் 'ஹம்பயா' எனும் சொல்லும் உபயோகிக்கப்படுகிறது. இந்த ஹம்பயா என்பதைப் பொறுத்தவரை பெரும்பாலும் கரையோரச் சோனகர்களைக் குறிக்க சிங்களத்தில் உபயோகப்படுத்தும் ஒரு சொல்லாக இது இருக்கும் எனும் மேலோட்டமான ஒரு கருத்து நம்மிடையே நிலவினாலும் இந்தக் காரணப் பெயர் நம் சமூகத்தை வந்தடைந்ததற்கான அடிப்படையை அல்லது ஆணி வேரை நம்மில் யாரும் இது வரை ஆழமாக ஆராய்ந்ததாகவோ அல்லது அதற்கான தேவை இருப்பதாக உணர்ந்ததாகவோ அறிய முடியவில்லை.

பெரும்பான்மை சைவத் தமிழர்கள் 'சோனகர்கள்' என்பதைச் சுருக்கி 'சோனிகள்' என்று பழிச்சொல்லாகவும் விளித்து நம்மை எள்ளி நகையாடுவதற்கான காரணத்தை அறிந்த நாம் ஹம்பயாக்களாக நம் சமூகத்தின் ஒரு பகுதி அடையாளங்காணப்படும் காரணங் குறித்தும் மேலதிக விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது காலத்தின் கடமையாகும்.

சொற்கள் திரிபடைதல் என்பது அனைத்து உலக மொழிகளிலும் காணப்படும் வழக்கமாக இருப்பினும் கூட இனங்களின் பெயர்கள் தொடர்பில் குறிப்பிட்டளவு மாற்றம் எப்போதும் அதன் அடிப்படையை ஒன்றியே அமைந்து வருவதையும் கவனத்திற்கெடுத்து நோக்கின், இலங்கை வரலாற்றில் நம் சமூகம் 'ஹம்பயா' என்று அறியப்படுவதும் தற்செயலாக இருக்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளலாம்.

அந்த வகையில் இன்றைய இலங்கை முஸ்லிம்களின் பூர்வீக ஆராய்வு 'முஸ்லிம்' என்ற அடையாளத்துக்குள் அடக்கிக் கொள்ளும் வரையறைக்காக கி.பி 9ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்திற்குள் சுருக்கப்படவும் முடியாது என்பதை ஆணித்தரமாக ஏற்றுக் கொள்ள விளைகிறோம்.

நவீன ஆய்வாளர்கள் கூட 'முஸ்லிம்' எனும் நமது அடையாளத்தை உணர்வுபூர்வமாக அணுகுவதனால் அதற்கு முந்தைய காலம் குறித்துப் பேசத் தயங்கும் சூழ்நிலையினால் இன்று மார்க்க அடிப்படையிலான அறிவை வழங்கும் கலாசாலைகள் இவற்றை ஆய்வுக்குட்படுத்தக் கூடத் தயங்குகின்றன.

நபியவர்களின் காலத்திற்கு முன்பிருந்த மக்களை மறந்து அரேபியாவின் வரலாற்றை எம்மால் பேச இயலாது என்பது போன்றே இலங்கைக்குள் பூரணப்படுத்தப்பட்ட இஸ்லாத்தின் அறிமுகத்துக்கு முன்னிருந்த ஏக இறைக் கொள்கையாளர்களின் மற்றும் ஏனைய சமூகங்களின் வரலாற்றையும் புறக்கணிக்க முடியாது.

அதே போன்று, வேற்று மொழிகள் இலங்கைக்குள் வந்தது ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான், குறிப்பிட்ட காலம் வரை தான் என்று வரையறுத்துக் கூற முடியாத வரலாற்று ஒட்டத்தைக் கொண்ட ஒரு விடயமாகும்.

ஆகவே இலங்கைக்குள் தமிழ் உட்பட திராவிட மொழிகளின் இறக்குமதி அல்லது கலப்பு குறித்த அறிவும் நமக்கு அவசியமாகிறது.

இவை குறித்த ஆய்வின் பின்னணியில் இலங்கை முஸ்லிம்களிடம் புழக்கத்தில் இருக்கும் மொழிப்பாவனை மற்றும் புழக்கம் குறித்தும் அறிந்து கொள்ளலாம்.

போர்த்துக்கீயர் இந்த மண்ணை ஆக்கிரமிக்க வந்த போது அவர்களைக் கடுமையாக எதிர்த்த சமூகமாக அவர்களால் அன்று மூர்ஸ் (சோனகர்) என அறியப்பட்ட எமது மூதாதையர்கள் இருந்தார்கள்.

அந்நிய ஆக்கிரமிப்பின் ஆரம்பத்தில் இந்நாட்டில் பேரிழப்புகளைச் சந்தித்த ஒரு சமூகம் என்றால் அது முஸ்லிம் சமூகம்தான் என்றால் மிகையாகாது.

அக்கால ஆக்கிரமிப்புகளில் இலக்கிய அழிப்பும் மிகப் பிரதானமான ஓர் ஆயுதமாக இருந்தது. இலங்கை முஸ்லிம் சமூகம் போர்த்துக்கீயர் வருகையால் சந்தித்த மிகப்பெரும் அழிவுகளில் இலக்கிய அழிப்புக்கும் தனியிடமுண்டு.

இம்மண்ணில் போர்த்துக்கீயர் காலடி எடுத்து வைக்கும் வரையான போராட்ட காலத்தில் நம் மூதாதையர்களின் மொழிப்புலமை எவ்வாறு இருந்தது? இலக்கியம் எவ்வாறு வளர்ந்தது? போர்த்துக்கீயரால் நாம் கண்ட அழிவென்ன போன்ற விடயங்கள் ஆழமாக அறியப்பட வேண்டியவையாகும்.

கி.பி. 9ம் நூற்றாண்டுக்கு முன்னராகவே பாரசீகம், அரபு, இலங்கையில் புழக்கத்திலிருந்த பிராகிருத மொழிகளையும் பேசி வாழ்ந்து வந்த சமூகம் பின் எவ்வாறு தம் பொதுத் தன்மையை வளர்த்துக்கொண்டது? ஒரு சமூகமாக உருவாகி வளர்ந்தது போன்ற பல விடயங்கள் ஆராயப்படுவது மாத்திரமன்றி அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் எடுத்துச் சொல்லப்பட வேண்டிய விடயமாகும்.

முன் சென்ற உரைத்தொடர்களில் இலங்கை முஸ்லிம்களின் மூதாதையர் பல மொழிகளைப் பேசியிருக்கக் கூடிய சாத்தியக்கூறு தெளிவாகக் காணப்பட்டிருக்கும் நிலையில் எம் மத்தியில் இன்றும் பாவனையில் இருக்கக் கூடிய தனித்துவமான சொற்களின் பிரயோகம் மற்றும் போர்த்துக்கீயரால் முற்று முழுதாக அழிக்கப்பட்ட எமது மூதாதையரின் இலக்கியப் படைப்புகள் மற்றும் புழக்கத்தில் இருந்த மொழி குறித்தும் நமது ஆய்வை விரிவுபடுத்த விளைகிறேன்.

தொடரும்...

■ நேர்காணல்: ஆதில் அலி சப்ரி

# இனரீதியான அரசியலால் இனத்துக்கே விடிவில்லை

**இனத்தின் தனித்துவத்துடன் அரசியல் மேற்கொள்வதைவிட பொது அரசியல் வியாபாரமொன்றில் ஈடுபடுவதே சிறந்ததாகும். இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசியல் ஈடுபட்டவர்கள் இனத்தின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார். அவர் நவமணிக்களித்த முழுமையான நேர்காணலைத் தருகின்றோம்.**



**கேள்வி:** நாட்டில் உண்மையான நல்லாட்சி மலர்ந்துள்ளதா?

**பதில்:** உண்மையாக கூறப்போனால், நல்லாட்சி என்று கூறும் செயற்பாடுகள் எதுவுமே இந்த ஆட்சியில் நடைபெறவில்லை. சட்டத்தின் ஆட்சியை உறுதிசெய்தல், இலஞ்ச- ஊழலை இல்லாதொழித்தல், வீண்விரயத்தை குறைத்தல், வினைத்திறனுடன் கூடிய அரச சேவையொன்றை ஸ்தாபித்தல், மக்களின் அடிப்படை வசதிகளை பூரணப்படுத்தும் வகையில் பொருளாதாரத்தை சீர்செய்தல் போன்றவைகள் நடைபெற்றிருந்தால் இதனை நல்லாட்சி என்று கூறுவதில் தவறில்லை. இவ்வாறான விடயங்கள் நடைபெறாத நிலைமையே இதுவரையில் காணப்படுகின்றது. நல்லாட்சியின் அடிப்படைகள், அடையாளங்கள் வெளிப்படாத இந்த ஆட்சியை ஒருபோதும் நல்லாட்சியென்று கூற முடியாது.

**கேள்வி:** நாட்டின் சட்டம், ஒழுங்கு மற்றும் நீதித்துறையின் செயற்பாடுகள் திருப்தியளிக்கின்றனவா?

**பதில்:** பொலிஸ் மா அதிபரின் பகிரங்க அறிவிப்பே இந்த இடத்தில் நினைவுக்கு வருகின்றது. '' சட்டத்தை மீறமாட்டேன், சட்டத்தை வளைப்பேன்'' என்றே பொலிஸ் மா அதிபர் கூறியிருந்தார். பொலிஸ் மா அதிபரின் கூற்று இலங்கையின் சட்டம், நீதியின் பண்பை எடுத்துக்காட்டுகின்றது. அரசாங்கமும், அமைச்சர்களும் அவர்களுக்குத் தேவையான விதத்தில் சட்டத்தைக் கையில் எடுப்பதையும், பயன்படுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது. வெகு காலம் தொட்டு நாட்டில் இந் நிலைமை தொடர்கின்றது. சட்டம், ஒழுங்கு போன்றன சரிவர நிலைநாட்டப்படவில்லை என்பது அரசாங்கத்தின் போக்கில் இருந்து கண்டுகொள்ளலாம்.

**கேள்வி:** ஊடகங்களின் பூரண அனுசரணையுடன் ஆட்சிக்கு வந்த இந்த ஆட்சியில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட்டுள்ளதா?

**பதில்:** ஊடகங்களுக்கும் சில அரசியல் நோக்கங்கள் இருக்கின்றன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எனினும் ஊடக மட்டுப்படுத்தல்கள், தாக்குதல்கள், ஊடகங்களுக்கு எதிரான செயற்பாடுகள் ஒழிந்து, ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கருத்திலே நான் இருக்கின்றேன். ஊடகங்களின் நிலவுகைக்கு விளம்பரங்கள் அவசியமாகின்றது. அரச ஆளுகைக்குட்பட்டுள்ள விளம்பரங்கள் மூலம் ஊடகங்களை அரசு மட்டுப்படுத்த முயல்கின்றது என்பதே உண்மை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் போன்று, ஊடகவியலாளர் கொலைகள், கடத்தல் சம்பவங்கள், ஊடக நிறுவனங்களை தாக்குதல், ஊடக நிறுவனங்களுக்கு குண்டு வீசுதல், ஊடகவியலாளர்களின் கால்- கைகளை உடைத்தல் போன்றவற்றுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது, அதுபோன்றதொரு ஊடக அடக்குமுறையை இந்த ஆட்சியில் கண்டுகொள்ள முடியாது.

எனினும், கண்ணுக்குத் தெரியாத பல ஊடக அடக்குமுறைகளும், செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

**கேள்வி:** நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்று, பாரிய கடன் சுமையொன்றிற்கு தள்ளப்பட்டுள்ளதா?

**பதில்:** ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு ஆட்சியாளரும் நடைமுறைப்படுத்திய முறையற்ற பொருளாதார கொள்கைகளால் நாட்டின் பொருளாதாரம் பாரிய சிக்கலுக்குள் மாட்டியுள்ளது. கடன் பெற்றுக்கொள்வதை அனைத்து ஆட்சியாளர்களுமே பெரும் வெற்றியாகக் கருதினர். மக்களுக்கு வெற்றியாக அறிவித்தனர். கடனுதவி மாநாடுகளுக்கு சென்று வரும் போது, விமான நிலையத்தில் பாரியளவில் வரவேற்கப்பட்டார்கள். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றால் பெருமளவு கடனுதவிகள் கிடைக்கும்போது ஆட்சியாளர்களை அதனை பெரும் வெற்றியாகவே மக்களுக்கு காட்டினர்.

ஆனால், இன்று அதே ஆட்சியாளர்களை கடன் ஓர் சுமையென்கின்றனர். வெற்றியாக பெற்றுக்கொண்ட கடன், பாரிய சுமையாக மாறுவதற்கு முக்கிய காரணங்கள் இரண்டைக் குறிப்பிடலாம். பெற்றுக்கொண்ட கடனில் உண்மையான, நிலையான பயனை அடையவில்லை. இரண்டாவதாக, பெற்றுக்கொண்ட கடனுதவிகளால் தேவையான செயற்திட்டங்களை மேற்கொள்ளத் தவறியது. இந்த காரணங்களாலே இன்று பெரும் கடன் சுமையை எதிர்கொண்டுள்ளோம்.

ஏற்றுமதி, இறக்குமதித் துறையிலும் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றோம். டொலரின் பெறுமதிக்கேற்ப ரூபாயின் பெறுமதி வேகமாக வீழ்ச்சிகண்டு வருகின்றது. 2015ஆம் ஆண்டு மாத்திரம் ரூபாயின் வீழ்ச்சியால் நாடு 84,000 கோடி நட்டமடைந்துள்ளது. அரச திறைசேரிக்கு வருமானம் ஈட்டிக்கொள்ளவேண்டிய தேவையில் பொதுமக்களுக்கு அதிக வரி விதிக்கப்படுகின்றது. விலைவாசி உயர்வால் மக்கள் துன்புறுகின்றனர். ஒவ்வொரு அரசாங்கமும் நடைமுறைப்படுத்தும் பொருளாதார கொள்கைகள் நாட்டை உயர்வின்பால் இன்றி, வீழ்ச்சிப் பாதையிலேயே இட்டுச் செல்கின்றதைக் காணலாம்.

**கேள்வி:** அவ்வாறாயின் கடன் சுமையிலிருந்து விடுபட...?

**பதில்:** முதலாவதாக வீண்விரயத்தை குறைக்கவேண்டும். களவு, கொள்ளை, இலஞ்ச- ஊழல் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். வினைத்திறன்மிக்க செயற்றிட்டங்களில் முதலீடு செய்யவேண்டும். நாட்டின் தேசிய உற்பத்திகளை ஊக்குவித்தல் போன்ற திட்டமிட்ட செயற்பாடுகளால் மாத்திரமே நாட்டை கடன் சுமையில் இருந்து மீட்க முடியும்.

**கேள்வி:** தேசிய நல்லிணக்கம் என்பதும் அரசியல் இலாபத்துக்காகவா?

**பதில்:** ஆட்சிக்கு வருபவர்களும், உயர்தர வர்க்கத்தினரும் இனவாதத்தினூடாக மக்களை பிரித்தாளவே விரும்புகின்றனர். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கில் உயர்தரத்தினர் உள்ளனர். அனைத்து இன, மத பிரிவினரிடையேயும் இனவாத்தை கக்கும் ஆட்சியாளர்களும் தலைவர்களும், உயர் குலத்தினரும் உள்ளனர். அவர்களின் நிலவுகையை உறுதிசெய்துகொள்ளவே இனவாதத்தை பரப்புகின்றனர்.

இனவாதத்தை கொண்டே அரசியல் புரிந்துவருகின்றனர். அடிமட்டத்தில் உள்ள மக்களிடையே இனவாதத்தை வளர்த்தாலும் உயர் குலத்தினரிடையே இனவாதம் இருப்பதாக தெரியவில்லை. அவர்கள் ஒரே அமைச்சரவையில், ஒரே குடும்பங்களில் திருமண பந்தங்களில் இணைந்துள்ளனர், விருந்துகளில் ஒன்றாக கலந்துகொள்கின்றனர். எனினும் அடிமட்ட மக்களை ஒன்றிணைய விடமாட்டார்கள். அரசியல் இலாபங்களுக்காக இனவாதத்தை தூண்டுவதில் அவர்கள் மும்முரமாக செயற்பட்டு வருவதையும், அரசாங்கம் அவற்றைப் பாதுகாப்பதையும் நாம் அறிவோம்.

**கேள்வி:** நிலைமாற்று நீதியின் மூலம் நீதி நிலைநாட்டப்பட வேண்டியது தமிழ் மக்களுக்கு மாத்திரமாது? சிங்கள, முஸ்லிம் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்படவில்லையா?

**பதில்:** அநியாயம், அநீதி இழைக்கப்பட்ட அனைவருக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். அரச சார்பற்ற நிறுவனங்கள் தமிழ் மக்களின் யுத்த பாதிப்புகள் குறித்து மாத்திரமே பேசி வருகின்றனர். 30 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாட்டின் ஏனைய பிரிவினரும் உள்ளனர். தமிழ் மக்கள் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படுவது போன்றே சிங்கள, முஸ்லிம்கள் விடயத்திலும் உண்மைகள் கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

**கேள்வி:** 1971 கலகக்காரர்களை தேசிய வீரர்களாக பிரகடனப்படுத்தக் கோருவது ஏன்?

**பதில்:** பிரித்தானியருக்கு எதிராக போராடி, தேசத் துரோகிகளாக முத்திரை குத்தப்பட்டிருந்தவர்கள் தேசிய வீரர்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளனர். 1971 போராட்டமும் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எதிராகவே அமைந்திருந்தது. 1971ஆம் ஆண்டு பிரித்தானிய ராணியின் ஆட்சிக்கு எதிராக போராடிய குற்றத்திற்காகவே எம்மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது. பிரித்தானிய ராணியின் அரசுக்கு எதிராக போராடியது குற்றமாயின் அது நாட்டுக்காகவே நடந்த போராட்டம். அதன்படி பார்ப்பதாயின் 1971 வீரர்களும் தேசிய வீரர்களாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

**கேள்வி:** தேசிய வீரர்கள் பட்டியலில் முஸ்லிம் தலைவர்களின் பெயர்கள் இடம்பெற்றிருக்கவில்லை. இதுதொடர்பாக?

**பதில்:** அதுதொடர்பாக நான் அவ்வளவாக அறிந்திருக்கவில்லை. இன்று நாட்டுக்கு தேசிய வீரர்கள் என்ற லேபல் அவசியமில்லை. நாட்டுக்கு வரலாற்றில் இருந்து படிப்பினைகளைப் பெற்று, வரலாற்று நாயகர்களிடம் பாடம் பெற்று, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான திட்டமொன்றை இன்றைய தேவை.

**கேள்வி:** சைடம் குறித்த உங்களின் நிலைப்பாடென்ன?

**பதில்:** தெற்காசிய தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ நிறுவனம் முற்றாக தடைசெய்யப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

**கேள்வி:** அதற்கான காரணம்?

**பதில்:** அதற்கு பல காரணங்களைக் கூறலாம். நாட்டில் கல்வியென்பது பணம் படைத்தவர்களை வைத்து தீர்மானிக்கப்படுவது நியாயமானதல்ல. இதனை நிறுவனமொன்றாக பார்க்கும் போதும், இது சட்டவிரோத நிறுவனமொன்றாகும். கல்வியும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்தில் இல்லை. பொதுமக்களின் உயிர்கள் ஆபத்தில். சுகாதார சேவைகளும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. எனவேதான் இதனை முற்றாக தடைசெய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம்.

**கேள்வி:** உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் பிற்போடப்படுவதற்கான உண்மையான காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்?

**பதில்:** தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும். புதிய முறையில் தேர்தலை நடத்துவதற்கு முயற்சிக்கின்றனர். அதற்கு மேலும் அதிகமான கால அவகாசம் தேவைப்படும். பழைய முறையில் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதால் மட்டுமே கால தாமதத்தை தடுக்கலாம். இவ்விடயத்தில் காலதாமதத்தை ஏற்படுத்துவது அநியாயமானதாகும்.

உள்ளூராட்சிமன்ற தேர்ரதலில் அரசு தோல்வியைத் தழுவவேண்டிய நிலை ஏற்படும் என்று கருதியே பிற்போட்டு வருகின்றதாக எண்ணவேண்டியுள்ளது?

**கேள்வி:** இலங்கையில் பெண்களின் அரசியல் பங்களிப்பு போதுமானதா?

**பதில்:** பொதுமக்கள் பொதுவாக முகங்கொடுக்கும் பிரச்சினைகள் உள்ளன. பெண்களும் நாட்டின் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். பெண் அடக்குமுறைகள், பாதுகாப்பு பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடி போன்றவற்றிற்கு முகங்கொடுக்கின்றனர். பெண் அரசியல் பிரதிநிதித்துவமும் போதாது. பெண் தொடர்பான சமூக கண்ணோட்டத்தில் மாற்றம் நிகழ்வேண்டும்.

நாட்டில் காடையர்கள், முதலாளிமார்களுக்கென்றான அரசியலில் அவர்களது பங்களிப்பு எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பது குறித்து சிந்திக்க வேண்டும். நாட்டின் அரசியலில் பெரும் மாற்றம் ஏற்பட வேண்டும். பெயரளவில் 25 சதவீத பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பரிசொன்றைப் போன்று உறுதி செய்வதைவிட களத்தில் அவர்களுக்கு இடமளிக்கப்படவேண்டும்.

**கேள்வி:** தகவல் அறியும் உரிமை முழுமையாக வழங்கப்பட்டுள்ளதா?

**பதில்:** அதிலும் சில சிக்கல்கள் உள்ளன. நாட்டின் சட்டத்தில் பிரச்சினையில்லை. நாட்டில் சுயாதீன ஆணைக்குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இவை இருப்பதற்கும் இல்லாமல் இருந்த காலத்திற்குமிடையே வேறுபாடுகளை காண முடியாது. சட்டத்தின் மூலம் மாத்திரம் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. நாட்டின் அரசியல் கலாசாரமும் மாற வேண்டும். மக்களுக்கு தகவல் பெறும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அது சட்டமாக்கப்பட்டுள்ளது. எனினும், சட்டத்தின் மூலம் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

**கேள்வி:** இனவாத, முஸ்லிம் எதிர்ப்பு பிரசாரங்கள் தலை தூக்க காரணம் என்ன?

**பதில்:** இனவாதத்தை அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்துகின்றனர். ஒரு இனவாதத்தை இன்னோர் இனவாதத்தால் தோற்கடிக்க முடியாது.

இனவாதத்தை தேசிய ஒற்றுமையால் மாத்திரமே வெல்ல முடியும். ஆட்சியாளர்களும், ஆட்சியைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பவர்களுமே இனவாதத்தை தூண்டுகின்றனர். இனவாதத்தின் பின்னணியில் ஆட்சியாளர்களே அன்றும் இன்றும் உள்ளனர்.

**கேள்வி:** இன்றைய முஸ்லிம் அரசியல் கட்சிகளின் நிலைமை எவ்வாறுள்ளது?

**பதில்:** ஒவ்வொரு இனத்தவர்களுக்கு அரசியல் கட்சிகள் இருப்பதைவிட பொது அரசியல் செயற்பாடொன்றை முன்னெடுப்பதே காலத்திற்கு பொருத்தமானதாகும். இனத்தின் தனி அடையாளத்துடன் அவர்களின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையிருக்கலாம். ஆனால், இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்ததாகத் தெரியவில்லை. இனங்களைச் சார்ந்த அரசியலைவிட பொது அரசியலே காலச் சிறந்ததாகும். ஒவ்வொருவரும் ஆட்சியில் இருப்பதற்கே இனத்தின் பெயரைப் பாவிக்கின்றனர். பிரிவினைகளை மறந்து மக்கள் ஒரு பொதுப் போராட்டில் ஒன்றிணைய வேண்டும்.

**கேள்வி:** ஜே.வி.பி என்கின்றபோது மக்கள் இப்போதும் பயப்படுகின்றனர். அது ஏன்?

**பதில்:** உண்மையாகவே, மக்கள் பயப்படவேண்டியது இப்போதைய ஆட்சியாளர்களுக்காகும். மக்களின், நாட்டின் சொத்து செல்வங்களை களவாடும், சட்டத்தை கையிலெடுக்கும், இனவாதத்தைத் தூண்டும் ஆட்சியாளர்களுக்கே மக்கள் பயப்படவேண்டும். மக்கள் விடுதலை முன்னணிக்கல்ல.


## விலைமனு அறிவித்தல்
## Lanka Mineral Sands Limited
(கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)

### பெறுமதிமிகு கனரக கனிம மணல்களை விற்பனை செய்தல்
**கேள்வி இல: LMS/MKT/TDR/17/01**


இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் சார்பாக, அமைச்சின் கேள்விமனு சபையின் தலைவர், பின்வரும் கனரக கனிம மணல் பொருட்களை வாங்குவதற்கு ஆர்வமுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுதரப்புக்களிடமிருந்து கேள்விமனுக்களை கோருகிறார். வாங்குவதற்கு சாத்தியமுள்ளோர், அனைத்து பொருட்களுக்குமோ அல்லது சில பொருட்களுக்கோ கேள்விமனுக்களை வழங்கலாம்.

| | பொருட்கள் | விற்கப்படும் அளவு | மனு பத்திரம் | கேள்வி மனு மூடப்படும், திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|---|---|
| 1 | **ZIRCON** (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATIONS PROVIDED) | **650 MT** (40 கிலோ பொதிகளாக பொதி செய்யப்பட்டுள்ளன) | **8,247,720.00** இலங்கை ரூபா அல்லது **55,250.00** அமெ. டொலர் | |
| 2 | **RUTILE** (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATIONS PROVIDED) | **1000 MT** (40 மற்றும் 1000 கிலோ பொதிகளாக பொதி செய்யப்பட்டுள்ளன) | **9,807,696.00** இலங்கை ரூபா அல்லது **65,700.00** அமெ. டொலர் | **30.03.2017** பிற்பகல் 02 மணி |
| 3 | **HI-TI ILMENITE** (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATIONS PROVIDED) | **2000 MT** (தொகையாக விநியோகிக்கப் பட்டுள்ளது) | **3,881,280.00** இலங்கை ரூபா அல்லது **26,000.00** அமெ. டொலர் | |

மனுதாரருக்கான அழைப்பிதழ், விற்பனை நோக்கம், மனுதாரருக்கான அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், பொருட்களின் விபரங்களை உள்ளடக்கிய கேள்விமனு ஆவணம் இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது. அத்தோடு, ஆர்வமுள்ள தரப்புக்கள் இலகுவாக அணுகுவதற்காக www.lankamineralsands.com என்ற இணையத்தளத்திலும் இடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள தரப்புக்கள் கேள்விமனுவின் விபரங்களை அறிந்துகொள்வதற்கு, இணையத்தளத்தை தரிசிக்கலாம்.

மேலதிக விளக்கங்களுக்காக தயவுசெய்து சந்தைப்படுத்தும் முகாமையாளரை +94 11 2883951-2, +94 11 2883965 அல்லது சந்தைப்படுத்தும் பிரிவுடன் +94 11 2883954, உடன் தொடர்புகொள்ளவும். தொலைநகல் +94 112882668, மின்னஞ்சல்: ilmenite@slt.lk.

**தவிசாளர்**
**அமைச்சின் கேள்விமனு சபை**
**இலங்கை கனிய மணல் நிறுவனம்**
**341/21, சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை**



# நிறைவேறுமா பஷீரின் முதலமைச்சர் கனவு?

■ எம்.ஏ.முஹம்மட் உவைஸ்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் உட்கட்சிப் பிளவு என்பது அரசியலின் முக்கிய அங்கமாகவே மாறிவிட்டது.ஒரு கட்சிக்குள் அதிகாரப் போட்டி-பதவி மோகம் மேலோங்குகின்றபோது பிளவுகள் தடுக்கப்பட முடியாமல் போகின்றன.எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் கட்சிகள்தான் இவ்வாறான பிளவுகளுக்கு அதிகம் இரையாகின்றன.

பிளவுகளை ஏற்படுத்துகின்ற கட்சி உறுப்பினர்கள் முன் வைக்கும் காரணங்கள் அனேகமாக நியாயமாகத்தான் இருக்கும். ஆனால்,நோக்கம் பதவி ஆசையாக இருக்கும்.அந்தப் பதவி ஆசையை வெளியில் தெரியாமல் மூடுவதற்கான போர்வையாகத்தான் அந்த நியாயமான காரணங்களைத் தேர்ந்தெடுப்பர்.

இவ்வாறானவர்கள் கட்சியில் அல்லது கட்சித் தலைமைத்துவத்தில் பிழையைக் கண்டால் அதைச் சரி செய்வதற்காக கட்சிக்குள் அல்லது கட்சிக்கு வெளியில் நின்று போராடமாட்டார்கள்.நேராகச் சென்று அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வார்கள்.இதற்காகத்தான் இவ்வளவு ஆட்டம் என்பதை மக்களும் புரிந்துகொள்ள மாட்டார்கள்.

உட்கட்சிப் பிளவு என்பது மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில்தான் உச்சத்தில் இருந்தது என்று சொல்ல வேண்டும்.சில தசாப்தங்களுக்கு மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்கவே முடியாது என நினைத்த எதிர்கட்சிகளைச் சேர்ந்த பதவி மோகம் கொண்ட-கொள்கைப் பிடிப்பட்ட சில அரசியல்வாதிகள் அவர்களின் கட்சிகளுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தினர்; தலைமைத்துவத்துக்கு எதிராகப் போராடினர். இறுதியில் மஹிந்தவுடன் போய் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஐக்கிய தேசிய கட்சி,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகள் கடந்த காலங்களில் ஒரே மாதிரியான பிளவுகளைச் சந்தித்தன. அக்கட்சிகளில் இருந்து சிலர் தலைமைத்துவத்தில் குறை கண்டு மஹிந்தவுடன் போய் சேர்ந்துகொண்டனர்.இதனால் அந்தக் கட்சிகள் வீழ்ச்சியைச் சந்திக்கத் தொடங்கின.தங்களைப் பாதுகாக்கப் போராடின.

ஆனால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் மாத்திரம் வித்தியாசமான ஓர் இராஜதந்திரத்தைக் கையாண்டது. அதனூடாக கட்சியின் மேலதிக பிளவை ஓரளவு பாதுகாத்துக்கொண்டது.மு.காவின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபின் மறைவைத் தொடர்ந்து அந்தக் கட்சி பிளவு என்ற தலையிடியைச் சந்திக்கத் தொடங்கியது. அஷ்ரப் மு.காவின் தலைவராக இருந்தபோது மு.காவுக்கு வெளியில் இருந்து சிலரால் அரசியல் பிழைப்பு நடத்த முடியவில்லை. இதனால் பதவி மோகம் கொண்டவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் வரை கட்சியின் விசுவாசிகளாகத் தங்களைக் காட்டிக் கொண்டு கட்சியின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கிடந்தனர். அஷ்ரப் மரணமடைந்தபோது இவர்கள்தான் உள்ளார மகிழ்ந்தார்கள்.கட்சியின் அடுத்த தலைவர் ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் அல்ல என்ற ஒரு காரணத்தை முன்வைத்து-பிரதேசவாதத்தைத் தூண்டி அதனூடாகக் கட்சி தாவி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளும் தமது திட்டத்தை நியாயப்படுத்தினர்.

அவர்களின் திட்டப்படி கட்சி பிளவுபட்டது.அமைச்சுப் பதவிக் கனவும் நிறைவேறியது.காலப்போக்கில் சிலர் கட்சிக்குள் திரும்பினர் சிலர் அரசியலில் காணாமல் போயினர். சிலர் அந்த அஷ்ரபின் பெயரை வைத்துப் இன்னும் பிழைப்பு நடத்திக் கொண்டு இருக்கின்றனர்.

அதன் பிறகு,2005 இல் மு.கா மற்றுமொரு பாரிய பிளவைச் சந்தித்தது.சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த அந்தக் காலப்பகுதியில் மு.காவில் இருந்து ஹுசைன் பைலா,ரிசாத் பதியுதீன் ,அமீர் அலி மற்றும் நஜீப் ஏ மஜீத் ஆகியோர் அரசு பக்கம் பல்டி அடித்தனர்.அவர்களின் ஆசைப்படி,அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த வெற்றி பெற்று அவரின் ஆட்சி ஆரம்பமானது.அவரது ஆட்சியின் போதும் மு.காவுக்குள் பிளவுகள் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டன.மஹிந்தவின் உறவினர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் ஊடாக அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கு மு.கா உறுப்பினர்கள் சிலர் இரகசியமாக முயற்சி எடுத்த வரலாறும் உண்டு.

இந்தச் சதியை நன்கு உணர்ந்து -தொடர்ந்தும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தால் தான் மட்டும் தான் கட்சியில் மிஞ்சுவேன் என்பதை அறிந்து ரவூப் ஹக்கீம் கட்சியின் பிளவைத் தடுப்பதற்காக அரைகுறை மனதுடன் மஹிந்த அரசின் கட்சியில் போய் இணைந்து கொண்டார்.

அவ்வாறு இணைந்தும் கூட,அமைச்சுப் பதவிக்காக அங்கு இன்னுமொரு தடவை பிளவு ஏற்பட்டது. கட்சியின் தவிசாளராக இருந்துகொண்டு கட்சியின் தலைவருக்கே தெரியாமல் பஷீர் சேகுதாவூத் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டமைதான் அந்தப் பிளவுக்குக் காரணம். ஆனால்,அவர் கட்சியை விட்டு வெளியேறவில்லை.

கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வாக ஹக்கீம் ஆட்சி மாற்றத்தையே நாடினார்.இதனால்தான் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் மஹிந்தவுக்கு எதிரான அணியில் நின்று போராடினார்.

2015 இல் அவர் எதிர்பார்த்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்கான சாதகமான நிலைமையும் தென்பட்டது.அவ்வாறு இருந்தும்,பதவி ஆசையை அடிப்படையாக வைத்து கட்சிக்குள் இப்போதும் ஒரு வகையான சலசலப்பு ஏற்பட்டுள்ளது.ஒவ்வொரு முறையும் தேசிய பட்டியல் எம்.பி ப் பதவியை அனுபவித்து வந்த மு.காவின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலியும் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்தும் இம்முறையும் அந்தப் பதவியைக் கேட்டு கட்சியின் தலைமைத்துவத்துடன் மோதத் தொடங்கியதாலேயே இந்தச் சலசலப்பு ஆரம்பமானது.மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் அதற்கு மறுத்துவிட்டதால் அவர்கள் இருவரும் கட்சியின் தலைமைத்துவத்துக்கு எதிராகக் களமிறங்கினர்.இதனால் ஹசன் அலியின் பொது செயலாளர் பதவியும் பஷீரின் தவிசாளர் பதவியும் பறிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் இன்று தலைமைத்துவத்தைக் கவிழ்ப்பதற்காக அதிதீவிரமாக களமிறங்கியுள்ளனர்.ஹசன் அலி நிந்தவூரில் பொதுக் கூட்டமொன்றை நடத்தி ஹக்கீம் எதிர்ப்புப் போராட்டத்தை தொடக்கி வைத்துள்ளார்.மறுபுறம்,பஷீர் மு.காவின் அதிருப்தியாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து முஸ்லிம் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.மு.காவின் அதிருப்தியாளர்களைப் பயன்படுத்தி பஷீரின் முதலமைச்சர் கனவை இதன் ஊடாக வேனும் நிறைவேற்றிக்கொள்ள அவர் முயற்சிக்கின்றார்.

கிழக்கில் யுத்தத்தை நிறைவு செய்துவிட்டு 2008 இல் மஹிந்த ராஜபக்ஸ கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்திய போது கிழக்கு மாகாண சபையை கைப்பற்றிவிட வேண்டும் என்ற நோக்கில் முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து களத்தில் குதித்தது. முஸ்லிம் காங்கிரஸ் அப்போது எதிர்கொண்ட நெருக்கடியான அரசியல் சூழ்நிலை காரணமாக இருக்கின்ற முழு சக்தியையும் பயன்படுத்தி தேர்தலை வெற்றிகொள்வதற்கு ஹக்கீம் தீர்மானித்தார்.அந்த அடிப்படையில்,ஹக்கீம்,பஷீர் மற்றும் ஹசன் அலி ஆகியோர் எம்.பி பதவிகளை இராஜினாமா செய்துவிட்டு தேர்தலில் போட்டியிட்டனர்.

அந்தத் தேர்தலில் முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றுவதே பஷீரின் ஒரே திட்டமாக இருந்தது. ஆனால்,அந்த ஆசை நிறைவேறவில்லை. 2012 இல் இடம்பெற்ற தேர்தலில் அவர் போட்டியிடவில்லை.அந்தத் தேர்தலின் முடிவில் முஸ்லிம் காங்கிரஸும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும் இணைந்து ஆட்சி அமைத்தது.

முதலமைச்சர் பதவி முதல் இரண்டரை வருடங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கும் அடுத்த இரண்டரை வருடங்கள் முஸ்லிம் காங்கிரஸிற்கும் என இணக்கம் காணப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் நஜீப் ஏ மஜீத்தை முதலமைச்சராக்குவதற்கு பஷீர் ஏற்பாடு செய்து அதை நிறைவேற்றினார்.

அந்தப் பதவிக் காலம் நிறைவடைந்து முஸ்லிம் காங்கிரஸ் பதவியேற்கும் காலம் நெருங்கியபோது தமிழர் ஒருவருக்கே இம்முறை முதலமைச்சர் பதவி செல்ல வேண்டும் என்று பஷீர் கூறித் திரிந்தார். பஷீரின் ஊரைச் சேர்ந்த நஸீர் அஹமட் முதலமைச்சராக நியமிக்கப்பட இருந்ததாலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். நஸீர் அஹம்மட் முதலமைச்சரானால் தனது அரசியல் செல்வாக்கு அழிந்துவிடும் என்று அஞ்சியே அவர் இவ்வாறு செய்தார். நஸீர் அஹமட் முதலமைச்சராவதைத் தடுக்கும் வேலையில் ஈடுபட்டார். ஆனால்,அவரது திட்டம் பலிக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து பஷீர் கட்சிக்குள் ஒதுக்கப்பட்டு பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்சியின் தலைமைத்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் களமிறங்கினார்.அவர் கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டதால் இன்று கட்சிக்கு எதிராகக் கட்சியின் அதிருப்தியாளர்களை இணைத்துக்கொண்டு முஸ்லிம் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சி செய்கிறார்.எதிர்வருகின்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தனது முதலமைச்சர் கனவை நிறைவேற்ற வேண்டும் என்பதே கூட்டமைப்பின் ஒரே நோக்கமாகும்.

இது நிறைவேறா கனவு என்றே சொல்ல வேண்டும். இந்தக் கூட்டமைப்பு ஓரளவேனும் வலுவான கூட்டமைப்பாக இருக்க வேண்டுமென்றால் ரிசாத் பதியுதீனின் கட்சி பஷீருடன் இணைய வேண்டும். அப்படி இணைந்து வெற்றி பெற்றாலும் முதலமைச்சர் பதவியை ரிசாத் பதியுதீன் பஷீருக்கு ஒருபோதும் வழங்கமாட்டார்.

அடுத்த கிழக்கு மாகாணத் தேர்தலில் எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றி தனது கட்சிமுதலமைச்சர் பதவியைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசையில் றிசாத் இருக்கின்றார்.ஒருவேளை ,றிஷாத்தின் கட்சி ஆட்சியைக் கைப்பற்றினால் குறைந்தது 5000 வாக்குகளைக்கூட பெற முடியாத பஷீர் சேகுதாவூத்துக்கு முதலமைச்சர் பதவியை வழங்குவதற்கு ரிசாத் ஒருபோதும் விரும்பமாட்டார்.

பஷீரின் கூட்டமைப்பில் றிஷாத்தின் கட்சி இணையவில்லை என்றால் அந்தக் கூட்டமைப்பால் ஓர் ஆசனத்தைக்கூட வெல்ல முடியாது.தனது ஊரில் தனக்குப் போட்டியாக எவரும் இருந்திராத நிலையில்கூட பஷீரால் தேர்தல்களில் வெற்றிபெற முடியவில்லை. இந்த நிலையில் அவரது ஊரில் செய்யித் அலி சாஹிர் மௌலானா மற்றும் கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட் ஆகிய இருவரும் பலமடைந்துள்ள நிலையில் பஷீரால் எப்படி பிரகாசிக்க முடியும் ?முஸ்லிம் காங்கிரஸில் இருந்துகொண்டே அவரால் பிரகாசிக்க முடியவில்லையென்றால் முஸ்லிம் காங்கிரசிற்கு எதிரான கூட்டமைப்பில் இருந்து வெற்றிபெறுவது என்பது நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்று. அதுபோக,ஏனைய ஊர்களிலும் அவருக்கு செல்வாக்குக் கிடையாது.கடந்த கால பாராளுமன்றத் தேர்தல்களில் அவர் அடைந்த தோல்விகள் இதற்குச் சான்றாகும்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# வாக்குகளுக்கா போதைப்பொருள் எதிர்ப்பு?




■ ஜெம்ஸித் அஸீஸ்

பாடசாலைகளுக்கு வெளியே இளைஞர்கள் மத்தியில் பாபுல், கஞ்சா, அபின் மற்றும் போதைப் பொருள் பாவனைகள் அதிகரித்துள்ளன. இதனைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறது என்கிறார் அமைச்சர் சாகல ரத்னாயக்க.

கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு இவர் தெரிவித்துள்ளார்.

சில பாடசாலைகளில் உயர் வகுப்பு மாணவர்கள் கஞ்சா பாவித்த பின்னர் வகுப்பறைகளுக்கு வருவதாக தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கூறிய புத்திக பத்திரண எம்.பி, இது தொடர்பில் உங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லையா? என அமைச்சரிடம் கேள்வியும் எழுப்பியுள்ளார். அவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதே அமைச்சரின் பதில். போதைப்பொருள் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் அதற்கெதிராக அரசாங்கம் போர்க்கொடி தூக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். இன்று நகர்ப் புறங்களில் மாத்திரமல்ல, கிராமப் புறங்களின் பட்டி தொட்டியெங்கும் நுழைந்திருக்கின்றன போதைப் பொருட்கள்.போதைக்கு அடிமையான இளைஞர்கள் போதைப் பொருள் பாவனையை பெஷனாக கருதுவது அதனை விட கொடியது.மாபெரும் மாபியாவாக உருவெடுத்துள்ள போதைப் பொருள் பிஸ்னஸ் குடிக்கிறது மனித உயிர்களை. பறிக்கிறது வாலிப வசந்தத்தை. தகர்க்கிறது குடும்ப நிறுவனத்தை. இதன் பாதிப்பு தலைமுறை தலைமுறையாக தொடர்கிறது. முதலில் மாபியாவைக் கட்டுப்படுத்த வேண்டும். மாபியாவை முறியடிக்க முயற்சிக்க வேண்டும். இதனோடு தொடர்புடைய அரசியல்வாதிகள் அம்பலத்துக்கு கொண்டு வரப்படல் வேண்டும்.

அப்படித்தான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சொன்னார். போதைப்பொருளற்ற நாடு தேசிய செயற்திட்டத்தை துவக்கி வைத்து உரை நிகழ்த்துகையில் பேசியது நினைவில் நிற்கிறது. அரச வருமானத்தில் 55 பில்லியன் ரூபா சிகரெட்டுகள் மூலமே கிடைக்கின்றது. மதுபானத்தினால் சுமார் 60 பில்லியன் ரூபா கிடைக்கின்றது. எனவே, மொத்தம் 115 பில்லியன் ரூபா அரச வருமானத்தில் சேர்கின்றது. ஜனாதிபதி என்ற வகையில் ஒரு கையை அல்ல இரண்டு கைகளையும் உயர்த்தி போதைப் பொருள் வர்த்தகத்தை தடை செய்யவும் அனுமதிப் பத்திரங்களை செல்லுபடியற்றதாக்கவும் நான் தயார். நீங்கள் கைகளை தட்டினாலும் இதனை செய்ய முடியுமா? என்ற பிரச்சினை உள்ளது. மறக்க வேண்டாம். நாம் அப்படி செய்தால் அவர்கள் அரசாங்கத்தை கவிழ்ப்பார்கள். எனினும் பரவாயில்லை. பதவிகள் காரணமாகவோ, நட்புரீதியிலாகவோ, போதைப் பொருள் தொடர்பிலான சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் எவருக்கும் சலுகைகளை வழங்க நாம் தயாரில்லை. வழங்கக்கூடிய அதிகபட்ச தண்டனையை வழங்க வேண்டும். சட்டபூர்வமான மற்றும் சட்டவிரோத போதைப் பொருளால் நேரடியாகவும் மறைமுகமாகவும் இலங்கையில் வருடாந்தம் சுமார் 40,000 பேர் உயிரிழக்கின்றனர். இந்த சவாலை வெற்றிகொள்வது இலகுவானது அல்ல. ஜனாதிபதி அவர்களே, நினைவிருக்கிறதா? நல்லாட்சி அரசாங்கத்தின் தேர்தல் கால கோஷமாக போதை எதிர்ப்பு இருந்ததே! இப்போது அந்தக் கோஷம் எங்கே போனது? தேர்தல் கால கோஷமாக, வெறும் வாய்ச் சவாடலாக மாத்திரம் இருந்தால் போதைப் பொருளற்ற நாடாக எப்படி மாறும் நம் தேசம்?

# கர்ப்பகாலத்தில் நீரிழிவை கட்டுப்படுத்துங்கள்



ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் கர்ப்பகாலம் தனிச்சிறப்பு வாய்ந்தது. ஒரு பெண் தனது உடலில் மேலும் ஓர் உயிரை சுமக்க தயார் ஆகுவதோடு அதனை இவ்வுலகிற்கு வரவேற்கவும் தயாராகிறாள். இந்தச் சமயத்தில் அவளுக்கு தேவையான உடல் நல பராமரிப்பு அவசியமான ஒன்றாகும்.

நீரிழிவு நோயாளர்கள் அதிகரித்து வருவதைப்போன்று கர்ப்பிணி பெண்களுக்கும் நீரிழிவு நோய் ஏற்படுவது தற்போது இலங்கையில் அதிகரித்து வருகின்றது. அதில் கர்ப்பிணி பெண்களுக்கு ஏற்படும் நீரிழிவு பிறக்கவிருக்கும் குழந்தைகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படவிருக்கும் பாரிய விளைவுகளை கருத்திற்கொள்ளாது கர்ப்பிணித் தாய்மார்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளாமலிருக்கின்றனர்.

''உங்கள் குழந்தை உங்களுக்கோர் அருஞ் செல்வம் நீங்கள் இருவருமே நாட்டிற்கோர் பெருஞ் செல்வம்'' இந்த தொனிப்பொருளில் மார்ச் மாதம் 10 ஆம் திகதி நீரிழிவு கர்ப்பிணிக்கான தினம் கொண்டாடப்படுகிறது.

இரத்தப் பரிசோதனையொன்றை மேற்கொண்டு நீரிழிவு நோயை இனங் கண்டு கொள்ளுங்கள். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படும் நீரிழிவு நோயை இரு வகையாகப் பிரிக்கலாம்.

1. கர்ப்பம் தரிப்பதற்கு முதல் ஏற்படும் நீரிழிவு,

2.கர்ப்பம் தரித்தபின்பு ஏற்படும் நீரிழிவு. நீங்கள் கர்ப்பமடைந்து இருப்பீர்களாயின் முதல் 3 மாதங்களிற்குள் (முதல்12) கிழமைக்குள்) மீண்டும் 6-7 மாத காலத்திற்குள் (24 - 28 கிழமைக்குள்) உங்களுக்குள் கர்ப்பகாலத்திற்குள் பின்பு வருடத்திற்கு ஒருமுறை.

கர்ப்பகாலத்தில் நீரிழிவுநோயைக்கட்டுப் படுத்தாவிடின்.

★குழந்தை அசாதாரணமான முறையில் அளவில் பெருத்தல் ★குழந்தை குறைமாதத்தில் பிறத்தல் ★குழந்தை பிறப்பில் ஏற்படும் குறைபாடுகளுக்கு ஆளாகுதல்

★(உ-ம்) இதயத்தில் துவாரம் ★குழந்தை கர்ப்பத்தில் இறத்தல் ★தாய்க்கு கர்ப்பகாலத்தில் உயர்குருதி அமுக்கம் ஏற்படல் ★தாய் சிசேரியன் சத்திரசிகிச்சைக்குள்ளாக வேண்டியிருக்கும் பிரசவத்தின் பின்னர் அதிக குருதிப்போக்கு ஏற்படல் ★தாய்க்கு மீண்டும் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான அபாயம் காணப்படல்.

பெண்கள் கர்ப்பம் தரிப்பதற்கு நீரிழிவு பற்றி பரிசோதனை (இரத்தம், சிறுநீர்,) செய்துகொள்ளவேண்டும். தற்போது இலங்கையில் பரிசோதனை முறைகளை மேற்கொள்வதற்கு இலவச வைத்திய சேவைகள் முன்னெடுக்கப்படுகிறன. டைப் 02 வகையான நீரிழிவு காணப்படுமாயின் அதிக பாதிப்புக்கள் கர்ப்பிணித்தாய்க்கும், குழந்தைக்கும் ஏற்படும்.

சிலருக்கு கர்ப்பம் ஆகும் முன்னரே நீரிழிவு நோய் இருக்கும். இப்படி ஏற்கனவே நீரிழிவு நோய் இருக்கும் கர்ப் பிணிகள், வெறும் வயிற்றில் இரத்த அளவு 90 மி.கி /டிஎல் எனவும், சாப்பிட்ட 2 மணி நேரம் கழித்து இரத்த சர்க்கரை 120 மி.கி /டிஎல் மற்றும் HbAic 6.5% க்கும் கீழே இருந்தால், நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் உள்ளது என்று அர்த்தம்.

இதைத் தெரிந்து கொள்ள மருத்துவரின் முதல் சந்திப்பு அன்று நான்காவது மற்றும் ஏழாவது கர்ப்ப மாதங்களிலும் கர்ப்பிணிப் பெண்ணுக்கு 75

## வாரம் ஒரு நோய்

கிராம் குளுக்கோஸை குடிக்கச் செய்து 2 மணி நேரம் கழித்து இரத்த சர்க்கரை 140 மிகி /டெலிட்-க்கு மேல் இருந்தால், கர்ப்பிணிப் பெண்ணுக்கு கர்ப்பகால நீரிழிவு நோய் இருக்கிறது என்று அர்த்தம். அதற்கு மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை பெற வேண்டும். மார்ச் 10 ஆம் திகதி கர்ப்பிணித்தாய்மார்களும், மற்றும் கர்ப்பம் தரிக்க முன் பெண்கள் இரத்தப் பரிசோதனைகளை இலவசமாக செய்துகொள்ளலாம்.

இரத்தத்தில் சீனியைப் பரிசோதிப்பதன் மூலம் மாத்திரமே நீரிழிவு நோயை இனங்காண முடியும். நீரிழிவுநோயை இனங்கண்டு அதனை கட்டுப்படுத்துங்கள். இது தாயினதும் சேயினதும் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.



# இளமையும் விவேகமும்; இளைய சகோதரனிடம் கற்றவை

**2016 ஒக்டோபர் 11ஆம் திகதி காலஞ்சென்ற ஆதில் பாகிர் மாகாரின் 27ஆவது பிறந்த தினம் இம்மாதம் 11ஆம் திகதி இடம்பெறுகிறது. அதனை முன்னிட்டு அவரது சகோதரரால் எழுதப்பட்ட இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

மார்ச் 11 ஆம் திகதி ஆதில் 27 வயதை அடைந்திருப்பார், இருப்பினும் அந்த இளம் உயிர் எம்மைவிட்டும் பிரிந்து சுமார் 5 மாதங்கள் கடந்துவிட்டது. மற்றைய நாட்களைப் போலவே அன்றைய நாளும் அவரைப் பற்றி, அவர் என்ன செய்கிறார், வாரஇறுதி தினத் திட்டங்கள், கல்வி, கிரிக்கெட் என ஒன்றுவிடாமல் எதையெல்லாம் கதைத்திருப்பேன். ஆனால் இன்று அவரை இழந்து நான் இங்கு அமர்ந்து கிடக்கின்றேன். மன ஆறுதலுக்காக பழைய நினைவுகளை மீட்டி, அவருக்குப் பாதுகாப்பும், மகிழ்ச்சியும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

1991 மார்ச் 11ஆம் திகதி வரை தொடரும் எனது முதல் நினைவுகளில் ஒன்றை நான் மிகுந்த விருப்புடன் ஞாபகப்படுத்துகின்றேன். அன்றைய தினம் எனக்கு சுமார் 6 வருடங்களும், ஆதிலுக்கு 1 வருடமும் பூர்த்தியாகி இருக்கும். 100 ரூபா நோட்டுடன் ஆதிலுக்கான எனது முதல் பரிசை எடுப்பதில் நான் மிகவும் ஆவலாக இருந்தேன். பாடசாலை முடிந்தவுடன் எனது மாமியுடன் மருதானையில் ஒரு கடைக்குச் சென்று அவருக்காக செம்மஞ்சல் நிறத்தில் ஒரு கிலுகிலுக்கியை வாங்கினேன். வீடு திரும்பியவுடன் அதனை அவருக்குக் கொடுத்துவிட்டு நானும் கூடி விளையாடியது இன்னும் எனக்கு நினைவில் உள்ளது.

வீட்டிலிருந்து ஆயிரம் மைல்கள் தொலைதூரத்தில் உள்ள ஒரு நாட்டில், இலங்கையிலிருந்து புறப்பட்டு ஒரு மாதத்துக்குப் பின்னர் 2016 ஒக்டோபர் 11 ஆம் திகதி பின்நேரம் அல்லது 12 ஆம் திகதி துவக்கத்தில் ஆதில் எம்மை விட்டுப் பிரிந்தார். நவீன மருத்துவ தொழில்நுட்பங்கள் வளர்ச்சியுற்ற நிலையிலும், இந்த உலகத்திலிருந்து அவர் மறைவுக்கான மருத்துவக் காரணிகள் இன்னும் விளக்கப்படாமலேயே உள்ளது. இறைவனிடமிருந்தே நாம் வந்தோம், அவனிடமே நாம் திரும்புகிறோம். தனது படைப்புக்களை மீளப்பெறுவதற்கு இறைவனுக்குக் காரணம் தேவையில்லை. குறித்த தினத்தில் நம் அனைவரும் ஒன்றிணையும் வரை ஆதில் சர்வ வல்லமைமிக்கவனின் பராமரிப்பில் உள்ளார் என்பதை அறிந்து நாம் குடும்ப உறுப்பினர்களாகவும், அவரது பல நண்பர்களுடனும் ஒன்றாக சாந்தியடைகின்றோம். நிச்சயமாக அவர் ஒரு சிறந்த இடத்தில் உள்ளார். சர்வ வல்லமைமிக்க அல்லாஹ் அவரை மன்னிப்பானாக, அவர் மீது கருணை காட்டுவானாக, அவரை சுவர்க்கத்துக்கு நுழையச் செய்வானாக! ஆமீன்.

அன்றைய மாலை, நடந்த விடயம் கேள்விப்பட்ட மறுகணம் அதனை எனது சகோதரர்களுக்கும் பெற்றோருக்கும் அறிவித்த தருணம், எம் அனைவருக்கும் அது உலக அழிவை விட சற்றும் குறைந்ததொன்றாக இருக்கவில்லை. ஒரு நொடிப்பொழுதில், அதாவது சில நிமிடங்களில் அவரது இறுதிக் கிரியைகள் லண்டனிலேயே செய்யப்படவேண்டும் என்றே எமது உள்ளங்களில் தோன்றியது. அதாவது அவரை இறுதியாக ஒரு தடவையேனும் காணும் சந்தர்ப்பத்தையும் நாம் நழுவவிடுவதாகவே அது இருந்தது. காரணம் அறியப்படாமல் மரணித்த ஓர் இளைஞனின் பிரேதம் அமைதிபெற கால அவகாசத்துடனான பல செயற்பாடுகள் பூர்த்தியடைய வேண்டும். இறைவனின் அருளால் அவரை வீட்டுக்கு எடுத்துவரும் அவகாசம் கிடைத்தது. இன்று, அவருக்கு அஸ்ஸலாமு அலைக்கும் (உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!) என ஸலாம் கூறவும், அவருக்காகப் பிரார்த்திப்பதற்கும், அவரைப் பிரிந்து நாம் தவிப்பதைக் கூறவும் வசதியாக அவரது உடல் எமது வீட்டுக்கு அருகாமையில், அதாவது சில நிமிடங்கள் நடக்கும் தூரத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

அவர் எம்மைப் பிரிந்து 5 மாதங்கள் கடந்துவிட்டது. அனைத்துவிடயங்களும் ஒரு மாயமாகவே இன்னும் தெரிகிறது. அது ஒரு கெட்ட கனவு அதிலிருந்து நாம் மீள வேண்டும். அது இறைவனின் நியதி அதனை நாம் ஏற்க வேண்டும். ஆனால் மனிதர்கள் உணர்வுகளுக்கு அடிமையாகியுள்ளனர்.

ஆதில் கொழும்பு றோயல் கல்லூரியின் ஒரு பழைய மாணவன். அவர் தனது உயர்தர கல்வியை ஏசியன் சர்வதேச பாடசாலையில் கற்றதுடன், இலங்கை சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தைப் பெற்றார். ஐக்கிய நாடுகளின் இளைஞர் பிரதிநிதிகள் சம்மேளனத்தில் தனது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஆதில் தேசிய இளைஞர் மன்றத்தின் பணிப்பாளர்களில் ஒருவராகவும் பணியாற்றினார். அவர் லண்டன் பொருளாதாரம் மற்றும் அரசியல் விஞ்ஞானங்களுக்கான பல்கலைக்கழகத்தின் (London School of Economics and Political Science & LSE) ஒப்பீட்டு அரசியல் துறையில் முதுமாணிப்பட்டப் படிப்பு மாணவனாகவும், செவெனிங் (Chevening) புலமைப்பரிசில் திட்டத்தின் கீழான புலமையாளராகவும் இருந்தார். ஆதிலின் பிரிவையடுத்து, அவருடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்த பலர் அவரை நினைவுகூர பல விடயங்களைச் செய்தனர். றோயல் கல்லூரியின் 2009 குழு மற்றும் சட்டக்கல்லூரி சகாக்கள் பல்வேறு சமய நிகழ்வுகளை ஏற்பாடுசெய்திருந்தனர். ஏசியன் சர்வதேச பாடசாலை சகாக்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் தற்போதைய பாடசாலை அணிக்கு இடையிலான ஆதில் பாகிர் மாகார் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டியை ஏற்பாடுசெய்துகொண்டார். அவற்றில், எமக்கு மிகக் குறுகியகால வாழ்வே உள்ளது என்பதும், எளிமை மற்றும் மற்றையவர் மீதான அக்கறை என்பன நாம் அனைவரும் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இறைபக்தியுடனான ஆதில் வல்ல இறைவன் மீது திடமான நம்பிக்கையுடன் பேணிப்பாக வழிபட்டார். அவரது சுகம் விசாரித்த தனது மருமகளுக்கு ஆதில் இறுதியாக அனுப்பிய குரல் வழித் தகவலில் பரவாயில்லை நான் சுகமாக உள்ளேன், சிறிது காய்ச்சலாக உள்ளது. இன்ஷா அல்லாஹ் எல்லாம் சரியாகிவிடும் எனக் கூறியுள்ளார். இன்ஷா அல்லாஹ் என்பது இறைவனின் விருப்பு எனப் பொருள்படும், இங்கு இறைவன் விரும்புமிடத்து காய்ச்சல் சுகமாகிவிடும் என அவர் குறிப்பிடுகின்றார். இன்ஷா அல்லாஹ் அவர் இறைவனின் பாதுகாப்பில் அவனது கருணையுடன் மிகவும் சுகமாக இருப்பார்.

அவரது இறுதிப் பயணம் உயர் கல்வியை முன்னெடுப்பதற்காக அறிவைத் தேடியதாகும். ஆதில் அறிவைத் தேடுவதற்கு அதி முக்கியத்துவம் வழங்கினார். இளையோர்களுக்கும் முதியோர்களுக்கும் செவிமடுத்தும், பத்திரிகைகள் மற்றும் புத்தகங்களை வாசிப்பதன் மூலமும் அவர் மேலும் அறிவைத் தேடியதுடன் இளையோர்களையும் கல்வியைத் தேடுமாறும் எப்போதும் ஊக்குவித்தார்.

மற்றையவர்களுக்கு உதவுவதும், அனுதாபம் காட்டுவதும் ஆதிலின் விஷேட பண்புகளாகும்.

அதன் நினைவு நிகழ்வில் 'சிறந்த கிரிக்கெட் வீரருக்கான ஆதில் பாகிர் மாகார் கிண்ணத்தையும்' வழங்கியதுடன் அது பாடசாலைக்கு வருடாந்தம் வழங்கப்படவும் உள்ளது. அவர் உள்ளகப்பயிற்சிபெற்ற சட்ட நிறுவனங்களின் சக பயிலுனர்கள் களுத்துறை அநாதை இல்லத்தில் சிறுவர்களுக்கான ஒரு செயற்பாட்டுத் தினத்தை ஏற்பாடு செய்திருந்தது. LSE யில் செவெனிங் புலமையாளர்களின் ஆரம்ப நிகழ்வின் போது ஆதிலுக்காக ஒரு நினைவு நிகழ்வு இடம்பெற்றதுடன் கிரிக்கெட் அணியினரால் ஒரு நிமிட மௌன அஞ்சலியும் அனுஷ்டிக்கப்பட்டது. LSE இஸ்லாமிய சங்கம் ஆதிலின் பெயரில் ஒரு குடிநீர்த் திட்டத்தை ஆரம்பிக்கும் நோக்கில் நிதி சேகரித்துக்கொண்டுள்ளதுடன் அவர்களில் ஒரு நண்பன் தனது நாட்டுக்கு விடுமுறையில் செல்ல செலவாகும் விமானப் பயணச்சீட்டுத் தொகையைக் கொண்டு ஒரு வறிய குடும்பத்தின் வீட்டுக் கூரையை திருத்திக் கொடுத்துள்ளார். மேலும், ஆதில் கல்விகற்ற மற்றும் கற்பித்த அஹதியா (அறநெறிப்) பாடசாலையின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒரு சமய நிகழ்வை நிகழ்த்தியுள்ளனர். பேருவலை கோல்டன் கேட் சர்வதேச பாடசாலை ஆசிரியர் குழாம் கல்விச் சாதனைக்கான தமது வருடாந்த விருதை 'ஆதில் பாகிர் மாகார் விருது' என அர்ப்பணிப்புச் செய்துள்ளது. நாம் அறிந்த மற்றும் அறியாத மட்டத்தில் ஆதிலின் பெயரால் அன்புடன் இவ்வகையான நடவடிக்கைகளை செய்து அவருக்காக பிரார்த்தனை செய்து எம்முடன் இருந்த அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆதிலை நினைவுகூர்ந்து இவ்வாறான நன்மை பயக்கும் செயல்களைச் செய்வதில் பலர் எவ்வாறு ஒன்றிணைந்தனர் என்பது என்னை வியக்கவைத்தது. ஆதிலின் திடீர் மறைவில் பாரிய நினைவுகளைச் சுமந்த இவர்கள் அனைவரும் ஓர் அன்பு உள்ளத்தை, ஒரு நண்பனை, ஒரு சகாவை, மற்றும் ஒரு பெறுமதிமிக்க சகோதரனை இழந்துள்ளனர் என்பதை நான் புரிந்துகொண்டேன். ஆதில் மிகவும் பணிப்பலம் கொண்டவர் நண்பர்களுடனும், குடும்பத்துடனும் நெருங்கிய உறவை வைத்திருந்தவர் என்பதை நாம் அறிவோம். ஆனால் அது நாம் அறிந்ததைவிடப் பல மடங்கு வலுவானது என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. இலங்கையின் அனைத்துத் திசைகளிலிருந்தும், அதற்கு அப்பாலிருந்தும் பொழிந்த அன்பு மழை அதனை உறுதிப்படுத்துகின்றது. யாரோ ஒருவர் குடும்பத்துக்கு எழுதிய கடிதத்தில் இருந்த ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன், எனக்கு ஒரு போதும் சந்திக்கக் கிடைக்காத ஒருவர் எவ்வாறு மிகவும் ஆழமான முறையில் எனது வாழ்வில் தாக்கம் செலுத்தி ஒரு சொற்பகால வாழ்வு மற்றும் துன்யாவின் (இம்மை உலகு) முக்கியத்துவத்துவம் பற்றிய எனது முழுமையான நோக்கை எவ்வாறு மாற்ற முடியும் என்பதே எனது கேள்வி? 2016 ஒக்டோபர் 14 ஆம் நாள் இரவு பி.ப. 11.45 மணிக்கு முகநூல் ஊடாக நான் அவரது மரணம் பற்றி அறிந்த வேளை, நான் தர்மசங்கடமடைந்தேன். நான் ஆதிலை தனிப்பட்ட வகையில் அறிந்திருக்கவில்லை ஆனால் அவரது திடீர் மறைவு என்னையும் கலங்கவைத்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்...

ஒருவர் எவ்வாறு பரவலாகவே பலரையும் அதிர்ச்சியடையச் செய்ய முடியும் என சிலர் வியப்படையலாம். அதற்கான பதில் ஆதில் ஆதிலாக இருந்தார் என்பதாகும். அவர் மிகவும் பணிவாகவும், எளிமையாகவும், சிநேகபூர்வமாகவும் இருந்தார். அவர் அன்பின் படைப்பாக எப்போதும் கவர்ச்சிமிக்க புன்னகையுடன் இருந்தார்.

அவரது வாழ்விலும் மரணத்திலும், எம் அனைவரிடத்தும் ஆதில் சில விடயங்களைப் பகிர்ந்த எனது மூத்த சகோதரனுக்கான ஆதிலின் கடைசி மின்அஞ்சலில், தொழில் தேடும் ஒரு நண்பருக்கு வழிகாட்டி உதவுமாறு அவரை வேண்டியிருந்தார். அவர் இந்த உலகைவிட்டுப் பிரிவதற்கு சில தினங்களுக்கு முன்னர் அவரது கடைசி மின்அஞ்சல் ஒன்றில், அவர் பல்கலைக்கழகத்தில் சந்தித்த ஒரு நண்பன் ஊடகத்துறையில் உயர்கல்வியைத் தொடர விரும்புவதால் அவருக்கு வழிகாட்டுமாறு ஐக்கிய அமெரிக்காவிலிருந்து செயற்படும் ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளரை ஆதில் வேண்டியிருந்தார்.

அவர் எம்மைப் பிரிவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர், அவர் எமது தாயின் பிறந்த தினத்திற்கு அனுப்பிய வாழ்த்து அட்டை அவரது மறைவின் இரு வாரங்களின் பின்னர் எமக்குக் கிடைக்கப்பெற்றது. அதில் தனது சகோதரங்களுடன் பாராட்டும் ஒரு வலுவான செய்தியை ஆதில் பகிர்ந்துகொண்டுள்ளார். அவரது வசனங்கள் அன்புள்ள உம்மா (அம்மா), இது உங்களது பிறந்த தினத்தை நான் தவறவிடும் ஓர் அரிய சந்தர்ப்பமாகும்! இது உங்களைப் போன்ற ஓர் அன்பான பரிவுடனான ஒரு தாயைப் பெற்ற உங்களது ஐந்து புதல்வர்களும் எவ்வளவு நன்றியுணர்வுடன், பெருந்தன்மையுடனும், பாக்கியம் பெற்றுள்ளார் என்பதை நினைவூட்டுகிறது!!! அல்ஹம்துலில்லாஹ் (புகழ் அனைத்தும் இறைவனுக்கே)! நீங்கள் அறிந்ததைவிட (நான்) உங்களை இழந்துள்ளேன்!!! அதிக அன்பு! ஆதில்!என எழுதப்பட்டிருந்தது.

2015 இல், இளைய சகோதரர் தனது கல்விக்காக வெளியே செல்லத் தயாராகும் வேளை ஆதில் அவருக்கு ஒரு சிறிய ஆலோசனையை வழங்கினார். அவர் கூறியதாவது என்றும், எப்போதும் சரியானதையே செய்யுங்கள் என்பதாகும். இதுவே இளவயது ஆதிலின் விவேகம்.

தனிப்பட்ட ரீதியில் எனக்கு, ஒரு நாள் ஒரு உயிரைப் பெற்று அடுத்த நாளே அதன் பிரிவை ஏற்க முடியுமாக இருக்கும் வாழ்வும், மரணமும் ஒரு பெரிய பாடமாக அமைந்தது. இது மரணத்தின் நிச்சயத்தன்மையை நான் எவ்வாறு திருமறை நோக்கில் பார்க்கின்றேன் என்பதைக் குறிக்கின்றது. நான் எனது சகோதரனை மீண்டும் சந்திக்க காத்திருக்கும் வேளை, எம்மைச் சுற்றியுள்ள மக்களை மதித்து, அவர்களுக்கு உதவி, சரியானதை செய்து, எனது அவகாசத்துக்காக தயார்படுத்தல் என்பன நிச்சயமாக நான் கற்ற விடயங்களாகும். நீங்கள் ஒருபோதும் சந்தித்திராத ஆனால் அவரின் புகைப்படத்தைக் கண்ட இளம் ஆதிலின் இந்தப் பாடமானது உங்களது பிள்ளைகள், எனது மகன், ஆகியோருக்கும் பகிரப்படும்.

பொதுவாக, இவை ஆதில் அவரது வாழ்வு மற்றும் மறைவில் எம்முடன் பகிர்ந்துகொண்ட சில அற்புதமான வாழ்வியல் பாடங்கள். அவர் எம்முடன் இருந்த குறுகிய காலப்பகுதியில் அந்த சிறந்த மனிதனை அறியக்கிடைத்தமை எமக்குக் கிடைத்த அதிஷ்டமாகும். இவ்வாறே அவர் நினைவு கூரப்பட வேண்டும் என அவர் எண்ணியிருப்பார் என நான் நம்புகிறேன். ஆகவே நாம் அனைவரும் எமது பங்கைச் செய்ய முயற்சிப்போமாக.

ஆதில் விட்டுச்சென்ற பாடங்கள் ஒரு போதும் மறக்கடிக்கப்படக் கூடாததும் மறக்க முடியாததுமாகும். அதன் காரணமாகவே பிரிந்த ஆத்மாவுக்கு நன்மை கிடைக்கும் வகையிலும், ஆதில் எம்மிடம் விட்டுச் சென்ற நோக்கை அன்புடன் தொடர்வதற்கும் அவரது குடும்பம் மற்றும் நண்பர்கள் இணைந்து ஆதில் பாகிர் மாகார் நிறுவனத்தை நிறுவியுள்ளனர். கால அவகாசம் இருப்பின் எமது பங்கைச் செய்யவும் ஆதில் கையளித்த இடத்திலிருந்து தொடரவும் எம்முடன் கைகோர்த்துக் கொள்ளுங்கள்.

போராட்டம் தொடர்ந்தாலும், உங்கள் அனைவரிடத்தும் நான் வேண்டுவது உங்களது பிரார்த்தனைகளில் எப்போதும் எனது இளம் சகோதரன் ஆதிலையும் எங்களையும் நினைவு படுத்துங்கள். எம்முடன் எங்களுக்காக தொடர்ந்தும் இருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

ஆதிலின் அற்புதமான சகோதரத்துவத்துக்கும் நினைவுகளுக்கும் நன்றிகள்! நீர் எங்களது உள்ளங்களில் என்றும் நிலைகொண்டிருப்பீர். நாம் உம்மை பாசத்துடன் இழந்துவிட்டோம்.

சகோதரரே நாம் மீண்டும் சந்திக்கும் வரை, பாதுகாப்பாக இருப்பீர்.

## இனிப்பும் கசப்பும்

**– வைஸ்**

## கதீப் முஅத்தின் வாழ்வு விடிவு பெறுமா?

ஸ்ரீலங்கா கதீப், முஅத்தின் நலன்புரி அமைப்பின் 20ஆவது தேசிய மாநாட்டை நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக ஊடகங்கள் மூலம் அறியக் கிடைத்தது.

கண்டியில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் மஸ்ஜித் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள 75வயதுக்கு மேற்பட்ட கதீப், முஅத்தின்கள் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அந்த ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

75வயதான பின்னராவது இவர்கள் பாராட்டப்படுவது பாராட்டத்தக்கது. இந்த செய்தியை வாசித்தவுடன் சில கதீப், முஅத்தின்கள் என் கண் முன் நினைவில் வந்து நின்றனர். சிலர் தனது வயோதிப காலத்தில் எந்த ஆதரவும் இன்றி பொருளாதார கஷ்டத்தில் வாழ்ந்தனர். வாழ்ந்தும் வருகின்றனர். சிலர் நோயுற்று கவனிப்பாரற்று கஷ்டப்படுகின்றனர்.

எங்களுக்கு நல்வழியைக் காட்ட உழைத்த இவர்களை நாம் அவர்கள் பதவி வகித்த காலத்தில் சரியாக கவனித்தோமா? அல்லது வயது காரணத்தினாலோ நோய் காரணத்தினாலோ இளைப்பாறிய பின் சரியாக கவனித்தோமா? என்று எம் சமூகத்திடம் எவராவது கேட்டால் இல்லை என்ற பதிலைத்தான் கூறவேண்டும்.

அந்த கதீப்களின் சேவைகள் எமக்கு வழிகாட்டத்தேவை. போதனை செய்து எம்மைத் திருத்தத் தேவை. எமது மார்க்கப் பிரச்சினைகளுக்கு பத்வா தேவை. எம்மை தொழுவிக்கத் தேவை. தொழப் பயிற்றுவிக்கவும் தேவை. குர்ஆன் ஓதக் கற்பிக்கத் தேவை. மார்க்க வகுப்புக்கள் நடத்தத் தேவை. நாம் பிறந்தது முதல் இறந்தது வரை மட்டுமல்ல இறந்ததன் பின்னரும் தேவை.

ஜனாஸாவைக் குளிப்பாட்டி, கபனிட்டு, தொழுவித்து, அடக்கம் செய்வதும் அநேக இடங்களில் இவர்களே. அதன் பின் பாத்திஹா ஓதுவது, யாசீன் ஓதுவது, குர்ஆன் தமாம் செய்வது என அனைத்தும் இவர்களே!

முஅத்தினை நோக்கினால் எம்மை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது அவரே. ஆம் அதான் கூறி எம்மை பள்ளிக்கு அவர் அழைக்கிறார். இகாமத் கூறி முன் வரிசைக்கு அழைக்கிறார். இது மட்டுமா? பள்ளியினை கூட்டிக் கழுவி துப்பரவு செய்கிறார். பள்ளியை மட்டுமா பள்ளி மலசல கூடங்களை கழுவுபவர்கள் இந்த முஅத்தின்களே. மலசலகூடங்கள் கழுவும் தொழில் இன்றும் அன்றும் இழிவாகவே கருதப்படுகிறது. ஆனால் முற்காலத்தில் இருந்து தற்காலம் வரை சமூகம் இழிவாக நினைக்கும் இந்தத் தொழிலை அந்த முஅத்தின்கள் மனமுவந்து செய்கின்றனர்.

எந்தத் தொழிலுக்கும் இரு பருவங்கள் உண்டு. ஒன்று தொழில் செய்யும் காலம். மற்றது இளைப்பாறிய காலம். இந்த இரண்டும் கதீப், முஅத்தின்மாருக்கும் உண்டு. தொழில் செய்பவர்களுக்கு இளைப்பாறும் வயது ஒன்று உண்டு. அதன் பின் இளைப்பாற வேண்டும்.

கதீப், முஅத்தின்களைப் பொறுத்தவரை தொழில் செய்யும் காலமும், இளைப்பாறும் காலமும் நிச்சயமற்றது. பள்ளிப் பரிபாலன சபை நினைத்தவுடன் இவர்களை நீக்கிவிடுவார்கள். உடனே நின்றுவிட வேண்டியதுதான். வேறு பள்ளியைத் தேட வேண்டும். வருடா வருடம் மத்ரஸாக்களில் இருந்து வெளிவரும் உலமாக்களின் அளவைப் பொறுத்தவரை பலத்த போட்டி நிலவுகிறது.

இலங்கையிலே தொழில்புரியும் அனைவருக்கும் சம்பள அளவு நிர்ணயிக்கப்படுகிறது. இதற்கென சம்பளக் கட்டளைச் சட்டம் செயல்படுத்தப்படுகிறது. இச்சபை ஒவ்வொரு தொழிலுக்கும் ஆகக் குறைந்த சம்பளத்தை நிர்ணயித்துள்ளது. அதைவிட குறைந்தது வழங்க முடியாது.

ஆனால் எமது கதீப், முஅத்தின்களுக்காக சம்பளம் எங்குமே விதிக்கப்படவில்லை. இன்று கடைகளில் சிறு தொழில் புரியும். இளைஞர்களுக்கு நாளாந்த சம்பளமாக 700 ரூபா முதல் 1200 ரூபா வரை வழங்கப்படுகிறது. பஸ் சாரதிகளுக்கு நாளாந்தம் 1500 ரூபா வழங்கப்படுகிறது. இவர்களுக்கு சாப்பாடும் சில இடங்களில் போக்குவரத்து செலவும் வழங்கப்படுகிறது.

ஆனால் எமது கதீப், முஅத்தின்களின் சம்பளங்களைப் பாருங்கள். அநேகமான பள்ளிகளில் 10ஆயிரம் 15 அயிரம் வரையிலேயே உள்ளது. நாளாந்தம் 350ரூபா முதல் 500 ரூபாவாக உள்ளது.

குடும்பஸ்தர்களான இவர்களுக்கு இது போதுமா? என்று சிந்திப்போம். இன்று இந்தத் தொகையில் குடும்ப அங்கத்தவர்களுக்கு உணவு வழங்கலாமா, பிள்ளைகளுக்கு அல்லது தனக்கு நோய் வந்துவிட்டால் இந்தச் சம்பளம் உணவுச் செலவுக்கே போதாத நிலையில் வயோதிப காலத்திற்கு சேமித்து வைக்கலாமா?

நீங்கள் நின்றுவிடுங்கள் என்று நிருவாகம் அறிவித்தவுடன் நின்று விட வேண்டும். அதன் பின் அவர்கள் நிலைமை என்ன? உடனடியாக வேறு பள்ளியில் தொழில் கிடைக்காவிட்டால் உணவுக்கு என்ன செய்வது?

வயோதிபம் ஆனவுடன் இவர்கள் நிறுத்தப்பட்டுவிடுவார்கள். தொழில்புரியும் காலத்தில் சேமிப்பு இல்லை. சேமிக்கும் அளவுக்கு வருமானம் இல்லை. இவர்கள் என்ன செய்வது இவர்களது வாழ்க்கை எவ்வாறு நடக்கும்.

தொழிலாளர்களுக்கு ஈ.பீ.எப். எனும் ஊழியர் சேமலாபநிதி இருக்கிறது. அல்லது ஓய்வூதியம் இருக்கிறது. ஊழியர் நம்பிக்கை நிதியம் இருக்கிறது. ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர் இறந்தபின் அவர்களது மனைவிமாருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த ஒன்றுமே எமது கதீப், முஅத்தின்களுக்கு இல்லை.

அவர்களும் மனிதர்களே! மனிதர்கள் மட்டுமல்ல எமக்காக உழைத்தவர்கள் உழைப்பவர்கள். இஸ்லாம் தொழிலாளர்களை உழைப்பாளிகளைக் கவனிக்க வேண்டிய விதம் பற்றி நன்கு விளக்கியுள்ளது.

எனவே இவர்களுக்கான அதிகுறைந்த சம்பள எல்லை நிர்ணயிக்கப்பட வேண்டும். இதனை உலமா சபைகளும் முஸ்லிம் விவகாரத் திணைக்களமும் இணைந்து செய்ய வேண்டும். அதனடிப்படையில் சம்பளம் வழங்க பள்ளி நிர்வாக சபைகளை நிர்ப்பந்திக்க வேண்டும்.

அத்தோடு ஊழியர் சேமலாப நிதி முறையொன்று உருவாக்கப்பட வேண்டும். மத்திய வங்கியின் கீழ் தற்போது இயங்கும் இந்த சபை வட்டியோடு சம்பந்தப்படாததால் இஸ்லாமிய வங்கி ஒன்றுடன் கதைத்து அது போன்ற முறை உருவாக்கப்பட வேண்டும். கதீப், முஅத்தின் சம்பளத்தில் 8 சதவீதமும் பள்ளி நிர்வாகத்தில் 12 சதவீதமுமாக 20 சதவீதம் இவர்களது தனிக் கணக்கில் இடப்பட்டு 60 வயதின் பின் இலாபத்தேடு சேர்த்து இவர்களுக்கு வழங்க வேண்டும். இதற்கு மேலதிகமாக இஸ்லாமிய முறையிலான காப்புறுதியொன்றும் செய்யப்பட வேண்டும். இதற்கான செயற்பாடுகளை முஅத்தின் கதீப் சம்மேளனம் முன்னெடுக்க வேண்டும்.



நவமணி





உலகிலேயே மிகச்சிறிய தவளை கரீபியன் தீவில் இருக்கிறது. இதன் அதிகபட்ச நீளம் 1 செ.மீ.தான். குட்டியான தவளையாக இருந்தாலும் இது விஷத்தன்மை வாய்ந்தது. இதற்கு 'ரோபர்' என்று பெயர்.



# முளைவிடும் அரும்புகள்

பவித்ரா

## ஐந்தின் மகத்துவம்

பஞ்சலோகம் - இரும்பு, பொன், வெள்ளி, செம்பு, ஈயம்.
பஞ்சவர்ணம் - கருப்பு, சிவப்பு, பச்சை, மஞ்சள், வெள்ளை.
பஞ்சவாசம் - ஏலம், இலவங்கம், கற்பூரம், திப்பிலி, ஜாதிக்காய்.
பஞ்சரத்தினம் - பொன், சுகந்தி, மரகதம், மாணிக்கம், முத்து.
பஞ்சபூதம் - ஆகாயம், காற்று, நிலம், நீர், நெருப்பு.

**உங்களுக்கு எந்த விஷயத்தில் திறமை உள்ளதோ அதிலேயே கவனத்தையும் நேரத்தையும் அதிகம் செலுத்துங்கள். மற்ற விஷயங்களுக்காக அதிக நேரம் செலவழிக்காதீர்கள்.**

## குதிரை நண்டு

குதிரை நண்டு அல்லது கிங் நண்டு என்று அழைக்கப்படும் இந்த நண்டு இனம் பல மில்லியன் வருடங்களாக பூமியில் வாழ்கிறது. இது ஒரு ''நாடு படிம'' என்று அழைக்கப்படுகிறது. தட்ப வெப்பமான கடல் தரையில் காணப்படும் இவை, நண்டு என்று அழைக்கப்பட்டாலும் சிலந்திதேள் அல்லது சிலந்தி குடும்பத்தை சேர்ந்தவை.

குதிரை நண்டில் நான்கு இனங்கள் உள்ளன. மூன்று இனங்கள் இந்தியா, ஜப்பான், மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளைச் சுற்றி நீரில் இருக்கிறது. நான்காவது இனம் யுக்காட்டன் தீபகர்ப்பம் வட அமெரிக்கா கிழக்கு கடற்கரை ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றது.

ஆண் குதிரை நண்டு பெண் குதிரை நண்டை விட சிறியதாக இருக்கும். இது இரண்டு அடி நீளம் இருக்கும். உயிருடன் இருக்கும்போது அது பழுப்பு, பச்சை நிறத்தில் இருக்கும். அது இறந்த பிறகு, கரும் பழுப்பு நிறமாக இருக்கும். குதிரை நண்டின் தோற்றம் 500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததற்கு மிகவும் சிறிதளவே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கருதப்படுகிறது. அவை அடிவயிற்று கால்களின் கடைசி ஜோடியில் இணைக்கப்பட்ட செவுள்கள் மூலம் சுவாசிக்கின்றன. வாய் உடலின் மையத்தில் உள்ளது. கண்கள் ஷெல்லின் முன் பகுதியின் மேல் உள்ளன. குதிரை நண்டு ஒரு கடினமான வெளிப்புற ஷெல், ஐந்து சோடி கால்கள் மற்றும் திசை மாற்றப் பயன்படுத்தும் ஒரு நீண்ட மெல்லிய வாலையும் கொண்டிருக்கிறது.

குதிரை நண்டுகள் இருளில் வெளியில் உணவு தேடும். புலால் உண்ணுகிற விலங்குகளை போல், குதிரை நண்டுகள் கடல் புழுக்கள், சிறிய மெல்லுடலிகள் மற்றும் ஓட்டுமீன்கள் போன்றவற்றை சாப்பிடுகின்றன.




கடலில் வாழும் பல வகையான விநோத உயிரினங்களில் முத்துச் சிப்பியின் குடும்பத்தைச் சேர்ந்த உயிரினமே கடல் ஆழி. மேலை நாடுகள் பலவற்றில் பிரபலமான நட்சத்திர ஹோட்டல்களில் சுவை மிகுந்த உணவாக விற்பனை செய்யப்படும் இந்த உயிரினத்தின் சிறப்புகள்

கடலில் வாழும் ஓடுகளையுடைய பல உயிரினங்களில் தனக்கென்று ஒரு குறிப்பிட்ட உருவம் இல்லாத ஓர் உயிரினம்தான் கடல் ஆழி. கிரோஸோஸ்டீரியா என்ற விலங்கியல் பெயருடைய இதன் ஓடுகளின் விளிம்புகள் அடர்த்தியான கல்சியத்தால் ஆக்கப்பட்டிருக்கிறது. இவை ஒரு பிளேடைப் போன்று மிகவும் கூர்மையாக இருப்பதால், இதன் மீது தப்பித் தவறி கால் வைத்து விட்டால் கூட, ''சரக்'கென்று வெட்டிவிடும் தன்மையுடையது.

ஆறுகளின் கழிமுகத் துவாரங்களிலும் சென்னையை ஒட்டியிருக்கிற கடற்கரைகளிலும் அதிக எண்ணிக்கையில் வாழும் கடல் ஆழிகளுக்கு விஞ்ஞானிகள் கிரோஸோஸ்டீரியா மெட்ராஸென்சீஸ் என்றும் பெயர் வைத்திருக்கின்றனர். இவ்வினங்கள் மட்டும் மற்ற கடல் ஆழிகளைக் காட்டிலும் விரைவாக வளர்வதுடன், மிகவும் சுவையாகவும் இருக்கும்.





பாத்திமா ஹப்சா
தரம் 1 எக்ஸலண்ட் கல்லூரி
தில்லையடி

நீங்கள் எவ்வளவு வெற்றி அடைந்தாலும் எளிமையான மனிதராயிருங்கள். வெற்றிகரமான பல மனிதர்கள் எளிமையானவர்களே! ''ஆணவம் ஆயுளை குறைக்கும்''

## கற்பது ஏன்



படிப்பது ஏன்? பயன்கள் என்ன
படிப்பதனால் - என்று
பகுத்தறிந்து பார்த்தவர்கள்
எனக்குச் சொல்லுங்கள்

பொருளில்லார்க்கு இவ்வுலகம்
இல்லை என்பதால் - அந்தப்
பொருளைத் தேடிப் பெறுவதுதான்
படிப்பின் நோக்கமா?

அறிவுடையார் எல்லாம் உடையார்
என்பதனாலே - அந்த
அறிவைத் தேடிப் பெறுவதுதான்
படிப்பின் நோக்கமா?

இயற்கையையும் ஏவல் கொள்ளச்
சக்தி தருவதால் - நாம்
என்றும் அந்தச் சக்தி
பெறப் படிக்க வேண்டுமா?

ஆமாம், ஆமாம், ஆமாம், ஆமாம்
படிப்பின் நோக்கங்கள் இன்னும்
பலப் பலவாய் அடுக்கடுக்காய்
இருக்கும் என்றாலும்

படைத்துக் காத்து வழிநடத்தும்
வல்லவனை - நன்கு
பற்றிக் கொள்ளப் பயிலுவதே
படிப்பின் தலைமை நோக்கமாம்!

- கல்லொழுவை பாரிஸ்

# ஜெர்மன் தாத்தா

பையன் சுமையில், தோளும் முதுகும் அழுந்திக் கனக்கிறது. பன்னிரண்டு வருடங்களுக்குப்பின் - சொந்த மண்ணைப் பார்க்கின்ற பூரிப்பு. இருக்காதா பின்னே? நீண்ட காலத்துக்குப்பின், ஊர்க்காற்றை சுவாசிப்பதிலும், பரம சந்தோஷம். கற்றாழை நார்போல் எனது நெஞ்சுவரை, வெண் தாடி நீண்டிருக்கிறது. முறுக்கான உடல், கம்பீரமான நடை, எடுப்பான உடை, இவை என் ஆகுருதியின் சில இலட்சணங்கள் என் அறுபது வயது தோற்றத்தை இவை, சற்றேனும் குறைத்துக் காட்டாமலா, போய்விடும்?

ஜெர்மன் சிநேகிதி சலோமினா, அடிக்கடி சொல்வாள் 'உங்கள் கம்பீர நடை, ஓர் ஐரோப்பியனை ஒத்திருக்கிறது என்று'. ஐரோப்பியனுக்கும், ஆசிய நாட்டவனுக்கும் இருக்கும் வித்தியாசம், நிறம் மட்டுமல்ல! குண இயல்புகளும்தான். என் இல்லத்ததிற்கு இங்கிருந்து கூடிப்போனால், ஒரு மைல் தூரமே ஆட்டோவை, அழைத்திருக்கலாம் தான், காலாற நடப்பதும், ஒரு சுக அனுபவம் இல்லையா! வயது போய்க் கொண்டிருப்பவர்கள், அடிக்கடி நடப்பதினால் சென்ற இளமை மீண்டும் திரும்பி வரலாம்.

இருபுறமும் நீண்டிருந்த வயல்வெளி, விண்ணை நோக்கி வளர்ந்திருந்த மரங்கள், நிழல் படுத்துறங்கும் செம்மண் பாதை, எல்லாம் மீண்டும் என் கடந்த காலத்தை கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. கசப்போ, இனிப்போ, கடந்து போன காலங்களின் ஞாபக இழைகள் மன அரங்கில் அழிந்து போகாமல் இருக்கும் வரை - மனிதனது வாழ்வும் இருப்பும், சுவை மிகுந்ததாக இருக்கும்.

புதிய மோஸ்த்தர் வீடுகள் சிறுசிறு கட்டிடங்கள், இவற்றைத் தவிர்த்துப் பார்த்தால், எங்கள் கிராமம், பெரிய அபிவிருத்தி முன்னேற்றங்களைக் கண்டுவிட்டதாக எண்ணிவிடமுடியாது. பாதையில் போவோர், வருவோர், புதுமுகமாகக் கருதி என்னை வித்தியாசமாகப் பார்ப்பதற்கு நான் என்ன செய்துவிட முடியும்? இங்கு பிறந்து வளர்ந்து, ஓடித்திரிந்து, கல்விகற்று, திருமணம் முடித்து, வம்ச விருத்தி பெருக்கி இன்று விதேசியாய்ப்போனவன் என்பதை பழைய முகங்களால் இனங்காண முடியும். என்றாலும் தற்போதைய எனது தோற்றத்திலும் பெரிய வித்தியாசம் இல்லாமலில்லை.

வெளிநாடு போனதில், இரத்தசொந்தங்கள் பாதி இங்கும், பாதி அங்குமாக புலம்பெயர்ந்து அகதிகளாகி, பந்த பாசம் துறந்து, சராசரி இன்றைய தமிழனின் தலையெழுத்தைப் பறைசாற்றும், பிரதிநிதி என்ற போதும், நான் இன்று ஜெர்மனிய நாட்டுப் பிரஜை. எனது வருகையில், பிள்ளைகளும் பேரக்குழந்தைகளும், உச்சி குளிர்ந்து இராஜ வரவேற்பளிக்கின்றனர். இத்தனைக்கும் நானொன்றும் செல்வாக்குப் பெற்ற அரசியல்வாதியில்லை. குடும்பத்தின் ஒரு மூத்த உறுப்பினன் மட்டுமே. அவரவருக்குரிய பரிசுப்பொருள்களோடு குதூகலித்து உவகையடைகின்றனர். இரண்டு மாத விடுமுறையை ஊரோடும், குடும்பத்தோடும் கழிக்கப்போகிறேன், என்ற நினைப்பே என்னுள் ஒரு சொர்க்க சுகத்தைச் சொரிகிறது.


'ஜெர்மன் தாத்தா!' என்ற பாசமிழையும் மழலைக் குரல் கேட்டு நெகிழ்ந்து போகிறேன். பால்ய காலச் சிநேகிதன் இராமநாதன் எப்போதும் என் கூடவேயிருந்தது, மனதிற்கு உற்சாகமாய் இருக்கிறது. அவனோடு சேர்ந்துதான் தினமும், ஊர் சுற்றுலா, எல்லாம். ஊரில் நடந்து முடிந்த எல்லா நிகழ்வுகளையும் அச்சொட்டாக ஒன்றுவிடாமல், என்னிடம் விவரிப்பான். நமது நண்பர்களாக இருந்தவர்களில் பலர், இன்று ஜீவனோடு இல்லை. யுத்த அனர்த்தத்தில் பலியாகிப் போனார்கள்.

நமது உரையாடல்களில், கல்லூரி காலத்து, காதலிகள், வில்லன்கள், எல்லோரும் வந்து போனார்கள். நான் நண்பனின் முகத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு, நிதானமாக ஒரு வினா தொடுத்தேன்.

'மச்சான்! அந்த நாளில், பொடியன்கள் எல்லாம் பித்துப் பிடித்து பின்னால் திரிந்த பொன்னம்மா, என்ற அழகான ஒரு சரக்கு இருந்தாவே அவளுக்கு என்ன நடந்தது நான் அவளைப் பார்க்க வேண்டும்.' அவன் என்னில் ஓர் ஆச்சரியமான பார்வையைப் பதித்தான்.

'அறுபது வயதில், நரையும், திரையும், விழுந்து பத்துப் பேரப் பிள்ளைகளுக்கு, தாத்தாவாகியும், இந்த ஜெர்மன் கிழவனுக்கு, இன்னும் பாலியல் வக்கிரம் தீரவில்லை!' என்ற எள்ளல் பார்வை, அவனது முகத்தில் விரவியிருந்தது. சிறிது நிதானித்து விட்டு தணிந்த குரலில் பொன்னம்மாவைப் பற்றி சொல்லத் தொடங்கினான்.

'நீ நினைக்கிற அழகு, அவளை விட்டுப் போய், பல காலமாயிட்டுது மச்சான்! இப்ப அவள் ஒரு எலும்புக் கூடு, நடைப்பிணம், உடல் இளைத்து, காசம் பிடித்து, மரணத்தின், விளிம்பில் நிற்கிறா. ஊரில் பலருக்கு பயங்கரமான நோய்களை, பரப்பிய மோசமான விபச்சாரி. இங்க யாரும் அவளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. உனக்கென்ன தேவை வந்தது அவளைப் போய்ப்பார்க்க?'





கேள்வி சற்று உறைப்பாகவே வெடித்தது. ஒரு கனிவான பார்வையால் அவனை இயல்பு நிலைக்கு இழுத்து வந்தேன்.

பொன்னம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து, நான் பின் சாயவில்லை. அந்நாட்களில் என் கனவுகளை அவள் ஆர்ப்பரித்திருந்தாள். இப்போது அவளைத் தேடிப் போவதில் ஊரவர் பார்வையில் நான் சிறுமைப் பட்டுப் போவேனா? இன்று போல், அச்சம்பவம் ஞாபகம். ஓர் ஓய்ந்த பொழுதில், தினறெடுத்த இளமை உணர்வுகளோடு, அவள் வீட்டுக்கதவை திடீரெனத் தட்டினேன்.

ஒரு தேவதை சிரிப்போடு என் முன் நின்றாள். அவளது கட்டுடலும், மின்னல் பார்வையும் என்னை ஆட்கொண்டன. தடையேதுமில்லை, மகிழ்ச்சிகரமாக, அந்தக்கணங்கள் திருப்தியோடு ஓடி மறைந்தது. நான் தயங்கித்தயங்கி வார்த்தைகளுக்கு உயிர் கூட்டினேன்.

'கையில காசில்ல! அப்புறமாத் தருவேன்!'

'உன்னைப் போல ஓர் அழகான ஆணோடு இருப்பதற்கு காசு எதற்கு?'

உச்சி குளிர்ந்து போனேன் நான். அதன்பிறகு தொடர்புகளே இல்லை. பாலியல் உள்ளுணர்வு, ஒவ்வொரு ஜீவனையும், நீறுபூத்த நெருப்பாக எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது. சமூக வாழ்வில் அதன் வீரியமிக்க விரசிப்பே நன்மை தீமைகளுக்குக் காரணமாய் அமைகிறது.

இந்தப் பிரபஞ்சத்தை இயக்கும் மூலக்கருவி செக்ஸ்தான், என்றான் பிராய்ட். ஜெர்மனியத் தோழி சலோமினாவின் நினைவு என்னில் நிலழாய்க் கவிகிறது.

அவள் இதயசுத்தி உள்ளவள். புத்திஜீவி. நமக்குள் எட்டுவருட ஆத்மார்த்த நட்பு. நாங்கள் விமர்சிக்கத் தவறிய விடயங்களே இல்லை. செக்ஸின் ஆழ அர்த்தங்களையெல்லாம், மணிக்கணக்கில் விவாதித்திருக்கிறோம்.

நம் இருவருக்குள்ளும் தொடரும் அந்தச்சிநேகிதம். குறுகிய சரீர இச்சைகளுக்கப்பால், தோழமை ஸ்தானத்தில் நீடித்து வருகிறது என்ற உண்மையை, ஜெர்மனியில் வாழும் எனது மனைவி கூட, சமீபகாலத்தில் தான் சீரணித்திருக்கிறாள்.

சலோமினா சொந்த வாழ்வில், சோகக் கறையோடு வாழ்பவள். எச்சந்தர்ப்பத்திலும், தன்னம்பிக்கை இழக்காதவள். அவளை ஒரு வெள்ளையன், பலகாலம் நேசித்துக் கெடுத்துவிட்டு, தலைமறைவானான். இனி எந்த ஓர் ஆணினதும், குரூரங்களை தணித்துக் கொள்ளும் கருவியாகவிருக்க, ஒருபோதும் சம்மதியாள்.

பொன்னம்மாவின் குருவிக் கூடு போன்ற குடிலின் முன் நின்று, கதவைத் தட்டினேன். சில கணங்களுக்குப் பின், ஓர் உருவம். காற்றில் அசைந்து வருவது போல் இருந்தது. இருபது வருஷங்களுக்கு முன் சந்தித்த பொன்னம்மாவாக, அவள் இருக்கவில்லை, என்பது எனக்கு ஆச்சரியம் தரவில்லை.

தலை நரைத்து, உடல் இளைத்து, துளை விழுந்து, துருப்பிடித்த காலிப் பாத்திர யாசகக் கண்களுடன், என் எதிரில் நின்றாள்.

'ஒங்களுக்கு... யார் வேணும்?'

'பொன்னம்மா! என்னை... ஞாபகமிருக்கிறதா, உனக்கு?'

கேள்விகள் காற்றில் சங்கமிக்க, நிமிடங்கள், மௌனத்தில கரைய, தொலைந்துபோன எதையோ, மீட்டெடுக்க முயலும், தேடல் பாவனை அவளுக்கு.

கடன் பட்டுவிட்டுப் போன பழைய சம்பவத்தை, நேற்று நடந்ததைப் போல், நினைவு கூர்ந்து தெளிவாகச் சொன்னேன். அவளது வற்றிய உதடுகளின் விளிம்பில், விரக்திப் புன்னகை இருந்தது.

'நீ... சொல்ற எதுவும் என் ஞாபகத்துல இல்ல ராசா! நான் கவர்ச்சியா இருந்தப்போ, என் உடல் எல்லோருக்கும், தேவைப்பட்டுது. இப்ப நாய்கள் சப்பிப்போட்ட முள்ளுக்கூடு நான். என்னை நாடி கியூவில நின்னாங்க, அது ஒரு காலம். என்ட மேனிய உறிஞ்சி, இரத்தத்தத குடிச்ச படுவாக்க எவனும் என்னை திரும்பிக் கூடப் பார்க்க வாரல்ல! ஒரு சிறு நேரம், என்னோடு இருந்து போனதிற்காக, இத்தனை காலம் கழிச்சி, நினைவு வைச்சி, தேடி வந்திருக்கியே, நீ ஓர் அசலான மனிதன் ஐயா! ஒனக்கு கைமாறா, எதையாவது கொடுக்க இப்ப என் உடல்ல திராணி இல்லையே ராசா!

அவளது சுவாசம் தடைப்பட்டு, நெஞ்சு இரைத்தது. உன்னிடம் எதையும் எதிர்பார்த்து நான் இங்கு வரல்ல! பட்ட கடனை அடைக்க வந்திருக்கிறேன். வட்டியும் முதலுமாக என்றேன் நான்.

எப்பவோ இழந்து போன, அட்டகாச சிரிப்பை மீண்டும் துணைக்கழைக்க, பிரயத்தனம் செய்து தோல்வி கண்டு, உடல் அதிர, பயங்கரமாக இருமித் தொலைத்தாள். ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள், சிலதை அவள் கையில் திணித்துவிட்டு, விடை பெறலானேன்.

'எனக்கு உன்னைப் பார்த்த பிறகுதான், இனியும் வாழ வேண்டும். என்று ஆசை வருது மகாராசா!' அவளது கண்களில் நீர் ஒழுக, கைகள் குவிந்தன.

### சிறுகதைகள்

இவ்வாரம் முதல் வாராவாரம் இலக்கியச் சோலையில் சிறுகதையொன்று பிரசுரமாகும். மூத்த எழுத்தாளரின் சிறுகதையொன்றும் இளம் (அறிமுக) எழுத்தாளரின் சிறுகதையொன்றும் மாறி மாறிப் பிரசுரமாகும்.

இளம் எழுத்தாளர்கள் ஏ4 தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல், தங்கள் கதைகளை வடிவமைத்து அனுப்பி வைக்கலாம்.

கீழ்க் காணும் படிவத்தைப் பூர்த்தி செய்து கதையுடன் அனுப்பி வைக்கவும்.

இளம் எழுத்தாளர் - சிறுகதைப் படிவம்

பெயர்:- ......................................
முகவரி:- ......................................
வயது:- ......................................
(க. தலைப்பு) ......................................

# இலஞ்ச ஆணைக்குழுவின் 158 விசாரணைகள் முடிவு

## அடுத்தகட்ட நடவடிக்கை ஆரம்பம்



(அ.அருண் பிரசாந்த்)

மஹிந்த அரசில் இடம்பெற்ற இலஞ்ச, ஊழல்களை விசாரணை செய்யவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு செய்யப்பட்ட முறைப்பாடுக ளின் 158 தொடர்பிலான விசாரணைகள் முடிவடைந்து விட்டதாகவும், இதுவிடயம் தொடர்பில் அடுத்தக்கட்ட நடவடிக்கை யினை மேற்கொள்ள சட்டமா அதிபருக்கும் குறித்த முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசி ங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் வியாழக்கிழமை இடம் பெற்ற பிரதமரிடம் கேள்வி கேட்கும் சுற்றின் போது எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடா வான அநுரகுமார திஸாநாயக்க எம்.பியால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, கடந்த ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் இலஞ்ச, ஊழல்களை விசாரணை செய்வதற்காக, பொதுமக்களின் நிதியில் ஜனாதிபதி ஆணைக்குழு உருவாக் கப்பட்டது. இது ஸ்தாபிக்கப்பட்டு இரண்டு வருடங்களைக் கடந்துள்ளபோதிலும் அதில் இடம்பெற்ற விசாரணைகளுக்கானத் தீர்வு கள் இன்னும் முன்வைக்கப்படவில்லை. எனவே, இதுதொடர்பில் அரசு பதிலளிக்க வேண்டும் என்று அநுர எம்.பி. கோரியிருந் தார்.

அதற்கு பதிலளித்த பிரதமர், இலஞ்சம் மற்றும் ஊழல்களை விசாரணை செய்வதற் காக ஜனாதிபதி ஆணைக்குழுவானது 2015 மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட் டது. இந்த ஆணைக்குழுவுக்கு இதுவரை 1599 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசா ரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதில் 1180 முறைப்பாடுகள் முதற்கட்ட விசாரணையுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளத் தேவையில்லை என்று ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டு நிறுத் தப்பட்டன.

மேலும், தற்போது 400 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. அத்துடன், 158 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன.

இந்நிலையில், முறைப்பாடுகள் தொடர் பில் தண்டனை வழங்கும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு இல்லாத காரணத்தினால் முடிவடைந்த விசாரணைகளை தற்போது குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கும் சட்டமா அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளோம் என்றார்.

## அரநாயக்க பிரதேசங்களில் டெங்கு பரவும் அபாயம்



(அரனாயக்க பாரா தாஹிர்)

அரனாயக்க- திப்பிடிய, வில்பொலை பிரதேசத்தில் டெங்கு பரவுவதற்கான அவ தானம் இருப்பதாகவும், சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளும்படியும் வில் பொலை கிராம உத்தியோகத்தர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

டெங்கு பரவும் அவதானம் உள்ள இடங் களை பரிசோதிப்பதற்கான மேற்படி பிரதே சங்களுக்கு 10,11 ஆம் திகதிகளில் சுகாதார அதிகாரிகள் வருகைத் தரவுள்ளதாகவும் கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகள் பரிசோதிக்கும் போது, டெங்கு பரவுவதற்கு ஏதுவான விடயங்கள் சுற்றுச் சூழலில் கண்டெடுக் கப்படும்போது தண்டப்பணம் மற்றும் வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளும்படியும் அவர் எச்சரித்தார்.

## நளீமியா பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் கிரியெல்ல

பேருவளை ஜாமியா நளீமியாவின் பொதுப்பட்டமளிப்பு விழா 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும். உயர்கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரி யெல்ல பிரதம அதிதியாகக் கலந்துகொள் வார்.

## பலஸ்தீன் தொடர்பாக கொழும்பில் சொற்பொழிவு

உலக நீதிக்கான இலங்கை ஊடகவிய லாளர்கள் அமைப்பு, பலஸ்தீன் மக்களின் சமூக நியாயத்திற்கான போராட்டம் என்ற தலைப்பில் கொழும்பில் சொற்பொழிவு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு 7, ஹோர்டன் பிளேஸ், கதிர்காமர் நிலையத்தில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற ராணியார் துலிப் டி சிகேரா விரிவுரையாற் றவுள்ளார். நிகழ்வில் கௌரவ அதிதி யாக பலஸ்தீனுக்கான இலங்கை தூதுவர் அஹைர் எம்.எச்.டார் செய்ட் கலந்து கொள்ளவுள்ளார்.

## அமைச்சர் ஹலீம் எகிப்து விஜயம்

(குருநாகல் இக்பால் அலி)

எகிப்து நாட்டில் 11, 12 ஆம் திகதிகளில் நடைபெறும் கெய்ரோ இஸ்லாமிய விவ கார உயர் பீட 27ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக முஸ்லிம் சமயம் கலா சாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் எகிப்து நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

சமாதானத்திற்கான கலாசார முன்னெடுப்பும் பயங்கரவாதச் சவால் களை எதிர்கொள்ளலும் என்ற தொனிப் பொருளில் இடம்பெறவுள்ள மாநாட்டில் அமைச்சர் எம். எச். ஏ ஹலீம் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

இதற்கான ஒழுங்குகளை கெய்ரோ இஸ்லாமிய விவகார உயர் பீட கலாச ார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. உலக முஸ்லிம் நாடுகளிலுள்ள முஸ்லிம் கலாச ார விவகார அமைச்சர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

## அபுதாபியில் காலமானார்

அபூதாபியில் தொழில் புரியும் பாணந் துறை ஹேனமுல்லையைச் சேர்ந்த எம்.டி.எம். ரிபாய் (ஹாஜி) கடந்த 8 ஆம் திகதி புதன்கிழமை காலமானார். ஜனாஸா நல்லடக்கம் அபூதாபியில் இடம்பெற்றது. களுத்துறை சோனகத்தெருவைச்சேர்ந்த மர் ஹூம் முஹம்மத் அலிமரிக்கார் முஹம்மத் முஹம்மத் தமீமின் புதல்வராவார்.

## வாலிப முன்னணியின் வருடாந்த வேலைத்திட்டம்

(யு.எல். முஸம்மில்,குருநாகல் நிருபர்)

பொதுஹர வெதபொல முஸ்லிம் லீக் வாலிப முன்னணி இவ்வருடத்தக்கான வரு டாந்த வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித் துள்ளது.

வெதபொல மஸ்ஜிதுல் வபா பள்ளிவா சல் மேல் மாடியை கட்டுதல் அல்-ஹிஜ்ரா அஹதிய்யாப் பாடசாலைக்கு புதுக் கட் டடம் நிர்மாணித்து அதனை அபிவிருத்தி செய்தல்,அல்-அமீன் பாலர் பாடசாலையை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஜனாஸா உதவித் திட்டம் என்பன இதில் முக்கியமானவையாகும்.

இதே போன்று பொதுஹர முஸ்லிம் பாடசாலை அபிவிருத்திக்காக ஒத்துழைப்பு நல்கல், பொதுஹர ஜும்மா பள்ளிவாச லுக்கு ஒத்துழைப்பு நல்கல், மாரக்க மற்றும் சமகால பிரச்சினைகள் சம்பந்தமான விசேட சொற்பொழிவுகள் நடத்துதல், இளைஞர் அபிவிருத்தி நடவடிக்கைகள், முன்னணி யின் பொருளாதார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் என்பனவும் இவ்வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டள்ளன.

வெதபொல முஸ்லிம் லீக் வாலிப முன்ன ணியின் தலைவர் எப்.எம். பர்ஹான் தலை மையில் அல்-ஹிஜ்ரா அஹதிய்யா பாடச ாலை மண்டபத்தில் அன்மையில் நடை பெற்ற கூட்டத்தின் போது இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அதன் செயலாளர் எம்.சி.எம். நிசாட் தெரிவித்தார்.





கேகாலை கரண்டுபொன தோட்டப்பகுதியில் நேற்றுமுன்தினம் வீசிய மினி சூறாவளியினால் பல வீடுகளும், பாடசாலைக் கட்டடங்களின் கூரைகளும் சேதமாகியுள்ளதை படங்களில் காணலாம்.(அரநாயக்க நிருர், எம்.ஆர்.எம். அமீன்)

## பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள் ரிஷாத்துடன் சந்திப்பு



பேராதனைப் பல்கலைக்கழக வளாகத் தில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு தேவை யான புனரமைப்பு வேலைகளுக்கு உதவி யளிப்பதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உறுதியளித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் மஜ்லிஸின் பிரதிநிதிகள் அமைச் சர் ரிசாட் பதியுதீனை கண்டி பொல்கொல் லையில் அமைந்துள்ள கூட்டுறவுக்கல் லூரியில் சந்தித்து முஸ்லிம் மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விபரித்தனர். குறிப்பாக இஸ்லாமி யக் கடமைகளை மேற்கொள்வதில் தாங்கள் எதிர்நோக்கும் சிரமங்களை அவர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர். பள்ளிவாச லின் திருத்த வேலைகள் இருப்பதாகவும் வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ தொழுகைக் கென சில வசதிகளை செய்து தருமாறும் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் திருத்த வேலைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். பேராதனைப் பல்கலைக்கழக 2ஆம் வருட மாணவர் களுக்கு பல்கலைக்கழக விடுதி கிடைப் பதில்லை ஆகையால் அவர்கள் வேறு இடங்களில் தங்கிப் படிப்பதில் கஷ்டங்கள் இருப்பதாக தெரிவித்த அவர்கள் அதற்கான மாற்று வழியொன்றையும் அமைச்சரிடம் பிரஸ்தாபித்தனர். கடந்த வருடம் நாட்டி லுள்ள பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச் சினைகள் தொடர்பாக அமைச்சர் ரிஷாட் டின் ஏற்பாட்டில் உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுடனும் பிரதமர் ரணில் விக்கிரம

சிங்கவுடனும் தனித்தனியாக நடாத்திய சந்திப்பின் பின்னர் முஸ்லிம் மாணவர்க ளுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளின் முன்னேற்றங்கள் குறித்தும் அமைச்சர் ரிஷாத் கேட்டறிந்தார்.

இந்த சந்திப்பில் லங்கா சீனி கூட்டுத்தா பனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பௌசர், அமைச்சரின் ஆவணக் காப்பாளர் முனவ்வர், உட்பட பலர் கலந்து கொண்ட னர்.



யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனத்தினால் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜா , யாழ். எழுத்தாளர் எம்.எப்.எம். இக்பாலுக்கு பொன்மாலை அணிவித்து 'கலைமாமணி விருது' வழங்குவதை படத்தில் காணலாம்.

## ஸ்டார் ராசிக்கினுடைய இழப்பை ஈடுசெய்ய முடியாது

### அமைச்சர் ஹலீம்

(குருநாகல் இக்பால் அலி)



மூத்த ஊடகவியலாளர் கலாபூச ஷணம் ஸ்டார் ராசிக்கினுடைய மரணம் ஊடக சமூகத்திற்கு பெரும் பேரிழப்பாகும் என்பது மட்டுமல்ல எமது குடும்பத்தோடு அவர் கொண்டிருந்த உண்மை யான அன்பினதும், நெருங்கிய அந்நியோன்னிய உறவின் ஆத்ம நண்பரான அவரது இழப்பு ஈடு செய்ய முடியாது என்று முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ.ஹ ஹலீம் தெரிவித்தார்.

மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் ஸ்டார் ராசிக் மரணம் தொடர்பாக விடுத் துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக் கையில்,

ஊடகத்துறையிலும் சமூக சேவைச் செயற்பாட்டிலும் மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் நேர்த்தியாகவும் அவருக்கே உரித்தான பாணியில் அலாதியான முறையில் தம் வாழ்வியல் வர லாற்றில் பதிவு செய்துள்ளார். பிறர் நலன் பேணுவதில் அதிக அக்கறை உடையவர். என்னுடைய மாமா மறைந்த அமைச்சர் ஏ. சீ. எஸ் ஹமீத்துடன் மிகவும் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தார். அவர் பற்றிய வாழ்வியல் பதிவுக ளையும் அரசியல் முகவரிகளையும் எழுத்துருவில் வெளிக்கொணருவதில் சளைக்காமல் ஈடுபட்டவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல குண வியல்புகளை உடையவர். அன்னாரது துயரில் ஆழ்ந்துள்ள குடும்பத்தினருக்கும் ஊடகத் துறை சார்ந்தவர்களுக்கும் என்னு டைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அமைச்சர் தெரிவித் தார்.

## சமூக சீர்கேடுகளை சுட்டிக்காட்டுவதில் முன்னின்று பணியாற்றியவர்

### அமைச்சர் ரவூப் ஹக்கீம்



மறைந்த மூத்த ஊடகவிய லாளர் ஸ்டார் ராசிக் சமூகம் சார்ந்த செய்திகளுக்கு முக்கியத் துவம் வழங்கியதோடு, சமூக சீர்கேடுகளை சுட்டிக்காட்டு வதிலும் முன்னின்று பணியாற் றியவர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித் துள்ளார்.

சிறிது காலம் சுகவீனமுற்றிருந்து கால மான பிரபல ஊடகவியலாளர் ஸ்டார் ராசி க்கின் மறைவு தொடர்பில் அமைச்சர் ஹக் கீம் அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் காணப்படுவதாவது,

மூத்த அரசியல்வாதி ஏ.சி.எஸ் .ஹமீதின் விருப்பத்திற்குரிய செய்தியாளராக திகழ்ந்த மர்ஹூம் ஸ்டார் ராசிக் க ட்சி வேறுபா டின்றி நடுநிலைத் தன்மையை பேணி செய்திகளை அறிக்கையிடுவதிலும், நேரம் தவறாமல் நிகழ்வுகளிலும், சம்பவங் கள் இடம்பெறும் சந்தர்ப்பங் களிலும் பிரசன்னமாகி இருப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்.அரசி யல்,சமூக ரீதியாக கண்டி மாவட்டத் தில் நான் கலந்துகொண்ட பல்வேறு நிகழ்வுகளில் நண்பர் ராசிக் ஒரு பத்திரிகையாளராக பங்குபற்றி சுடச்சுட செய்திகளை தமிழ் அச்சு ஊடகங்களுக்கு வழங்கியதோடு அவரது சிங்கள,ஆங்கில ஊடக நண்பர்களோடும் அவற்றை பகிர்ந்து கொள்வதில் அதிக கரிசனை காட்டி வந்தார். அன்னாரது பிரிவினால் துயருற்றி ருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்க ளுக்கும் தனிப்பட்ட முறையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வத தோடு, அவருக்கு மேலான ஜென்னத்துல் பிர்தௌஸ் சுவன வாழ்வு கிட்டவும் பிரார்த் திக்கின்றேன்.

## அம்பாறை அரசஅதிபருடன் ஊடகவியலாளர் பேரவை சந்திப்பு

(சாய்ந்தமருது யூ.கே.காலீத்தின்)

அம்பாறை மாவட்ட அரச அதிபர் துஷித பீ.வணசிங்கவை அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் பேரவை புதன்கிழமை அம்பாறை கச்சேரியில் வைத்து சந்தித்தது.

பேரவையானது, எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான சில முன்னெடுப்புகள் தொடர்பில் இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. இச்சந்திப்பில், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் பேரவை சார்பில் அதன் பிரதித் தலைவர் எஸ்.எல்.எம். பிக்கிர், செயலாளர் எம்.ச ஹாப்டீன், பொருளாளர் யூ.எல்.மப்ருக், அமைப்பாளர் யூ.எல்.எம். ரியாஸ், கணக்காய்வாளர் ஏ.பீ.எம்.அஸ்ஹர், உறுப்பினர்களான எஸ்.ரீ.ஜமால்டீன், யூ.கே. காலீத்தீன், எம்.எப்.ஏ. பாசித் ஆகியோர் கலந்துகொண்டனர்.



சிரேஷ்ட மனநல ஆலோசகர்
துணைத்தலைவர், இலங்கை
உளவள ஆலோசக நிபுணர்கள்
சங்கம், இலங்கை மன்றம்
பிரதித் தலைவர் போதைப்பழக்
கத்துக்குட்பட்டோருக்கான தேசிய
மனவள ஆலோசனை சபை
அஸ்ஹர் அன்ஸார்
M.S Psych (Ind), A.D.Psycho.C (SL),
D.Psy.C (SL), D.Y.T (Ind), FRSPH (UK)


# மன நலமும் ஆலோசனையும்

தொடர் 174

# நினைவாற்றல் இழப்பு நோய்

எமது வீட்டிலும் முதியவர்கள் இருக்கலாம். சிலசமயம் அவர்கள் எங்கள் தாயாக தந்தையாக இருக்கலாம் அல்லது தாய் தந்தையரின் பெற்றோரில் ஒருவராக இருக்கலாம் அல்லது நெருக்கமான உறவினர்களின் எவரேனும் ஒருவர் முதுமையின் பருவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அல்லது முதுமையை அடைந்த ஒருவராக நீங்கள் இருக்கலாம்.

முதுமையில் ஏற்படும் ஞாபக மறதியுடன் தொடர்பான ஒரு நோய்தான் அல்ஸய்மர் எனும் மூளை அசதி நோய். இது முதுமையில் ஏற்படும் நினைவாற்றல் இழப்பு நோய் என்றும் கூறப்படுகிறது. முதுமையை அடையும் போது இளமையில் இருந்த கூர்மையான நினைவாற்றல் படிப்படியாக குறைந்துசெல்வது பொதுவாக நடக்கும் விடயமாகும். சாதாரணமான ஞாபக மறதி என்பது எவருக்கும் ஏற்படலாம். உதாரணமாக ஒருவருடைய பெயரை நினைவில் கொண்டுவர முயற்சித்து முடியாமற் போய் அந்தப் பெயர் சற்றுத் தாமதமாகி நினைவுக்கு வரும் சந்தர்ப்பங்களை நாங்கள் அனுபவித்து இருப்போம். அது பாரதூரமான நினைவாற்றல் சிக்கலாக கருதப்படுவதில்லை. சில குழப்பமான நிலைகளில் இருக்கும் போது எவருக்கும் சாதாரணமான ஞாபகமறதி ஏற்பட முடியும்.



அச்சம் ஏற்படல்

★ அன்றாடம் செய்துவந்த வேலைகளின் மற்றும் வணக்க வழிபாடுகளின் விதிகளை நிறைவேற்ற இயலாமல் போதல்

**4. நேரமும் இடமும் குழப்பம் அடைதல்**

உதாரணமாக

★ இருக்கும் இடம் எது என்பதை

கையை இரசித்தல் போன்ற தனக்கு விருப்பமான வேலைகளில் இருந்தும் வழமையான பொழுது போக்குகளில் இருந்தும் விளகுதல்

★ வளக்கத்திற்கு மாற்றமாக உறக்கத்தில் நாட்டம் கொள்ளல்

**9. மனநிலை மாறுதல்**

உதாரணமாக

★ அவசரமாக உணர்ச்சிவசப்படல்

★ மனஉளைச்சலுக்கும் மனஅழுத்தத்திற்கும் உட்படல்

★ மற்றவர்களை சந்தேகித்தல் போன்ற பல மாற்றங்கள் நிகழ்வதைக் காணலாம்.

உங்களுக்கு நெருக்கமான எவருக்கேனும் இங்கு குறிப்பிடப்பட்டவாறான வித்தியாசங்கள் இருப்பதைக் கண்டால் அவரின் சிந்தனையில் ஏதோ மாற்றம் ஏற்பட்டிருக்கிறது அல்லது ஏற்பட்டுவருகிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான மாற்றங்கள் அல்ஸய்மர் நோயின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம். சாதாரண மறதியில் இருந்து விலகி தன்னால் சரியான நேரத்தில் சரியான முறையில் சிந்தித்து செயற்பட முடியாமல் போகும் இந்த நிலை அசாதாரணமாகவே இருக்கக்காணலாம்.

ஆனால் விடயங்களை நினைவில் வைத்துக்கொள்வது சிரமமாகி அது அன்றாட செயற்பாடுகளுக்கு தடையாகவும் சிறுவிடயங்களைக்கூட செய்துகொள்ள முடியாத அளவிற்கு நினைவாற்றல் மங்கிப்போகுமானால் அதுபற்றி மிகவும் அவதானம் செலுத்த வேண்டும். அது சிலசமயம் அல்ஸய்மர் எனும் முதுமை நினைவாற்றல் இழப்பு நோயின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கக்கூடும். அவற்றை ஆரம்பத்திலேயே கண்டுகொள்ள முடியுமானால் பின்னர் ஏற்படும் பல பாதிப்புகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள துணைபுரியும். இந்நோயின் ஆரம்ப அறிகுறிகளை அறிந்துகொள்ள சில வழிமுறைகளையும் கட்டாயம் எங்களில் கவனித்துக்கொள்ள வேண்டிய சில விடயங்களையும் இங்கு குறிப்பிடுகிறோம்.

**1.நினைவாற்றல் குறைந்து செல்லல்**

நினைவு அல்லது ஞாபகம் குறைந்து செல்லல் இந்நோயின் பொதுவான அறிகுறியாகும்.

உதாரணமாக

★ மிக அண்மையில் அல்லது சற்று முன்பு நடந்த விடயங்களை மறந்துவிடுதல்

★ முக்கியமான தினங்கள், பெயர்கள், நிகழ்வுகள் என்பன மறந்து போதல்

★நடந்த ஒரு பெரிய நிகழ்வு கூட நினைவில் நிற்காமல் போதல்

★ ஒரு விடயத்தைத் திரும்பத்திரும்ப கேட்கவேண்டிய நிலை ஏற்படுதல்

**2. திட்டமிடவும் பிரச்சினை தீர்க்கவும் சங்கடப்படுதல்**

உதாரணமாக

★ஒரு விடயத்தை திட்டம் இடுவதற்கும் அதை உறுதியாக செயற்படுத்துவற்கும் முடியாமற்போதல்

★ஏற்கனவே பல தடவைகள் செய்து வந்த விடயங்களை, முகம் கொடுத்த சிக்கல்களை செய்ய முடியாமல் போதல்

★விவரமாகவும் தெளிவாகவும் உள்ள விடயங்கள் மீது கூட அவதானம் செலுத்த முடியாது போதல். உதாரணமாக வங்கிக்கணக்கில் பணத்தை வைத்து பிறகு அதன் இருப்பு எவ்வளவு இருக்கும் என்பதை தெரிந்து கொள்வதில் குழப்பமாக இருத்தல்

**3. அன்றாட வேலைகள் சவாலாக இருத்தல்**

உதாரணமாக

★ மிகவும் இலகுவானதும் அதே நேரம் வழக்கமாகச் செய்துவந்த விடயங்களை செய்வதில் குழப்பம் ஏற்படல்

★ நன்றாக தெரிந்த ஓர் இடத்திற்கு செல்வதிலும் சென்றால் வருவதிலும் மறந்துவிடுதல்

★ நான் இப்போது எங்கு இருக்கிறேன் என்று தனக்கே கேட்டுக் கொள்ளல்

★ இந்த இடத்திற்கு எப்படி வந்தேன் என்ற சந்தேகம் ஏற்படல்

★ எங்கு இருக்கிறேன்? எப்படி வந்தேன்? என்று மற்றவரைக்கேட்டல்

**5. பார்வையில் மாற்றம் ஏற்படல்**

உதாரணமாக

★ வாசிப்பவராக இருந்தால் ஒரு பந்தியில் அல்லது ஏதாவது ஒரு பகுதியில் உள்ள சொற்களை வாசிக்க முடியாமல் போதல்

★ அண்மையில் இருப்பது தூரமாக இருப்பது போன்று விளங்குதல்

★ அண்மையில் இருப்பவற்றை புரிந்து கொள்ள இயலாது போதல்

**6. உபயோகிக்கும் சொற்களிலும் உரையாடல்களிலும் தடங்கள்களும் அதிருப்தியும் ஏற்படல்**

உதாரணமாக

★ சொற்களஞ்சியம் பாரமாகி அவற்றை கையாள்வதில் சிக்கல் ஏற்படல்

★ உரையாடும் போது சரியான பொருத்தமான சொல்லை தெரிவு செய்வதில் தடைகள் ஏற்படல்

★ ஒரு சொல்லுக்கு பிழையான அல்லது தவறான சொற்களை பயன்படுத்ததுதல்

★ மற்றவர்களோடு உரையாடுவதில் தடங்கள்கள் ஏற்படல்

★ அதன் காரணமாக உரையாடல்களில் இருந்து தவிர்ந்து கொள்ளல்

★ உரையாடிக்கொண்டிருக்கும் போது என்ன சொல்வது என்று தெரியாமல் அதை இடையில் நிறுத்திவிடுதல்

★ ஒரு விடயத்தை தனக்குள்ளேயே திருப்பித்திருப்பி சொல்லிக்கொள்ளல்

**7. பொருட்களை தொலைத்துவிடுதல்**

உதாரணமாக

★ அன்றாடம் உபயோகிக்கும் பொருட்கள் தனக்குத் தெரியாமலேயே தொலைந்துபோதல்

★ வழமைக்கு மாற்றமான இடங்களில் பொருட்களை வைத்தல். கைக்கடிகாரத்தை குளிர்சாதனப் பெட்டியிலும் பாதணிகளை ஒரு பையிலும் மறைத்து வைத்தல்

**8. விருப்பமான வேலைகளில் இருந்து விலகுதல்.**

உதாரணமாக

★ சமைத்தல், புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், இயற்

முதுமையில் ஏற்படும் நினைவாற்றல் இழப்பு ஒரு சாதாரண விடயமல்ல. நினைவு இழந்து போனால் அதை அனுபவிப்போரைப்போன்று அவரோடு இருப்பவர்களுக்கும் ஏதோ விதத்தில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டுவிடும். அவர்கள் விடயங்களை ஒழுங்கின்றி செய்வது, பொருத்தமின்றி விடயங்களைக் கேட்பது, தடுமாற்றத்தோடு இருப்பது எல்லாமே மற்றவரகளுக்கு சிலசமயம் கவலையை, கோபத்தை கொண்டுவரலாம்.

இந்நோயிற்கு உள்ளானவர்கள் வேண்டுமென்றே அப்படி செயற்படுவதில்லை. நடப்பது என்ன? ஏன்? என்பதை அவர்களால் கூட புரிந்துகொள்ள முடியாமல் தவிப்பார்கள். கவலை, அழுத்தம், சோர்வு, தனிமை, கோபம், தடமாற்றம் போன்ற பல உணர்வுகளும் செயல்களும் அவர்களின் கட்டுப்பாட்டை மீறி வந்துவிடும். அதனால் நாம் ஒருபோதும் அவசரமோ, ஆவேசமோ கோபமோ அடையக்கூடாது. இந்த இடத்தில் நாங்கள் கடைபிடிக்கும் பொறுமை ஒரு சாதாரண பொறுமையாக இருக்காது. அதற்குக்காரணம் அவர்களோடு பொறுத்துச் செயற்படுவது என்பது மிகவும் கடினமானதும் அதே நேரம் மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். அதனால் பொறுமையை பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள முடியுமானால் அது அவருக்கும் எங்களுக்கும் நாம் வழங்கும் அழகிய பரிசாக ஆகிவிடும்.

முதியவர்கள் எவராக இருப்பினும் அவர்களை மதிப்பதும் அவர்களோடு கௌரவமாக நடந்து கொள்வதும் வணக்கமாகும் என இஸ்லாமிய உளவியல் கொள்கை எடுத்துக்கூறுகிறது. அதிலும் நினைவாற்றல் இழந்து தட்டுத்தாடுமாறி செய்வதறியாமல் வாழ்ந்து கொண்டு இருக்கும் ஒரு முதியவருக்கு செய்யும் சேவை எவ்வளவு பயன் பொருந்திய செயலாகவும் அர்ப்பணமாகவும் அமைந்துவிடும் என்பதை வார்த்தைகளின் அறிவில் சொல்லவே முடியாது.

முதுமையில் ஏற்படும் இந்த நினைவாற்றல் இழப்பிற்கு உள்ளான முதியவர்களை சங்கடப்படாமல் கவனிக்க இலகுவான முறைகளை மருத்துவர்கள் ஆய்வு செய்து கற்றுத்தருகின்றனர். மருத்துவர்களை நாடி அந்த முறைகள் பற்றியும் நோயின் தன்மை பற்றியும் தெரிந்துகொள்ளலாம்.

---






## இந்தவார வெற்றியாளர்

★ எம்.எம். உவைஸ். பாணந்துறை.

கேள்வி:- உயர்ந்தவன் தாழ்ந்தால்?

பதில்:- தாழ்ந்தவன் மகிழ்வான்.



**வெற்றியாளர் தனது பரிசை பெற்றுக்கொள்ள 0773153618 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்**

★ எஸ்.எம். மஸாஹிர். காத்தான்குடி.
கேள்வி:- கருவறைக்கும், கல்லறைக்கும் என்ன வித்தியாசம்?
பதில்:- வெளியே வந்தால் திரும்ப உள்ளே புக முடியாதது கருவறை, உள்ளே சென்றால் திரும்ப வெளியே வர முடியாதது கல்லறை.

★ எம்.ஏ. இஸ்மாயில். நாவலப்பிட்டி.
கேள்வி :- ஒரு மனிதனுக்கு எப்போது சனியன் பிடிக்கிறது?
பதில்:- பிடித்த சனியன் எப்போது தொலைகிறது என்று பாருங்கள்.

★ கே.எம். சக்கில். நொச்சியாகம.
கேள்வி:- காகம் ஏன் கறுப்பாக இருக்கிறது?
பதில்:- அதன் எச்சம் வெள்ளையாக இருப்பதை சிந்தியுங்கள்.

★ யூ.எம். லாஹிர். பேராதெனிய.
கேள்வி:- கோடீஸ்வரர்கள் எல்லாம் நிம்மதியாகத் தூங்குவார்களா..?
பதில்:- அவர்களைப் பற்றி யோசிப்பவர்களும் அமைதியாகத் தூங்குவதில்லை.

★ கே.ஏ. புர்கான். வெலிமட.
கேள்வி:- யாருக்குப் பட்டம் வழங்கலாம்?
பதில்:- இப்போதைய பட்டம் எருமைக்கும் வழங்கப்படுகின்றது.

★ எம்.எம். உவைஸ். பாணந்துறை.
கேள்வி:- உயர்ந்தவன் தாழ்ந்தால்?
பதில்:- தாழ்ந்தவன் மகிழ்வான்.

★ எஸ்.என். மிப்லார். பரகஹதெனிய.
கேள்வி:- முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மோசமானவர்களா?
பதில்:- முஸ்லிம் சமூகத்தோடு ஒத்துப் பார்த்தால் அவர்கள் பரவாயில்லை.

★ கே. லெட்சுமணன். கொழும்பு.
கேள்வி:- மனிதனுக்கும், பிசாசுக்கும் என்ன வித்தியாசம்?
பதில்:- மனிதன் பிசாசாவான். பிசாசு மனிதனாவதில்லை.

★ எஸ்.எச்.எம். அஷ்ரப். திருகோணமலை.
கேள்வி:- கோழி கூவினால் பொழுது விடியுமா?
பதில்:- விடியாது. சேவல் கூவினால் விடியும்.

★ ஏ.ஏ. ஜாவித். மடவலை.
கேள்வி:- சிவாஜியின் நடை சிங்கத்தின் நடையா?
பதில்:- இல்லை. சிங்கம் நடப்பது சிவாஜியின் நடை.

★ எம்.எம். பாரிஸ். நீர்கொழும்பு.
கேள்வி:- அரவியல்வாதி, ஆன்மீகவாதி, இலக்கியவாதி இவர்கள் பற்றி..?
பதில்:- அரசியல்வாதி அடிக்கிறான். ஆன்மீகவாதி நடிக்கின்றான். இலக்கியவாதி படைக்கின்றான்..

★ ஏ.கே.எம். அலாவுடீன். குருநாகல்.
கேள்வி:- அதிக பாடங்களைக் கற்றுத் தரும் ஆசிரியர் யார்?
பதில்:- அனுபவம்.

★ றினோசா. கண்டி.
கேள்வி:- பசுமை மரத்துக்கும், பட்ட மரத்துக்கும் என்ன வேறுபாடு?
பதில்:- பசுமை மரம் ஒருநாள் பட்ட மரமாகும். பட்ட மரம் மீண்டும் பசுமை மரமாகாது.

★ எஸ்.ஏ. பஸீர். திஹாரிய.
கேள்வி:- நாம் விரும்பும் கான மயிலை விட நம்மை விரும்பும் கருங்குரங்கு சிறந்தது தானே?
பதில்:- நமக்கு சிறந்ததுதான். பாவம் கருங்குரங்கு.

★ஒவ்வொரு வாரமும் பிரசுரிக்கப்படும் கேள்விகளில் சிறந்த கேள்விக்கு, இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் வழங்கும் 1000/- ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.

★ கேள்விகளை சுருக்கமாக தபாலட்டையில் மாத்திரம் எழுதி பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

★ முகவரி வெட்டி ஒட்டப்படாத தபாலட்டை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

NAVAMANI Newspaper
Samookajothiyin Sangamam
# 156, Hospital Road,
Kalubowila, Dehiwala

---

# அபிவிருத்தி பணிகள் தொடர்பாக ஹக்கீம் - விஜயமுனி பேச்சு



(நாச்சியாத்தீவு பர்வின்)

நீர்ப்பாசன அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும் நீர் வழங்கல் அமைச்சின் உயர் அதிகாரிகளுக்குமிடையிலான உத்தியோக பூர்வமான சந்திப்பொன்று பாராளுமன்ற கட்டடத்தொகுதியுள்ள அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சாவின் பிரத்தியேக அறையில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது இரண்டு அமைச்சுகளுக்குமிடையில் அபிவிருத்தி தொடர்பில் எதிர்நோக்கப்படும் தடைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதோடு, அவற்றில் சிலவற்றுக்கான தீர்வுகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

அண்மையில் அனுராதபுரத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கொண்டிருந்தார். இதன் போது அங்கு பூர்த்திசெய்யப்பட்ட நீரை சுத்திகரித்து வழங்குகின்ற குடிநீர் திட்டங்களை, மக்கள் பாவனைக்காக அவர் திறந்து வைத்ததோடு புதிய நீர் வழங்கல் திட்டங்களையும் ஆரம்பித்து வைத்தார்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மிக அதிகமாக வசிக்கின்ற மாவட்டமாக அனுராதபுர மாவட்டம் விளங்குவதனால், நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களின் தேவை இந்த மாவட்டத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். எனவே அமைச்சர் ஹக்கீமின் இந்த விஜயம் அனுராதபுரத்திற்கு நன்மை பயக்கின்ற விதத்திலேயே அமைந்திருந்தது. அன்றைய தினம் பகல் போசனத்திற்காக நாச்சியாதீவுக்கு சென்ற அமைச்சருக்கு அந்த கிராமத்து மக்கள் சிறந்த வரவேற்பை வழங்கியதோடு கடந்த சில ஆண்டுகளாக எதிர்நோக்குகின்ற மேலதிகமாக ஊரின் மத்தியில் வெட்டப்பட்டு அரசினால் பராமரிக்கப்படாமல் இருக்கின்ற கால்வாய் தொடர்பில் அமைச்சரின் அவதானத்திற்கு கொண்டு வந்ததோடு அந்த இடத்திற்கு அமைச்சரை அழைத்துச்சென்றனர். கால்வாயின் இருமருங்கிலும் வசிக்கின்ற மக்கள் திரளாக அமைச்சரை வரவேற்றதோடு மழை காலத்தில் இந்தக்கால்வாயினால் ஏற்படுகின்ற மண்ணரிப்பு, தோட்டப்பயிர் செய்கைக்கு ஏற்படுகின்ற பாதிப்பு போன்றவற்றை தெளிவு படுத்தி இதற்கான தீர்வினை வேண்டிநின்றனர். இது தொடர்பில் அந்த மக்களினால் மகஜர் ஒன்றும் அமைச்சருக்கு கையளிக்கப்பட்டது.

சுமார் 1 கி.மீ. தூரம் நீளமான இந்த கால்வாய் 30 அடி அகலத்திற்கு வெட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாச்சியாதீவு கால்வாய் தொடர்பில் அமைச்சர் ஹக்கீம் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவுக்கு தெளிவு படுத்தினார். அமைச்சர் ஹக்கீமின் வேண்டுகோளை உடனடியாக செயற்படுத்தவும் அது தொடர்பிலான திட்டமிடல் அறிக்கையை தயாரிக்கவும் நீர்ப்பாசன திணைக்களத்தின் முகாமையாளர் சுனில் பெரேராவுக்கு அமைச்சர் விஜயமுனி சொய்சா பணிப்புரை வழங்கினார்.

ஹெடஓயா நீர்வழங்கல் திட்டத்தினை கொண்டு நடாத்துவதற்கு தடையாக இருக்கின்ற காரணிகளை ஆராய்ந்து அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்து கொடுக்குமாறு நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகாரிகளை அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா பணித்தார் மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபைக்குட்பட்ட பொதுமக்களுக்கான குடிநீரை பெற்றுக்கொள்ள வியாடிக்குளத்தின் நீர்ப்பாசனத்தை பயன்படுத்துவதற்கான அனுமதியும் இங்கு பெற்றுக்கொள்ளப்பட்டது. அமைச்சர் ரவூப் ஹக்கீம் எனது நெருக்கமான நண்பர். அவருக்கு மிகவும் பொருத்தமான அமைச்சே கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீர்வழங்கல் தொடர்பில் அவரது அமைச்சின் அதிகாரிகளுக்கு நீர்ப்பாசத்திணைக்களம் தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என்று அமைச்சர் விஜயமுனி சொய்சா கூறினார்.




# அல் – குர்ஆனில் அறிவியல்

* பாத்திமா மைந்தன்

திருக்குர்ஆன் இறைவனால் வழங்கப்பட்ட இறுதி வேதம். அது அற்புதங்களுக்கெல்லாம் அற்புதம். ஆன்மீகப் பெட்டகமான திருக்குர்ஆன், இன்று அறிவியல் ஆய்வுக் களஞ்சியமாகத் திகழ்வது கண்டு அறிவுலகம் திகைப்பிலும், வியப்பிலும் ஆழ்ந்துள்ளது. 1,400 ஆண்டுகளுக்கு முன்னர் மனித அறிவுக்கு எட்டாத பல கருத்துகள்

திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளன.

'பெரு வெடிப்பு கோட்பாடு' என்பது இந்தப் பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது என்பதைப் பற்றி விளக்க முயலும் ஒரு கோட்பாடு ஆகும். தொடக்க நிலையில் இந்த உலகம் ஒரு பெரும் பருப்பொருளாக இருந்தது. அது திடீரென்று வெடித்துச் சிதறியது. அவ்வாறு வெடித்துச் சிதறிய துண்டுகள் மணிக்கு 72 மில்லியன் கிலோ மீட்டர் வேகத்தில் பிரபஞ்ச வெளியில் விலகி ஓடின. அப்போது பிரபஞ்சம் முழுவதும் புகை மண்டலமாகக் காட்சி அளித்தது.

மகா வெடிப்புக்குப் பிறகே நட்சத்திரக் கூட்டங்கள் உருவாயின. மேலும் இவை சூரியனாகவும், பூமியாகவும், சூரிய மண்டலத்தில் உள்ள மற்ற கோள்களாகவும் உருவாயின. பிரபஞ்சம் தோன்றிய இந்த நிகழ்ச்சியை,

'கோளங்களும், பூமியும் (ஆரம்பத்தில்) ஒரே துண்டாக (ஒன்றாகத்தான் இருந்தன. பிற்பாடு நாம் அவற்றைத் தனித்தனியாகப் பிரித்தோம்' (திருக்குர்ஆன்-21:30)

என்று இறைவன் கூறுகின்றான்.

இன்றைய விஞ்ஞான உலகில் கூறப்படும் பெரு வெடிப்பு கோட்பாட்டை 1400 ஆண்டுகளுக்கு முன்பே திருக்குர்ஆன் இந்த வசனத்தின் மூலம் எடுத்தியம்புகின்றது. இந்தப் பேரண்டம் நட்சத்திரக் கூட்டங்கள் உருவாவதற்கு முன்பு புகை மண்டலமாக இருந்தது என்ற அறிவியல் உண்மை மகா வெடிப்பு கொள்கையின் மூலம் உறுதிப்

படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கருத்தையே,

'பிறகு அவன் வானம் புகையாக இருந்தபோது (அதைப்) படைக்க நாடினான்' (திருக்குர்ஆன்-41:11) என்ற வசனம் பிரதிபலிக்கிறது.

விரிந்து கொண்டே செல்லும் பரந்த தன்மை கொண்டதாக இந்தப் பிரபஞ்சத்தை இறைவன் படைத்திருப்பதை, 'மேலும் நாம் வானத்தை (எவருடைய உதவியுமின்றி நம்) சக்தியைக் கொண்டு அமைத்தோம். நிச்சயமாக நாம் விரிவாற்றல் உடையவராவோம்' (திருக்குர்ஆன்-51:47) என்ற வசனம் உறுதிப்படுத்துகிறது.

நாம் வாழுகின்ற இந்தப் பிரபஞ்சம், விரிவடைந்து கொண்டிருக்கிறது என்ற பேருண்மையை வானியல் நிபுணர் எட்வின் ஹப்பிள் வெளிப்படுத்தினார். இது குறித்து அமெரிக்காவின் மாபெரும் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங், 'நாம் வாழும் இந்தப் பிரபஞ்சம் விரிந்து கொண்டே போகின்றது என்ற விஞ்ஞான கண்டுபிடிப்பானது, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் அறிவுப் புரட்சிகளில் ஒன்றா

கவே திகழ்கிறது' என்று கூறியுள்ளார்.

பண்டைய காலத்தில் பூமி தட்டையானது என்ற நம்பிக்கை வெவ்வேறு நிலைகளில் நிலவியது. பின்னர் பல்வேறு காலகட்டங்களில் விஞ்ஞானிகள், இந்த பூமி உருண்டை வடிவிலானது என்ற உண்மையை உறுதிப்படுத்தினார்கள். இரவு-பகல் மாற்றம் குறித்து திருக்குர்ஆனில் ஏராளமான வசனங்கள் இடம் பெற்றுள்ளன. இதன் மூலம் பூமி உருண்டை வடிவிலானது என்பதை உணர முடிகிறது.

'நீ தான் இரவைப் பகலில் புகுத்துகிறாய். நீ தான் பகலை இரவிலும் புகுத்துகிறாய்' (திருக்குர்ஆன்-3:27) என்றும்,

'நிச்சயமாக அல்லாஹ்தான் இரவைப் பகலில் புகுத்து கிறான். பகலை இரவில் புகுத்துகிறான்' (31:29) என்றும் திருமறையில் இறைவன் கூறுகின்றான்.

'புகுத்துதல்' என்றால் ஒரு நிலை இருக்கும்போது,



அது திடீரென்று மற்றொரு நிலைக்கு மாறி விடாமல், சிறிது சிறிதாக மாறி மற்றொரு நிலையை அடைவதே ஆகும்.

திடீரென்று இரவும், திடீரென்று பகலும் மாறி மாறி வந்து விடுவதில்லை. பூமியின் பாதிப்பகுதியில் சூரிய வெளிச்சம் விழுவதால் அது பகல் என்று அழைக்கப்படுகிறது. அதற்கு எதிர்ப்புறம் உள்ள பகுதி சூரிய வெளிச்சத்திற்கு அப்பாற்பட்டுள்ளதால் அது இரவு என்று அழைக்கப்படுகிறது.

சூரிய வெளிச்சம் படும் பகுதியில், ஒரு பகுதி இரவில் இருந்து விடுபட்டு பகலை நோக்கி வருகிறது. மற்றொரு பகுதி பகலில் இருந்து விடுபட்டு இரவை நோக்கி நகருகிறது. பூமி, உருண்டை வடிவில் இருப்பதால் சூரியனுடைய வெளிச்சம் ஒரே சீராக எல்லாப் பகுதிகளிலும் இருப்பதில்லை. உதிக்கும் பகுதியிலும், மறையும் பகுதியிலும் மிகக்குறைவான வெளிச்சமும், பூமத்திய ரேகை பகுதிகளில் அதிகமான வெளிச்சமும் காணப்

படுகிறது. இதைப்போலவே இரவும் வருகிறது.

இப்படி இரவும் பகலும் பல நிலைகளைக் கடந்து மெல்ல மெல்ல புகுத்தப்படுவதால், திருக்குர்ஆனில் 'புகுத்துதல்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பூமியானது உருண்டை வடிவில் இருப்பதாலும், பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருவதாலும் மட்டுமே இரவும் பகலும் மாறி வருவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு.

கீழ்க்கண்ட திருக்குர்ஆன் வசனம், பூமி உருண்டை வடிவானது என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டு கிறது: 'அவன் வானங்களையும், பூமியையும் உண்மையைக் கொண்டு படைத்திருக்கின்றான். அவனே பகலின் மீது இரவைச் சுருட்டுகிறான். இன்னும் இரவின் மீது பகலைச்

சுருட்டுகிறான்' (திருக்குர்ஆன்-39:5).

இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள 'சுருட்டுதல்' என்பதற்கு ஒன்றின் மீது ஒன்றைச் சுருட்டுதல் என்று கருதலாம். இது தலையில் சுற்றப்படும் தலைப்பாகைக்கு ஒப்பான செயலாகும். தலைப்பாகையும் ஒன்றின் மீது ஒன்றாகச் சுற்றப்படுகிறது. இது பகலின் மீது இரவும், இரவின் மீது பகலும் சுற்றப்படுகிறது என்பதைச் சுட்டுகிறது. பூமி உருண்டையாக இருக்கும் போதுதான் இரவும் பகலும் சுற்றி வரும் செயல் நிகழமுடியும்.

***

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது

மௌலானா அப்துல் வஹ்ஹாப்
தொகுப்பு: அபூஸஃவான் ஸாபித்

## தொடர் - 68

### பரிகாசம் செய்தல்

முஃமின்களே! ஒரு சமூகத்தார் பிறிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம்; (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) – ஏனெனில் இவர்கள் அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம்; இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள்; ஈமான் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும்; எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள்.

முஃமின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்; ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும்; (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள்; அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன்; மிக்க கிருபை செய்பவன்.

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

நாங்களும் ஈமான் கொண்டோம் என்று (நபியே! உம்மிடம்) நாட்டுப்புறத்து அரபிகள் கூறுகிறார்கள், நீங்கள் ஈமான் கொள்ளவில்லை. எனினும் நாங்கள் வழிபட்டோம் (இஸ்லாத்தை தழுவினோம்) என்று (வேண்டுமானால்) கூறுங்கள் (என நபியே! அவர்களிடம்) கூறுவீராக. ஏனெனில் உங்களுடைய இதயங்களில் (உண்மையான) ஈமான் நுழையவில்லை; மேலும், நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடப்பீர்களாயின் அவன் உங்களுடைய நற்செய்கைகளில், எதையும் உங்களுக்குக் குறைக்க மாட்டான் நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன்; மிக்க கிருபையுடையவன்.

நிச்சயமாக, (உண்மையான) முஃமின்கள் யார் என்றால், அவர்கள் அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதர் மீதும், ஈமான் கொண்டு, பின்னர் (அது பற்றி அவர்கள் எத்தகைய) சந்தேகமும் கொள்ளாது, தம் செல்வங்களைக் கொண்டும், தம் உயிர்களைக் கொண்டும் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்வார்கள் – இத்தகையவர்கள் தாம் உண்மையாளர்கள்.

# நாம் அறிய வேண்டியது

* மௌலானா சதருத்தீன் இஸ்லாஹி

முஸ்லிமாக இருப்பதற்கு 'இஸ்லாம் என்றால் என்ன?' என்பதைத் தெரிந்து கொள்வது எவ்வளவு அவசியமோ அதே அளவு 'எது இஸ்லாம் இல்லை?' என்பதைத் தெரிந்து கொள்வதும் அவசியமாகும். இல்லாவிட்டால் இஸ்லாத்தை

அதன் தனிப்பட்ட தூய வடிவில் பாதுகாப்பதோ, பின்பற்றுவதோ இயலாது போய்விடும்.

இன்று நாம் இஸ்லாத்தைப் பற்றி உண்மையான நல்ல விஷயங்கள் சிலவற்றைத் தெரிந்து கொள்வோம், நாளை இஸ்லாம் அல்லாத வேறு சில விஷயங்களைத் தெரிந்து கொள்வோம். இறுதியில் எது உண்மையான சொத்து என்பதை உணர முடியாமல், இயற்கையான உருவில் – அம்மண வடிவில் – நுழைவதில்லை. இஸ்லாமியப் பசுத்தோலைப் போர்த்திக் கொண்டும், சலுகைகளின் பெயராலும் தான் நுழைகின்றது. முஸ்லிம்களோ மிகமிக எளிதாக அதற்குப் பலியாகி விடுகின்றனர். முந்தைய சமூகத்தினர் தங்களுடைய இறைத்தூதர்களிடமிருந்து தூய, கலப்பற்ற தீனைப் பெற்றபின்னும் – ஒன்றிரண்டு தலைமுறைகளுக்குள்ளாக வழிகெட்டுப் போனதற்கு இதுதான் காரணமாம்.

இஸ்லாம் அல்லாத விஷயங்களை அறிந்து கொள்வது, அறிந்து கொண்டே இருப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். தனிப்பட்ட வாழ்வின் சீர்திருத்தம், பயிற்சி என்பன எந்தளவு அவசியமோ, அதைவிடவும் அதிகமாக சமூகச்சீர்திருத்தம், சமூகத்தூய்மைக்கு அவசியம்.

இஸ்லாத்திற்கு எதிரான செயல்கள் எவை என்பதை அறிந்து கொள்ளாத நிலையில் ஒரு சமுதாயம் கண்டிப்பாக இஸ்லாமியப் பாதையில் முன்னேறிச் செல்லவே முடியாது. எந்தெந்தச் செயல்களை விட்டு மக்கள் விலகியிருக்க வேண்டும் என்பதை எண்ணிச் சொல்வதும், அழைப்புப்பணியில் ஒரு முக்கிய அம்சம் ஆகும்.

சத்திய அழைப்பின் திறந்த புத்தகமாக, இறுதிநாள் வரைக்கும் பாதுகாக்கப்படும் வேதமறையான அல்குர்ஆன் தீமையின் பக்கமும், வழிகேட்டின் பக்கமும் கைப்பிடித்து அழைத்துக்கொண்டு சென்று கழுத்தைப் பிடித்துத்தள்ளி விடுகின்ற செயல்கள் எவை? எவை? என்று அறிவித்துக்கொண்டே உள்ளது.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்களான ஸஹாபாக்களும் இவ்விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்கள்.

வான்மறை குர்ஆன் எனும் உரைகல்லில் தங்களை உரசிப்பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

சின்னஞ்சிறிய கரும்புள்ளி ஒன்று தமது உள்ளத்தில் வந்துவிட்டதாக, அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டாலும் பதறியடித்துக்கொண்டு ஓடிவந்தார்கள். "அபூபக்கர் அவர்களே! நான் முனாஃபிக் ஆகிவிட்

டேன், நான் முனாஃபிக் ஆகிவிட்டேன்!" என்று அலறியடித்துக் கொண்டு ஹன்ளலா ரலியல்லாஹு அன்ஹு ஓடிப்போனாரே! எதற்காக?

அண்ணலார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு அமர்ந்திருந்தால் ஈமானிய உணர்வு பொங்கி வழிகின்றது, வீட்டிற்குப் போய் குழந்தை குட்டிகளோடு கலந்துவிட்டாலோ மங்கிவிடுகின்றது, அப்படியென்றால்...? அப்படியென்றால் என்ன பொருள்? நிஃபாக் வந்து விட்டது என்று தானே...! காரணத்தை கேட்டுக்கொண்ட பிறகு, "என்னுடைய நிலையும் இப்படித்தானே உள்ளது. அப்படியென்றால்

நானும் முனாஃபிக் ஆகிவிட்டேன்!" என்று அபூபக்கர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களும் சேர்ந்து அங்கலாய்க்கத் தொடங்கினார்கள். இருவரும் ஒன்றாக, அழுதுகொண்டே இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்றார்கள். விஷயத்தை அறிந்து கொண்டு அண்ணலார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருவரையும் அமைதிப்படுத்தினார்கள். உள்ளத்தில் இத்தகைய தடுமாற்றம் ஏற்படுவது இயற்கையே, இது நிஃபாக் ஆகாது, என்று கூறி ஆறுதலடையச் செய்தார்கள்.

"நான் முப்பது நபித்தோழர்களை சந்தித்து உள்ளேன். 'நான் முனாஃபிக்காக இருப்பேனோ?' என்று அவர்களில் ஒவ்வொருவரும் தம்மைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்" என்று தாபியீன்களில் புகழ்பெற்ற இப்னு அபி முலைக்கா அறிவிக்கிறார். (நூல்: புகாரி)

"தன்னிடம் நிஃபாக் இல்லவே

இல்லையென்று ஒரு முனாஃபிக் மட்டும்தான் கருதுவான். அதைப்பற்றி பயந்துகொண்டே இருப்பதுதான் முஃமினுடைய பண்பு!" என்று ஹஸன் பஸரி ரஹ்மதுல்லாஹி அலைஹி குறிப்பிடுகிறார்கள்.

"தனக்குத் தெரியாமலேயே தன்னுடைய நற்செயல்கள் அழிந்துவிடக்



கூடாதே என்றே முஃமினின் அச்சம்!" எனும் தலைப்பில் இமாம் புகாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஒரு தலைப்பையே வகுத்துள்ளார்கள். சத்திய ஸஹாபாக்களின் இம்முன்மாதிரி நடைமுறையை நாம் கண்டிப்பாக கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

# எதற்கு வருடமொருமுறை கரகோஷம்

– ஷுஆதா அன்ஸார் – உயன்வத்த

பெண்ணை பெண்ணாக பார்க்க மறுத்த காலமது. நாவிற்கு விலங்கிட்டு பேசா மடந்தையாக்கி, தான் நினைத்ததை அமுலுக்கு கொண்டுவந்தே, அவளது விருப்பு வெறுப்புக்களை உதாசீனம் செய்து, உரிமைகளை மறுத்து, ஆணாதிக்கத்தை பரப்பி வாழ்ந்த ஜாஹிலியா எனும் அறியாமைக் காலத்தை ஒரு கனம் பின்னோக்கிப் பார்த்தால், பெண்ணாக பிறந்தனோ வையகத்தில் என்று கலங்கவைக்கிறது.

அறியாமை எனும் இருளில் பெண் குழந்தை பிறந்த செய்தி கேட்டாலே ஈரக்குலை நடுங்கியது. அரபிகளுக்கு முகமோ சிவந்தது ஏன்? சந்தோசத்திலல்ல.

வெட்கத்தில், போராடியே காலம் ஓட்டியோருக்கு தேவைப்பட்டது ஆண் குழந்தையல்லவா? பெண்களை பாதுகாப்பது மற்றொரு பிரச்சினை. தீர்வு கண்டார்கள். மண்ணோடு மண்ணாக உயிரோடு புதைத்தார்கள். கல்லைவிட கனத்த மனதுடன்.

தந்தைக்குப் பிறகு தாயை தாரமாக்கி சுகம் அனுபவிக்கத் தயங்கவில்லை. மதுவுடனே மாதையும் பரிமாறவும் மறக்கவில்லை. சொத்திலே பங்கேதுமில்லை உமக்கு. ஆண்களாகிய எமக்கே அது

சொந்தம் என ஏகபோக உரிமையை தமதாக்கினர் குடும்பத்தினர்.

பெண்ணை பணயம் வைத்து பந்தயம் ஆடியே தோற்றவுடன் மனைவி என்று பாராது தாரை வார்த்துக் கொடுக்கவும் தயங்கவில்லை அன்று.

அகிலத்திற்கொரு அருட்கொடையாய் தரணியில் வந்துதித்த நபி (ஸல்) அவர்களால் பெண்ணடிமைக்கு வைக்கப்பட்டது முற்றுப்புள்ளி

பெண்மையை முழுமையாக்கும் தாய்மைக்கு வழங்கப்பட்ட பரிசு "தாயின் பாதத்தின் கீழ் சுவர்க்கம் உண்டு." பெண்களின் கற்பைக் காக்கவும் ஆண்களின் பார்வையிலிருந்து தற்காப்புப் பெறவும் அறிமுகமானது கண்ணியமான ஆடை அபாயா.

சொத்தில் மூன்றிலொரு பங்கு பெண்களுக்கென பட்டத்தவனே இட்டான் கட்டளை. சீதனத்தை முற்றாகவே ஒழித்து, மஹர் எனும் மண மகளுக்கான அழகிய அன்பளிப்பை வழங்குமாறு கூறியது இஸ்லாம். அதைக் கொடுத்தால்தான், உமக்கு மனைவி சொந்தம் என்று கூறியே மென்மக்களை பெற்றெடுத்த பெற்றோரின் மனச் சுமையை இறக்கியருள் புரிந்த மார்க்கமே இஸ்லாம்.

# கரகோஷம்

திருமணமென்றால் கூட பெண்ணின் சம்மதத்துக்கு முதலிடமளித்து, தனக்கு மணவாளனை தேர்வு செய்யும் உரிமையை பெண்களுக்கு அளித்தது இஸ்லாமே.

கருத்துச்சுதந்திரம் மட்டுமா! ஆண்களுக்கு கொடுத்தது போன்றே சம உரிமை, நீதியை வழங்கி பெண்களும் மானிடப் பிறவி என்பதை உணர்த்தி கண்ணியப்படுத்திய ஒரே மார்க்கம் இஸ்லாமே.

பெண்ணானவள் சம்பாதிக்க வேண்டும் என்ற கட்டாயப்படுத்தவில்லை இஸ்லாம். பதிலாக அவள் தந்தை சகோதரன் கணவன் மகன் என்பவர்களால் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டியவள் என்றே இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

இஸ்லாம் பெண்களுக்கான சகல உரிமைகளையும் ஆயிரத்து நானூறு ஆண்டு களுக்கு முன்பே வழங்கி, பெண்களை கௌரவித்துள்ளது.

அத்தனை உரிமைகளையும் பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியிருக்க வருடமொரு முறை மார்ச் எட்டில் மாத்திரம் எதற்கு உலகம் முழுவதும் உரிமை



கேட்டு கரகோஷம்.

# சுதந்திர பலஸ்தீனும் தென் அமெரிக்க அரசுகளும்

■ றவூப் ஸெய்ன்

பலஸ்தீன மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகள் ஐக்கியம், ஜனநாயகம், பொருளாதாரப் பலம் என்பவற்றுடன் இஸ்ரேலுடன் சமாதானமாக வாழும்' சுதந்திர பலஸ்தீனத்தை பிரேஸில் அங்கிகரிக்கின்றது.

இஸ்ரேல்-பலஸ்தீன் பேர்சுவார்த்தை தோல்வியடைந்துள்ள நிலையில் பலஸ்தீன் அதிகார சபை தந்திர பலஸ்தீனத்திற்கான சர்வதேச அங்கிகாரத்தைக் கோரி வருகின்றது. 1967 எல்லைகளுடன் கூடிய ஜெரூசலத்தைத் தலைநகராகக் கொண்ட சுதந்திர பலஸ்தீன் பலஸ்தீனர்களின் எதிர்பார்ப்பு.

லத்தீன் அமெரிக்காவின் பிரேஸில் 1967 எல்லையுடன் கூடிய சுதந்திர பலஸ்தீனத்தை அங்கீகரிப்பதாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. நவம்பர் 24இல் மஹ்மூத் அப்பாஸ் விடுத்த வேண்டுகோளை ஏற்று பிரேஸிலில் ஜனாதிபதி லூயிஸ் இனாஸியோ லூலா டி சில்வா தனது அங்கிகாரத்தை வெளியிட்டுள்ளார்.

இஸ்ரேலியத் தரப்பில் இது ஆத்திரத்தை மூட்டியுள்ளபோதும் உலக நாடுகள் அனைத்தும் சுதந்திர பலஸ்தீனை 1967 எல்லைகளுடன் அங்கிகரிக்க வேண்டும் எனவும் லூலா அப்பாஸுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

பலஸ்தீன மக்களின் சட்டபூர்வமான அபிலாசைகள், ஐக்கியம், ஜனநாயகம், பொருளாதாரப் பலம் என்பவற்றுடன் இஸ்ரேலுடன் சமாதானமாக வாழும் சுதந்திர பலஸ்தீனத்தை பிரேஸில் அங்கிகரிக்கின்றது என அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. காஸா, மேற்குக்கரை, கிழக்கு ஜெரூசலம் என்பனவற்றை உள்ளடக்கிய பலஸ்தீனை சர்வதேச சமூகம் ஆதரிக்கத் தொடங்கியுள்ளதை பிரேஸிலின் முடிவு காட்டுவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

1967ல் நடைபெற்ற ஆறு நாள் யுத்தத்தின்போது இஸ்ரேல் இப்பிராந்தியங்களை முழுமையாகக் கைப்பற்றியது. இஸ்ரேலை ஆதரிக்கும் ஐக்கிய அமெரிக்காவும் சில மேற்கு நாடுகளும் சுதந்திர பலஸ்தீனத்தை அங்கிகரிப்பதற்குத் தயங்குகின்றன. இவ்விவகாரம் இஸ்ரேலுடனான சமாதானப் பேர்ச்சுவார்த்தைகளின் மூலமாகவே தீர்க்கப்பட வேண்டும் என்பது அவற்றின் வெளிப்படையான நிலைப்பாடாக உள்ளது. எனினும், திரைமறைவுக்குப் பின்னால் இந்நாடுகள் சுதந்திர பலஸ்தீன் குறித்து எதிர்மாறான நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. இஸ்ரேலை முழுமையாக அங்கீகரிப்பதிலிருந்து இது தெளிவாகின்றது.

பிரேஸிலின் இந்நிலைப்பாட்டுடன் இணைந்து கொள்வதாக ஆர்ஜன்டீனா, உருகுவே ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன. சுதந்திர பலஸ்தீனத்தை தற்போது மூன்று லத்தீன் அமெரிக்க நாடுகள் அங்கீகரித்துள்ளன. இதுபோன்று ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளும் தமது அங்கிகாரத்தை வெளிப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக வெனிசுவேலா போன்ற நாடுகள் ஏற்கனவே இஸ்ரேலுடன் பாரிய கருத்து முரண்பாடு கொண்டுள்ளன. காஸா மீதான யுத்தத்தின் போது தமது நாடுகளிலிருந்து இஸ்ரேலிய ராஜதந்திரிகளை வெளியேற்றிய தன் மூலம் பலஸ்தீனத்திற்கான தமது அரச ஆதரவை இந்நாடுகள் வெளிப் படுத்தியிருந்தன.

பிரேஸில் தென் அமெரிக்க இயக்கம் என்ற பெயரில் தொடங்கியுள்ள அமைப்பு லத்தீன் அமெரிக்காவின் பிற நாடுகளையும் சுதந்திர பலஸ்தீனத்தை அங்கிகரிக்குமாறு தூண்டுதல் அளித்து வருகின்றது.


தற்போது சுதந்திரப் பலஸ்தீனத்தை அங்கிகரித்துள்ள பிரேஸில் தமது முடிவு இஸ்ரேலுக்கு ஏமாற்றத்தைத் தரக்கூடிய ஒன்றல்ல எனவும், இஸ்ரேலுடனான உறவு இதன் மூலம் பாதிக்கப்படாது எனவும் தெரிவித்துள்ளது. செப்டம்பரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பிரேஸிலும் இடைத் தரகராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பிராந்தியங்களில் மென்மேலும் புதிய யூதக் குடியேற்றத் திட்டங்களை அமுல்படுத்தி வரும் நிலையில் அதனுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அர்த்தமற்றது என்று ஏற்கனவே ஹமாஸ் தெரிவித்திருந்தது. தற்போது அதே கருத்தை அதிகார சபைத் தலைவர் அப்பாஸ் வெளியிட்டு வருகின்றார். அப்பாஸின் வெளிவிவகார அமைச்சர் ரியாத் அல் மாலிகி, பராகுவே மற்றும் ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளும் இதேபோன்ற முடிவை எடுக்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாகக் கூறியுள்ளார்.

ஆஜன்டீனிய வெளிவிவகார அமைச்சர் ஹெக்டர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆஜன்டீனிய அரசாங்கம் பலஸ்தீனை சுதந்திரமும் தன்னிச்சையும் கொண்ட நாடாக அங்கிகரிப்பதாகத் தெரிவித்துள்ளது. ஆர்ஜன்டீனாவைத் தொடர்ந்து தனது அங்கிகாரத்தை வெளியிட்டுள்ள உருகுவே, பலஸ்தீனில் நாம் ஒரு ராஜதந்திர சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளோம் என்று அறிவித்துள்ளது.

இஸ்ரேலியக் குடியேற்றத் திட்டங்களை நிறுத்துவதற்கு மேற்கு நாடுகள் எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. தமது வேண்டுகோளுக்கு இஸ்ரேல் அடிபணியவில்லை என்று மட்டும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிக்கை விடுக்கின்றது. இது இஸ்ரேல் மீதான அமெரிக்க ஆதரவை வெளிப்படுத்துவது மட்டுமன்றி, சுதந்திர பலஸ்தீன தாயகத்தை உருவாக்கும் உண்மையான நோக்கம் மேற்கு நாடுகளுக்கு இல்லை என்பதையும் உணர்த்துகின்றது.

லத்தீன் அமெரிக்க நாடுகளின் இம்முடிவை பலஸ்தீனத்தைச் சூழவுள்ள அறபு நாடுகள் பின்பற்றுமா என்பதே முக்கிய கேள்வியாகும். விக்கிலீக்ஸில் கசிந்துள்ள செய்தியின்படி எகிப்திய தலைவர் முபாரக் ஹமாஸைப் பலவீனப்படுத்த தாம் முழு முயற்சி செய்து வருவதாகக் கூறியிருந்தார். சுதந்திர பலஸ்தீனில் ஹமாஸ் முக்கியதோர் இடத்தை வகிக்கும் என்பதை முபாரக் போன்ற அறபு நாட்டுத் தலைவர்கள் உணரும் நிலையில், சுதந்திர பலஸ்தீனை அவர்கள் அங்கிகரிப்பார்களா என்பது சந்தேகத்திற்குரியதே வெளிப்படையாக இதற்குச் சார்பாக அவர்கள் குரல் கொடுப்பது போன்று தோன்றினாலும் சுதந்திர பலஸ்தீனை ஆதரிப்பதில் அவர்களுக்குப் பல சவால்கள் உள்ளன.



# எல்லாத் துறைகளிலும் சாதிக்கும் பெண்கள்

இன்றைக்கு பெண்கள் இல்லாத துறையே இல்லை எனலாம். நம் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்பதே அனைவரது கருத்தாக இருந்தது. பெண் கல்வி இன்றைக்கு உயிர் மீட்சி அடைந்துள்ளது. இதை மெய்ப்பிக்கும் வகையில், இன்றைக்கு ஆண்களைவிட பெண்களே கல்வியறிவில் சிறந்து விளங்குகின்றனர்.

இதற்கு சான்றாக, ஆண்களின் தேர்ச்சி விகிதத்தை காட்டிலும், பெண்களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்திருப்பதை பார்க்க முடியும். அதே நேரத்தில், தங்களது குழந்தைகளும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதில், பெண்களே மிகுந்த அக்கறை கொண்டவர்களாக திகழ்கின்றனர்.



இன்றைக்கு அனைத்து துறைகளிலும் தங்களது திறமை, உழைப்பு, விடா முயற்சி உள்ளிட்ட சாதுர்யத்தால் பெண்கள் பல்வேறு துறைகளில் சாதித்து வருகின்றனர். வீட்டு பணி மட்டுமின்றி, அலுவலகம், தொழிற்சாலை, நீதிமன்றம், கல்வித்துறை என அனைத்து முறையிலும் சிறந்து விளங்கியதற்கு முக்கிய காரணம் அவர்களது கல்வியே என்பதை யாரும் மறுக்க முடியாது. தற்போது அரசியலிலும் பெண்களின் ஈடுபாடு அதிகரித்துள்ளது. மற்றவர்களுக்கு ஒளி காட்டும் தன்னலமற்ற கலங்கரை விளக்காக விளங்கும் பெண்கள், தங்களது கல்வி அறிவினால் தனது வீட்டாரை மட்டுமின்றி தன்னை சுற்றியுள்ள அனைவரையும் அறியாமை என்னும் இருட்டை அகற்றி வெளிச்சமடைய செய்து வருகின்றனர் என்பதில் ஐயமில்லை.



# இல்லத்தரசியே மன உளைச்சலா?

பெண் குடும்பத்தின் முதுகெலும்பாக கருதப்படுவதால், அவர்களுக்கான பொறுப்புகளை மன அழுத்தம் இல்லாமல் செய்வது அனைவருக்கும் சாத்தியமான ஒன்றாக இருப்பதில்லை.

ஒரு சில இல்லத்தரசிகளுக்கு வேலைப்பளு காரணமாக மனச்சோர்வு உண்டாகின்றது. மன அழுத்தம் மற்றும் கவலை போன்ற சிக்கல்கள் ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருப்பதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு நாளுக்கான வீட்டு வேலைகள் பட்டியலை தயார் செய்து, குறிப்பிட்ட நேரத்திற்குள் வேலையை முடித்துவிட்டு, மீதமுள்ள நேரத்தில் பிறருடன் பழகவும், இளைப்பாறவும் முயற்சி செய்வது மன உளைச்சலைக் குறைக்கும்.

மன இறுக்கத்தை சரிசெய்ய உடற்பயிற்சி ஒரு சிறந்த வழியாகும். தினமும் 30 நிமிடங்களுக்கு நடைப்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

நல்ல அமைதியான தூக்கம் என்பது மன இறுக்கத்தை போக்கும். தூக்கம் மூளைக்கு ஓய்வு கொடுத்து, அடுத்த நாளை புத்துணர்ச்சியுடன் தொடங்க உதவும். எனவே, தினமும் எட்டு மணி நேரம் தூங்க வேண்டும்.

தியானம், யோகா அல்லது சுவாச பயிற்சி போன்ற இளைப்பாறல் நுட்பங்களை முயற்சி செய்தால், மன அழுத்தம், மன உளைச்சல் ஆகியவை தீரும்.

# கப் கேக்



**தேவையான பொருட்கள்:**

பேப்பர் கப்ஸ் - தேவைக்கேற்ப
கோதுமை மா - 125 கிராம்
சீனி - 125 கிராம்
பட்டர் - 100 கிராம்
வெணிலா எசென்ஸ் - 2 தேக்கரண்டி
முட்டை - 4
பேக்கிங் பவுடர் - 1 தேக்கரண்டி
பால் - 50 மி.லி.(தேவைப்பட்டால்)
கஜு - 100 கிராம் (பொடியாக்கியது)

**அலங்கரிக்க...**

பட்டர் கிரீம், விப்பிங் கிரீம்-தேவைக்கு.
சீனி - 100 கிராம்
பட்டர் -100 கிராம்,
வெணிலா எசென்ஸ் - 1 தேக்கரண்டி
பால் - 1 தேக்கரண்டி



**செய்முறை**

முட்டையையும், சீனியையும் பீட்டரினால் நன்கு அடிக்கவும். ஓர் அகலமான பாத்திரத்தில் பட்டரை கைகளால் நன்கு தேய்க்கவும். அதில் கோதுமை மா, எசென்ஸ், பேக்கிங் பவுடர் கலந்து, முட்டை சர்க்கரை கலவையை சிறிது சிறிதாக ஊற்றி கட்டியில்லாமல் நன்கு பிசையவும். தேவையானால் பால் ஊற்றி இட்லி மாவு பதத்திற்கு கலந்து, கஜுவையும் சேர்த்து, பேப்பர் கப்பில் பாதியளவிற்கு ஊற்றி, 200 டிகிரி செல்சியஸில் 10 நிமிடங்கள் ப்ரீ ஹீட் செய்யப்பட ஓவனில், 15-20 நிமிடங்கள் 150 டிகிரி செல்சியஸில் பேக் செய்யவும். பின்னர் கப் கேக் ஆறியதும் பட்டர் கிரீம், விப்பிங் கிரீம் கொண்டு அலங்கரித்து பரிமாறலாம்.



பா.மலரம்பிகை

# மகளிர் மட்டும்

## வெயிலினால் முகம் கறுத்துவிட்டதா?



பேரிச்சம் பழம் 2, உலர் திராட்சை 10, பப்பாளி 2 தேக்கரண்டி இவை மூன்றையும் எடுத்து முதலில் பேரிச்சம் பழம் மற்றும் உலர் திராட்சையை ஒரு நாள் முழுவதும் வெந்நீரில் ஊற வைக்க வேண்டும். பின்னர் அவற்றை பசை போல் அரைத்து அதனுடன் பப்பாளியை 2 ஸ்பூன் அளவு மசித்து போடுங்கள்.

இந்த கலவையை நன்றாக கலக்கி முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் போடுங்கள். 20 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவினால், வெயிலினால் கறுத்த உங்கள் முகம் நிறம் மாறி பளபளக்கும்.

## கண்களை அழகாய் மாற்ற...



தலையை திருப்பாமல், கண்களை மட்டும், மேலும் கீழுமாக, அதன் பின் பக்க வாட்டிலும், தினமும் 50 முறையாவது பயிற்சி அளித்தால், கண்களின் மெருகு கூடும்.

பொன்னாங்கண்ணி கீரை உணவு, கண்ணுக்கு மிகவும் நல்லது. இவை கண் பார்வை தெளிவு படுத்துவதோடு கண்களில் உண்டாகும் சுருக்கத்தை தடுக்கும்.

கண்களில் கருவளையம் போன்று ஏற்பட்டால், சாதிக்காயை அரைத்து கரு வளையம் மீது பூசிவிட்டு இரவில் தூங்குங்கள். காலையில் எழுந்ததும் கழுவி விடுங்கள். இப்படி செய்தால் கருவளையம் மறைந்துவிடும்.

## கர்ப்பகாலத்தில் வயிற்றுப்பிடிப்பை குறைக்கும் உணவுகள்

கர்ப்ப காலத்தில் கர்ப்பிணிகளின் வயிற்றுப் பகுதியில் மாற்றம் ஏற்படுவதால், வயிற்றில் சற்று பிடிப்புக்களை உணர்வார்கள். எனவே, கர்ப்பகால வயிற்றுப் பிடிப்புக்களைக் குறைக்கக் கூடிய சில உணவுகள் உள்ளன.



ஆனைக்கொய்யாப்பழத்தில் ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் உள்ளது. இது கருப்பையில் உள்ள காயங்களைக் குறைக்க உதவும் மற்றும் கருப்பையில் மெல்லிய படலத்தை உருவாக்கி, பிடிப்புக்களைக் குறைக்கும்.

டார்க் சொக்லேட் கர்ப்பிணி பெண்களுக்கு ஏற்ற அற்புதமான ஸ்நாக்ஸ். இதுவும் கர்ப்ப கால பிடிப்புக்களை சரிசெய்யும்.

வாழைப்பழத்தில் உள்ள பொட்டாசியம், கருப்பையில் உள்ள காயங்களைக் குறைத்துப் பிடிப்புகளைக் குறைக்கும் மற்றும் வாழைப் பழம் மலச்சிக்கல் பிரச்சினையைத் தடுக்கும்.

பசளிக்கீரையில் இரும்புச்சத்து உள்ளது. இது கருப்பைச் சுவர்களை வலிமைப்படுத்தி, கர்ப்ப கால பிடிப்புக்களைக் குறைக்கும்.

பால் கர்ப்ப கால வயிற்றுப் பிடிப்புக்களைக் குறைக்க மட்டுமின்றி, அதில் உள்ள கல்சியம் குழந்தையின் எலும்புகளை வலிமைப் படுத்தவும் செய்யும்.

## வட்டியில்லா கடன் திட்டம் சாய்ந்தமருதில் ஆரம்பம்

(யூ.கே. காலித்தீன்)

சாய்ந்தமருது - மாளிகைகாடு ஜும்ஆ பள்ளிவாசல் பரிபால சபையினால் வட்டியில்லா கடன் உதவித் திட்டம் (10)ம் திகதி வெள்ளிக்கிழமை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து பள்ளிவாசல் தலைவர் வை.எம். ஹனிபா தலைமையில் சாய்ந்தமருதில் உதயமாகின்றது.

மேற்படி 'வட்டி வாங்காதிர்கள், வட்டி கொடுக்காதிர்கள்' எனும் தொனிப்பொருளில்,

மக்தப் அத்-தகாபுல், இஸ்லாமிய நிதி நிறுவனம் (வட்டியில்லாக் கடன் உதவித் திட்டம்) எனும் பெயரில் சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலில் விஷேட மார்க்க சொற்பொழிவுடன் வெள்ளிக்கிழமை (10) மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து ஆரம்பமாகவுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு

மக்தப் அத்-தகாபுல், இஸ்லாமிய நிதி நிறுவனம்

(வட்டியில்லாக் கடன் உதவித் திட்டம்)

ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் அலுவலகக் கட்டடம்,

பிரதான வீதி, சாய்ந்தமருது -

தொ.இ.067 205652

## எனக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

புனித மக்காவுக்கு உம்ரா கடமையை நிறைவேற்றுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வியாழக் கிழமை பயணிக்க முன் அவருடன் சலாம் கூறுவதற்காக வந்த கட்சி முக்கியஸ்தர் ஒருவர் விடுத்த கோரிக்கை சற்று சிக்கலாக்கியுள்ளது.

கட்சியின் ஸ்தாபக செயலாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எஸ். எம். ஏ. கபூர் சலாம் கூறிவிட்டு வழியனுப்பவந்தவேளையில் கூறியதாவது.

இக்கட்சி மூலம் வழங்கப்படவிருக்கின்ற தேசியப்பட்டியல் எம்.பிக்கான நியமனத்தை முதலில் அட்டாளைச்சேனைக்கும் பின்பு தனக்கும் அது கிடைக்கவேண்டும் என எல்லா 'துஆ'களுடனும் இதனையும் தவறாது சேர்த்து புனித கஃபத்துல்லாவில் வைத்து எனக்காக இறைவனிடம் வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

இத் திடீர் விண்ணப்பத்தையும் கோரிக்கையையும் சற்றேனும் எதிர்பாராத தலைவர் ஹக்கீம் சிரித்துக் கொண்டு கபூரின் தோழில் தட்டி 'டோன்ற் வொறி' ( கவலைப்படாதே) எல்லாம் இறைவன் நாட்டப்படி நடக்கும் என்று கூறியதாக அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

இந் நிகழ்வின் போது அம்பாறை மாவட்ட கட்சியின் முக்கியஅரசியல் பிரமுகர்கள் பலரும் பார்த்திருந்து புன்முறுவல் பூத்துள்ளனர்.

இது பற்றி மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், குறிப்பிட்டதாவது 'வற்றியநதிகளெல்லாம் தண்ணீர் இல்லை என்ற குறையை கடலில் முறையிடுமாம் அந்தக்கடலும் வற்றினால் இக்குறையையாரிடம் முறையிடுவது- ஆம் இதனை நிச்சயமாகவல்ல இறைவனிடம்தான் - வேதனைதான் வாழ்கை என்றால் தாங்காதுபூமி' என்ற வரிகள்தான் எனக்கு ஞாபகம் ஊட்டியது. என்று மேலும் குறிப்பிட்டார்.

இதேநேரம் இறுதியில் தேசியப் பட்டியலுக்கு அட்டாளைச்சேனை ஒருவரைத் தெரிவு செய்யவிருப்பதாக தலைவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

## நிறைவேறுமா...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகவே, அவரது முஸ்லிம் கூட்டமைப்பு என்பது பஷீரின் இறந்துபோன அரசியலுக்கு ஒருபோதும் ஒருபோதும் புத்துயிர் வழங்காது என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பஷீர் சேகுதாவுதை நீக்கிவிட்டு அலி சாஹிர் மௌலானாவை ஹக்கீம் நிறுத்தியபோது அம்மாவட்டத்தில் அக்கட்சி வீழ்ச்சியைச் சந்திக்கப்போகின்றது என பலர் கூறினார்.ஆனால், இதுவரை காலமும் பஷீர் சந்தித்த தேர்தல்களில் பெற்ற வாக்குகளை விடவும் அதிகமான வாக்குகளைப் பெற்று மௌலானா வெற்றி பெற்றார்.பஷீருக்கு ஏறாவூரில் இருக்கின்ற செல்வாக்கை விடவும் குறைந்த செல்வாக்கே ஹஸன் அலிக்கு அவரது சொந்த ஊரான நிந்தவூரில் உள்ளது எனலாம் .இவ்வாறான மக்கள் செல்வாக்கை வைத்துக் கொண்டு மு.காவைப் பிளவுபடுத்த முடியுமா?ஏறாவூரில் பஷீருக்கு ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியை அடிப்படையாக வைத்து இந்தக் கேள்விக்கு மிக இலகுவாக பதிலளிக்க முடியும்.

இருந்தாலும்,கட்சி இதுவரை சந்தித்து வந்த பிளவுகளுக்கு அடிப்படைக் காரணம் என்ன?பிழையான தலைமைத்துவமா? அல்லது பதவி ஆசையா என்ற கேள்விக்குத் தற்போது கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் சலசலப்பை ஆய்வு செய்தால் பதில் கிடைக்கும்.

## O / L...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கல்வி பொதுத் தராதர சாதாரணத் தரப்பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி வெளியிடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்தது.

குறித்த தினத்தில் இணையத்தளத்தின் மூலம் பெறுபேறுகளை பெற்றுகொள்ளலாம் என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டது.

2016ஆம் ஆண்டு சாதாரணதர பரீட்சையில் சுமார் 7 இலட்சம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்ததோடு, 5669 மத்திய நிலையங்களிலும் பரீட்சை நடைபெற்றது.

இதேவேளை, 2017 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணத் தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் 2 ஆம் திகதிவரையும், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

அத்தோடு, உயர்தரப் பரீட்சை பெறுபேறு முடிவுகள் எதிர்வரும் டிசம்பர் 27 ஆம் திகதியும், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் ஒக்டோபர் 5 ஆம் திகதி வெளியிடப்படும் என கல்வி அமைச்சு குறிப்பட்டது.

## இந்தியாவின்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகிய 7பேருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுகிறது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக திமுக செயல்தலைவர் மு.க ஸ்டாலின், காங்கிரஸ் மாநில தலைவர் திருநாவுக்கரசர், சட்ட மன்ற காங்கிரஸ் தலைவர் கே.ராமசாமி, கேரளாவைச் சார்ந்த அஷ்ரப் அலி, சையது முனவர் அலி தங்கல், மற்றும் தேசிய நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். இந்த மாநாட்டில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

கேள்வி : தமிழ்நாட்டில் அரசியல் நிலவரங்கள் எப்படி இருக்கின்றன?

பதில் : தமிழ்நாட்டில் அரசியல் நிலவரம் எதுவும் சொல்ல முடியாத அளவிற்கு இருக்கின்றது. எதையும் கணிக்க முடியாத அளவிற்கு தமிழக அரசியல் நிலவரம் ஏற்பட்டு இருக்கிறது. இப்போது தான் முதல்வராக பதவியேற்றுள்ள எடப்பாடி பழனிச்சாமி நீடிப்பாரா நீடிக்க மாட்டாரா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றனர். அவர் பணி எப்படி இருக்கும் என்பதை போக போக தான் தெரியும். அதிமுக கட்சி நல்ல வளர்ச்சி பெற்று வந்த நிலையில் இப்போது அதிமுக நிலமை குழப்பத்தில் உள்ளது. அடுத்து கட்ட நிலமைக்கு இருப்பது திமுக செயல் தலைவர் மு.க ஸ்டாலின் தான் அதில் மாற்றுக் கருத்து இல்லை. தற்போதைய அ.தி.மு.க. ஆட்சி நான்கு ஆண்டுகளுக்கு நீடிக்குமா? என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. மக்களின் நம்பிக்கையையும் இந்த அரசு இழந்து வருகிறது. மருத்துவ படிப்பு சேர்க்கைக்கான நீட் தேர்வி லிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கும் நடவடிக்கையில் தமிழக அரசு தீவிரமாக இறங்க வேண்டும் .

கேள்வி : ஜெயலலிதா மரணம் குறித்து பல்வேறு மர்மங்கள் எழுப்பப் படுகின்றன அதைப் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில் : ஜெயலலிதா பீரங்கி போன்றவர். இராணுவ கட்டுப்பாடு போன்று கட்சியை வழிநடத்தியவர். வல்லமை படைத்தவர் அதில் எந்த மாற்றுக் கருத்து இல்லை. அவருடைய ஆட்சிக் காலத்தில் பல்வேறு நல்ல திட்டங்களை செயல்படுத்தியவர். அதில் மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. நிர்வாக திறமை, ஆளுமை கொண்டவர். ஜெயலலிதாவுடைய பல்வேறு திட்டங்கள் வரலாற்று படைத்தவர். அவர் மறைவை யாரும் எதிர்பார்க்கவில்லை. அவருடைய இழப்பு பெரிய இழப்பு தான் அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்து எனக்கு கிடையாது. ஆனால், அவர் மரணம் குறித்து சர்ச்சைக்குள் போக விரும்பவில்லை. ஜெயலலிதாவின் மரணம் குறித்து முஸ்லிம் லீக் கருத்து தெரிவிப்பது மரபு கிடையாது.

கேள்வி : இலங்கையில் சமீபத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பேராளர்கள் மாநாட்டில் மீண்டும் தலைவராக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அதைப்பற்றி கூற விரும்புவது :

பதில் : ரவூப் ஹக்கீம் மரியாதக்குரிய ஒரு மனிதர் மறைந்த அஷ்ரப்பிற்கு பிறகு முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக வரக் கூடிய எல்லா தகுதியும் உடையவர் ரவூப் ஹக்கீம். நடுநிலையான எண்ணம் கொண்டவர். காலத்திற்கேற்ற அரசியல் வாதி. எதிர்காலத்தை பற்றி நல்ல சிந்திக்க கூடியவர். இலங்கையில் எல்லா மக்களையும் அரவணைத்து செல்லக் கூடியவர். இலக்கியவாதி. மார்க்க ஞானம் அதிகம் பெற்றவரும், தற்போது மீண்டும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக தேந்தெடுக்கப்பட்டதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். முஸ்லிம் காங்கிரஸின் இந்தியாவில் சிறுபான்மை அரசு நடத்துவது போன்று, இலங்கையில் சிறுபான்மை அரசு நடத்துகிறது.

அங்குள்ளவர்கள் சமுதாயத்திற்கு ஒத்துழைத்து வாக்களித்தால் சமுதாய நலன்களை பெற முடியும்.

## கண்டி வீதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வறகாப்பொல நகரில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மாற்றுப் பாதை ஒன்றை அமைப்பதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் வறகாப்பொலையிலிருக்கும் போக்குவரத்து நெரிசல் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது.

தற்போது வறகாப்பொல நகரை கடப்பதற்கு 45 நிமிடங்கள் எடுக்கின்றன. வறகாப்பொலை நகரை அடையாது செல்வதற்காக இடைவழிப்பாதை ஒன்றை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

## முஸ்லிம் முற்போக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொகுதி தோறும் நியமிக்கும் அமைப்பாளர்களில் ஒருவர் அத்தொகுதியைச் சேர்ந்தவராகவும் மற்றவர் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவராவும் இருப்பார். வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தொகுதி அமைப்பாளருக்கு கட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உதவியாகச் செயற்படுவார்கள்.

இந்த அமைப்பாளர்களை நியமிப்பது தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று வியாழன் மாலை முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

## புலிகளுக்கு..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உரிமைகள் பேரவையில் முன்வைப்பதற்கு மஹிந்த தரப்பு தீர்மானித்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்களை எடுத்துக் கொண்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவின் தலைமையிலான குழுவொன்று இந்த மாதம் 13 ஆம் திகதி ஜெனீவா செல்கின்றது.முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபே ராஜபக்ஸ இந்தக் குழுவை வழியனுப்பி வைக்கின்றார்.

அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு தும்புள்ள சந்தியில் அமைந்துள்ள கிரம விமலஜோதி தேரின் அலுவலகத்தின் ஆறாவது மாடியில் இது தொடர்பிலான நிகழ்வு ஒன்று இடம் பெறவுள்ளது.கிராம விமலஜோதி தேரரின் தலைமையில் இடபெறவுள்ள இந்த நிகழ்வில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபே ராஜபக்ஸ பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

அந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள முப்படைகளின் முன்னாள் அதிகாரிகளிடம் இந்தப் போர்க் குற்றச்சாட்டு அறிக்கை கையளிக்கப்பட்டு அந்த அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்படுவார்கள்.

அந்த அறிக்கை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அரசின் சார்பில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று மஹிந்த அணியினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த நிகழ்வு முடிந்தவுடன் அங்கிருந்தவாறே சரத் வீரசேகரவின் தலைமையிலான குழுவினர் ஜெனிவா நோக்கிப் புறப்படுவர்.

கோத்தாபே ராஜபக்ஸ அவர்களை வழியனுப்பி வைப்பார்.

படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்று நிரூபிக்கும் ஆதாரங்களும் புலிகள் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்பதற்கான ஆதாரங்களும் அந்த அறிக்கையில் விரிவாக உள்ளடக்கப்பட்டுள்ளன என்று மஹிந்த தரப்பு தெரிவிக்கின்றது.

படையினருக்கு எதிரான ஜெனீவா பிரேரணைக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கி படையினரைக் காட்டிக்கொடுத்துவிட்டதால் படையினரை அதிலிருந்து காப்பாற்றும் தமது பாரிய நடவடிக்கையாக இது அமைந்துள்ளது என அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

## சைடமை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சைட்டம் விவகாரம் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனதுரையில் மேலும் கூறியதாவது,

சைடம் தனியார் வைத்திய கல்வி நிறுவனம் தொடர்பிலான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் அக்காலத்தில் எடுக்கப்பட்டபோது எந்தவொரு ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆனால், தற்போது இவ்விவகாரம் பெரிதாகியுள்ள பின்னணியில் மோசமான ஒரு அரசியல் காரணி இருக்கின்றது. இதுவிடயம் தொடர்பில் வைத்தியபீட உபவேந்தர்களை அழைத்து நான் பேச்சு நடத்தியபோது, சைடத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மருத்துவபீடத்தால் நடத்தப்படும் பரீட்சையில் தோற்றுவதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை என்று தெளிவாகக் கூறினர். எனினும், சில மோசமான ஆட்சி மோகம் கொண்ட அரசியல் நடவடிக்கையினால் தான் தற்போது இந்தப் பிரச்சினை பெரிதாகியுள்ளது.

அந்தவகையில், பல்கலை மாணவர்களையும் வைத்தியர்களையும் தூண்டிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றவே சிலர் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அக்காலத்தின்போது இதுவிவகாரம் குறித்து எவரும் பேசவில்லை.

தற்போது நீதிமன்றில் சைடம் தொடர்பில் தீர்ப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது. கொத்தலாவெல மருத்துவ பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டபோது மருத்துவசபை பேணிய தரக்கட்டுப்பாட்டுக்கும், சைட்டம் தொடர்பிலான தரக் கட்டுப்பாட்டுக்கும் இடையில் வித்தியாசங்கள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே, தயவு செய்து மாணவர்களின் வாழ்க்கையில் விளையாட வேண்டாம். இவர்களை மருத்துவசபையினால் நடத்தப்படும் பரீட்சைக்கு அனுமதித்துள்ள நிலையில், அதனைத் தடுக்க முயற்சிக்க வேண்டாம்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்த இந்த மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும்.

மேலும் சைடம் தொடர்பில் நீதிமன்றினால் தீர்ப்பொன்று வெளியிடப்பட்டுள்ளமையால் அதனை தடை செய்யும் வகையில் நாம் செயற்பட்டால் எமக்கு சிறைச்செல்லவும் நேரிடும் என்றார்.

## ஹக்கீம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நீர் வழங்கல் தொடர்பில் இருதரப்பு ஒப்பந்தமொன்றில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கைச்சாத்திடவுள்ளார்.

அத்துடன் சவூதி அரேபியாவிலுள்ள பாரிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிடும் அமைச்சர், அங்குள்ள தொழில்நுட்பத்தை இலங்கையில் பயன்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கு நிதியுதவி வழங்கும் சவூதி அபிவிருத்தி நிதியத்துடன் முக்கிய பேச்சுவார்த்தையொன்றிலும் கலந்துகொள்கிறார். இதன்போது, இலங்கைக்கு நிதியுதவியை பெற்றுக்கொள்வது தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கிம் கோரிக்கை விடுக்கவுள்ளார். அத்துடன் புனித மக்காவில் உம்ரா கடமையையும் நிறைவேற்றவுள்ளார்.

இதேவேளை 10, 11ஆம் திகதிகளில் ரியாத் நகரில் இலங்கை வாழ் மக்களை சந்திக்கவுள்ளார். இச்சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள், கல்வி மற்றும் சமூக அமைப்புகள், விளையாட்டு மற்றும் இளைஞர் கழகங்கள் சார்பாக இலங்கை மக்கள் இச்சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விஜயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். தௌபீக், எம்.எச். எம். சல்மான், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் உள்ளிட்ட அமைச்சின் உயரதிகாரிகளும் உடன் சென்றுள்ளனர்.

## பொது எதிரணி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சர்ச்சையை ஏற்படுத்திய பொதுஎதிரணித் தலைவரான தினேஷ் குணவர்தனவுக்கு சபை அமர்வுகளில் பங்கேற்க ஒருவாரகாலம் தடைவிதிக்கப்பட்டுள்ளதால், டலஸ் அழகப்பெரும எம்.பியை பொதுஎதிரணியின் தலைவராக நியமிக்குமாறு மஹிந்த அணி முன்வைத்த யோசனையால் சபையில் நேற்று கடும் சர்ச்சை ஏற்பட்டது.

மேலும், இந்த சர்ச்சைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்றக் குழுத் தலைவரான நிமல் சிறிபாலடி சில்வாவுடன் கலந்துரையாடியே முடிவொன்று எடுக்கப்படும் என்றும் இது குறித்து சுயாதீனமாக முடிவுகளை எடுக்க தனக்கு அதிகாரமில்லை என்றும் சபாநாயகர் அறிவித்தார்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு பாராளுமன்றம் கூடியபோது, தினேஷ் குணவர்தன தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுத்து சபாநாயகர் கருஜயசூரிய உரையாற்றினார். இதில், தினேஷ் எம்.பிக்குரிய தடை நீங்கும்வரை பொது எதிரணியின் பதில் தலைவராக டலஸ் அழகப்பெருமவை ஏற்று, 23இன் கீழ் 2 இல் கேள்வி எழுப்புதல் உள்ளிட்ட அதிகாரங்களை அவருக்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. சபை ஆரம்பமாவதற்கு 20 நிமிடயங்களுக்கு முன்னரே இந்தக் கடிதம் எனக்கு கிடைத்தது என்றார்.

இதற்கு, அவ்வாறு அனுமதி வழங்க முடியாது. தினேஸ் குணவர்தன எம்.பி. வந்ததும் அவரால் கேள்விகளை எழுப்ப முடியும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக ஜனாதிபதியும், பாராளுமன்றக் குழுத் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவும் இருக்கின்றனர். எனவே, இவர்களுடன் பேசி இதுவிடயம் தொடர்பில் ஒரு முடிவுக்கு வருமாறு கேட்டுக்கொள்கின்றேன். என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இதனால் சீற்றமடைந்த வாசுதேவ நாணயக்கார எம்.பி., தனது வழமையான பாணியிலேயே பிரதமரை திட்டினார். (வாசு எம்.பி. பயன்படுத்திய அந்த வசனத்தை ஹென்சாட்டில் இருந்து சபாநாயகர் நீக்கிவிட்டார்) எமது தரப்பு கோரிக்கை கடிதமாக கையளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் சபாநாயகருக்கே இருக்கின்றது. இதில் ஏனையோர் தலையிடத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சரி உறுப்பினரே. இது பற்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்றக் குழுத்தலைவரிடம் பேசிவிட்டு முடிவொன்றை அறிவிக்கின்றேன். இந்த விடயத்தை விவாதத்துக்கு உட்படுத்தமுடியாது என்று சபாநாயகர் பல தடவைகள் அறிவித்தார்.

எனினும், சபையில் எதிரணி உறுப்பினர்களால் தொடர்ந்தும் கூச்சல் எழுப்பப்பட்டமையால் குறுக்கிடு செய்த சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல,

இரண்டு நாட்களுக்குதான் தினேஸ் குணவர்தன சபைக்கு வரமாட்டார். அதற்குள் அவரது தலையை வெட்டுவதற்கு அவர்கள் (பொது எதிரணியினர்) முயற்சிக்கின்றனர்' என்றார்.

பிரதமரும் இந்த விடயத்தை சுட்டிக் காட்டி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமுன்றக்குழுத் தலைவராக நிமல் சிறிபாடிலடி சில்வாவே இருக்கிறார். இணைத் தலைவராகத்தான் தினேஷ் எம்.பி. இருக்கிறார். எனவே, நிமல்தான் பெயரை பிரேரிக்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

சபாநாயகர் புதனன்று வழங்கிய தீர்ப்புடன் நாம் உடன்படிவில்லை. 23 இன் கீழ் 2, ஒத்திவைப்புவேளை பிரேரணை போன்ற முக்கிய விடயங்களில் 'நாம் ஒதுக்கப்பட்டுள்ளோம். ஆகவே, தினேஷ் குணவர்தனவை வெளியேபோட்டதன் பின்னணி சூழ்ச்சியாககூட இருக்குமா என்ற சந்தேகமும் எமக்கு ஏற்பட்டுள்ளது' என்று டலஸ் அழகப்பெரும எம்.பி. கூறினார்.

இவ்வாறு வாசு, விமல், டலஸ், லக்ஸ்மன் கிரியல்ல மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியயோருக்கு இடையிலான இந்த சர்ச்சையானது சுமார் 15 நிமிடங்களுக்கும் மேல் நீடித்தது.

ஆனாலும், இந்தப் பிரச்சினைக்கு அமைச்சர் நிமலுடன் பேச்சு நடத்திய பின்னரே தீர்ப்பு வழங்கப்படும். எனவே, உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருக்குமாறு சபாநாயகர் கருஜயசூரிய கேட்டுக்கொண்டார்.

இறுதியில் சர்ச்சைகள் முடிவுற்று சபை அமைதியானதும், எழுந்த விமல் வீரவன்ஸ எம்.பி, சபாநாயகரே. தாய்ப் பாலில் உப்பு பார்க்கவேண்டாம் என்று தத்துவப் பாணியில் கருத்தொன்றைக் கூறிவிட்டு அமர்ந்தார்.

## மத்திய வங்கி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு அறிக்கை ஒன்றை அனுப்பியதாக ஊடக சந்திப்பொன்றில் தான் பொய் கூறியதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன ஒப்புக் கொண்டதையடுத்து, ஆணைக்குழுவின் தலைவர் கடுமையான முறையில் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் வாக்குமூலம் ஒன்றை வழங்க நேற்று சாட்சியமளிக்க வந்த சந்தர்ப்பத்தில் அவர் அதனை ஏற்றுக்கொண்டார்.பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவின் செயல் குறித்து கடுமையாக சாடிய ஜனாதிபதி ஆணைக்குழு ஊடக சந்திப்புகளில் பொய்களை கூறவேண்டாம் என எச்சரித்துள்ளது.

பிணை முறிப்பத்திர விவகாரம் குறித்து தனக்கு வாக்குமூலம் ஒன்றை வழங்கும் தேவை இருப்பதாகவும் அதற்கு வாய்ப்பளிக்குமாறும் பந்துல குணவர்தன கேட்டிருந்தார்.இதனடிப்படையில் அவர் நேற்று ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்துடன், இவ்வாறு ஜனாதிபதி ஆணைக் குழுவில் அரசியல்வாதியொருவருக்கு அழைப்புவிடுத்த முதல்தடவையாக இது வரலாற்றில் இடம்பிடித்தது.

இதேவேளை, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனை இன்றைய தினம் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிணை முறி விவகாரம் தொடர்பாக சுமார் ஒரு வருட காலத்திற்கும் மேல் கோப் குழு விசாரணை நடத்திவந்த நிலையில், குறித்த விசாரணை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதோடு, கோப் குழுவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது. இதனையடுத்தே ஜனாதிபதியால் மேற்படி ஆணைக்குழு நிறுவப்பட்டது.




# சிறந்த நிலையான மூலோபாயங்களுக்காக சர்வதேச விருதை வென்றுள்ள கொமர்ஷல் வங்கி







உலகளாவிய நிலைபேறு தன்மை, கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) ஆற்றல், மற்றும் தலைமைத்துவ விருதுகள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட ஒரேயொரு இலங்கை நிறுவனம் கொமர்ஷல் வங்கியின் நிலையான மூலோபாய அணுகுமுறை உலகளாவிய ரீதியில் கீர்த்திமிக்க விருதை பெற்றுக் கொடுத்துள்ளது. இந்தியாவின் மும்பாய் நகரில் இடம்பெற்ற உலகளாவிய நிலைபேறு தன்மை, கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) ஆற்றல், மற்றும் தலைமைத்துவ விருதுகள் வழங்கும் நிகழ்விலேயே இந்த விருது வெல்லப்பட்டுள்ளது.

நாட்டின் தனிச்சிறப்புமிக்க தனியார் வங்கி 'நிலையான மூலோபாயங்களை அபிவிருத்தி செய்தல்' என்ற பிரிவில் இந்த விருது வங்கிக்கு கிடைத்துள்ளது.

வங்கிஅதன் கிளைகளுக்கு பசுமை கட்டிடங்களை அறிமுகம் செய்துள்ளது. 2017ல் மேலும் நான்கு பசுமைக் கட்டிடங்கள் திறக்கப்படவுள்ளன.

ஆறு வருடங்களாக தொடர்ந்து உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் இடம்பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியான கொமர்ஷல் வங்கி நாடுமுழுவதும் 256 கிளை வலையமைப்புடனும் 658 ATM வலையமைப்புக்களுடனும் செயற்படுகின்றது. 2016 நவம்பரில் வங்கி இத்தாலியில் முழு அளவிலான பணப்பரிமாற்ற சேவைகளை மேற்கொள்ள நிலையம் ஒன்றையும் திறந்துள்ளது.




# முன்னணி சமூக சந்தைப்படுத்தல் திட்டத்தினூடாக 8.4 மில்லியன் இலங்கையர்களை இலக்காகக் கொள்ளத் திட்டம்



அரசாங்கம், தனியார் துறை மற்றும் சிவில் சமூகம் இணைந்து இளைஞர்கள் தொழில் வாய்ப்புக்கான ஆளுமைகள் விருத்தியுடன் தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குவதற்கான இணைந்த சமூக ஊடக பிரச்சாரத்திட்டத்தை முன்னெடுப்பதற்கும், இலங்கையில் தொழில்வாய்ப்பின்றி காணப்படும் இளைஞர்களின் பிரச்சினைஹூடிண் நிவர்த்தி செய்வதற்கு பங்களிப்பு வழங்கும் வகையிலும், நாட்டின் பிரதான தொழிற்றுறைகளில் ஏற்பட்டுள்ள தொழிலாளர்களுக்கான கேள்வியை நிவர்த்தி செய்வதையும் நோக்காகக் கொண்டு, தேசிய சமூக சந்தைப்படுத்தல் பிரச்சார நடவடிக்கை ஏப்ரல் மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் 2017 பெப்ரவரி 22ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த திட்டம் இளம் பெண்கள் மற்றும் ஆண்கள் மத்தியில் ஆளுமை விருத்தியை ஊக்குவித்து அவர்களின் தொழில் நிலைகளை மேம்படுத்திக் கொள்ள உதவியாக அமைந்திருக்கும்.

இச்செயற்றிட்டத்தின் வெளிப்பாடு என்பது, தமது கல்வியை பூர்த்தி செய்த அல்லது பூர்த்தி செய்ய எதிர்பார்க்கும் இலங்கையின் இளைஞர்களுக்கு வலுவூட்டி, நாட்டில் தொழில் வாய்ப்பொன்றை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக ஆளுமை படைத்த தொழில் நிலைக்கு தம்மை தயார்ப்படுத்திக் கொள்வதற்கு வழிகாட்டுவதாக அமைந்திருப்பதாகும். இதனூடாக உலகளாவிய ரீதியில் காணப்படும் மில்லியன் கணக்கான வசதி வாய்ப்புகள் குறைந்த இளைஞர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கிறோம்.



PanAudio வின் அனுராத பீரிஸ் - வியாபார முகாமையாளர், சுரேன் கருணாகரன் - பொது முகாமையாளர், எஸ். கருணாகரன் - முகாமைத்துவ பணிப்பாளர் ஆகியோர் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுடன் காணப்படுவதுடன், EIKI தலைவர் Kivoharu Kawabata, EIKI APEC பிரதம நிறைவேற்று அதிகாரி K.C. Tan மெற்றும் EIKI நாட்டுக்கான முகாமையாளர் Yeo Tan ஆகியோரினால் வரவேற்கப்படுவதையும் காணலாம்.

# மொபிடெல் கேஷ் பொனன்ஸா மொன்டெரோ அதிஷ்ட செயற்றிட்டம் சீசன் -2, 2017




தேசிய கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனரான மொபிடெல் அதன் கேஷ் பொனன்ஸா மொன்டெரோ அதிஷ்ட செயற்றிட்டம் சீசன்-2, 2017 மூலம் மீண்டும் 12 அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு ஆடம்பர மொன்டெரோ ஜீப்புகள் வெல்வதற்கான வாய்ப்பை வழங்கவுள்ளது. அதுமட்டுமல்லாமல் 219,000 மொபிடெல் அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்களுக்கு ரூ 500 வீதம் ரொக்க பரிசுகள் ஆண்டு முழுவதும் வழங்குவதுடன் தொடர்ந்து 2017ஆம் ஆண்டு முழுவதும் வாடிக்கையாளர்களுக்கு ரூ 350 மில்லியன் வழங்கவுள்ளது.

2017 ஆம் ஆண்டின் முதல் அதிஷ்ட வெற்றியாளராக கொடகவெலயைச் சேர்ந்த திரு. ஏ.எம்.சி.பீ. உபசாந்த என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார், அதுமட்டுமல்லாமல் மொபிடெல் கேஷ் பொனன்ஸா செயற்திட்டத்தின் மூலம் மொத்தம் ரூ 310 லட்சம் மதிப்புள்ள பரிசுகள் 18,610 வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மொபிடெல் கேஷ் பொனன்ஸா செயற்றிட்டம் 2017 ஐ முன்னிட்டு தொடர்ந்தும் நாடுமுழுவதும் இசை நிகழ்ச்சி மற்றும் களியாட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. அத்துடன் 2017 ஜனவரி மாத பரிசளிப்பு விழா ஹிங்குரக்கொடட்லி சேனானாயக மைதானத்தில் இடம்பெற்றது. ஒரு நாள் களியாட்ட நிகழ்வில், 1,000 வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு 'கண் பரிசோதனை' மற்றும் அனுபவம் வாய்ந்த கண் மருத்துவர்களினால் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடி இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

கேஷ் பொனன்ஸா வெற்றியாளர்கள் வாடிக்கையாளர் சேவை 071 27 55 777 எனும் இலக்கத்தினூடாகவும் அஞ்சல் வழியாகவும் மற்றும் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்படுவார்கள். வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் வெற்றி பெற்ற எந்த பரிசுகளுக்கும் கூடுதல் கட்டணம் விதிக்கப்பட மாட்டாது.

# சர்வதேச மகளிர் தினத்திற்கு RDB வங்கியிடமிருந்து விசேட செயற்றிட்டங்கள்




RDB வங்கி இவ்வருடம் மகளிர் தினத்தை கொண்டாடுவதுடன் 'நீங்கள் எமக்கு உன்னதமானவர்கள்' எனும் தொனிப்பொருளில் விசேட மகளிர் செயற்றிட்ட தொடர் ஒன்றினை மார்ச் மாதம் முழுவதும் தனது 268 கிளை கட்டமைப்பு வலயமைப்புகளினூடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்கீழ் உன்னதமிக்க தாய்மார்களை கௌரவப்படுத்தும் 'அன்பான அம்மா' செயற்றிட்டம், துணிச்சல்மிக்க மகளிர்களுக்கான 'தொழில் முயற்சி உதவிக்கரம்' பயிற்சிப்பட்டறை மற்றும் RDB வியசவிய கணக்கிற்கான கவர்ச்சிகரமான பரிசுத் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

'அன்பான அம்மா' செயற்றிட்டத்தை வருடம் பூராகவும், 'தொழில் முயற்சி உதவிக்கரம்' பயிற்சிப்பட்டறையை மார்ச் மாதம் பூராகவும் தன் கிளை வலையமைப்பின் ஊடாக செயற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக துணிச்சல்மிக்க பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு தேவையான நிதி வசதியளிக்க தேவையான வழிமுறைகளும் கிளை கட்டமைப்பு ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.






மக்கள் வங்கி காரைதீவு கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வங்கி கிளையில் இடம்பெற்றது. இதன்போது மாவட்ட ரீதியில் முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு தலா 5000 ரூபா பணப்பரிசும் ஏனைய 28 மாணவர்களுக்கும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் முகாமையாளர் தி.உமாசங்கரன் உள்ளிட்ட வங்கி உத்தியோகத்தர்கள் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைப்பதை படங்களில் காணலாம்.

# எனது பிள்ளைகளின் அதிஷ்டம்தான் என்னை வெற்றியாளராக மாற்றியது

## மொபிடெல் கேஷ் பொனன்ஸா அதிஷ்டசாலி ஆர்.டி. நிமல் ஜயசிங்க



■ பீ.எப்.எம். றிஷாட்

காது கேட்காத, வாய் பேச முடியாத முடியாமல் இருந்த எனது மகளுக்கு 24 இலட்சம் ரூபா செலவில் சத்திரசிகிச்சை செய்துகொண்டு கொழும்பில் தங்கியிருந்தேன். மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் அப்போது பணத்துக்காக அங்குமிங்கும் அங்கலாய்த்துக் கொண்டிருந்த எனக்கு கோடி ரூபா பெறுமதியான மொபிடெல் கேஷ் பொனன்ஸா அதிஷ்டம் கிடைத்தமை மகள்மார் இருவ ரின் அதிஷ்டம் எனவும், இந்த சந்தோஷத்தை வார்த்தைகளால் விபரிக்க முடியாது என மொபிடெல் கேஷ் பொனன்ஸா அதிஷ்டசாலி ஆர்.டி நிமல் ஜயசிங்க மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மொபிடெல் நிறுவனம் மாதாந்தம் முன்னெடுத்து வருகின்ற கேஷ் பொனன்ஸா மாபெரும் அதிஷ்ட சீட்டிழுப்பில் 350 மில்லியன் ரூபா பெறுமதியான மொன்டெரோ வகை ஜீப் ரக வாகனத்தை வென்ற அதிஷ்டசாலியான திருகோணமலை-பதவிய எனும் கிராமத்தைச் சேர்ந்த ஆர்.டி நிமல் ஜயசிங்கவுடனான நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நான் பதவிய-ஸ்ரீபுர பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவன்.கடந்த 20 வருடங்களாக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்றேன்.எமக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். மூத்த மகள் தரம் 2இல் கல்வி கற்கின்றார். ஆனால் எனது மனைவிக்கும், 2ஆவது மகளுக்கும் வாய் பேசவும் முடியாது, காதும் கேட்காது. மிகவும் கஷ்டத்துக்கும் மத்தியில் ஜனாதிபதி செயலக நிதியின் மூலம் 24 இலட்சம் ரூபா செலவில் 2ஆவது மகளுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன் பொரளையிலுள்ள றிஜ்ட்வே சிறுவர் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்தோம். இதற்காக கடந்த 8 மாதங்களாக கொழும்பில் இருக்கவும் நேரிட்டது.ஆனால் கொழும்புக்குச் சென்று வரவும், மகளின் மருத்துவச் செலவுக்கும் போதியளவு பணம் இருக்கவில்லை. ஆனால் மகளுக்காக கடன் வாங்கி இவையனைத்தையும் செய்தோம். எனினும், தற்போது பாலர் பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கின்ற அவருக்கு, பேச்சு வருவதற்கான சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், 6 வருடங்களுக்கு முன் எனது மூத்த மகன் பாம்பு கடிக்கு உள்ளாகி இறந்துவிட்டார். அவருக்கு அப்போது 10 வயதாகும். மனைவி மற்றும் பிள்ளைகளுடன் இருப்பதற்கு வீடொன்று இல்லாமல் பல வருடங்களாக எனது அக்காவின் வீட்டில் பெற்றோருடன் ஒன்றாக வாழ்ந்து வருகின்றோம். என்றாலும், 15 வருடங்களுக்கு முன் எமக்கென்ற வீடொன்றை கட்டுவதற்காக அத்திவாரம் போடப்பட்டது. போதியளவு வசதியில்லாத காரணத்தால் இன்று வரை அந்த வீட்டை கட்ட முடியாமல் போனது.

இவ்வாறு எமது வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்க, கடந்த வருடம் செப்டெம்பர் மாதமளவில் எனக்கு மொபிடெல் இலக்கத்திலிருந்து மதியம் 1 மணியளவில் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. நான் அன்றையதினம் தொழிலுக்குச் செல்லாமல் வீட்டு வேலையொன்றுக்காக இயந்திரமொன்றை வாங்குவதற்கு கடைக்குச் சென்றிருந்தேன். அப்போது மொபிடெல் இலக்கம் ஒன்றிலிருந்து அழைப்பு வந்தது. உடனே நான் பேசினேன். ஆனால் பேசிய நபர் என்னுடைய விபரங்களையெல்லாம் முதலில் கேட்டறிந்த பின்னர், நான்தான் மொபிடெல் கேஷ் பொனன்ஸா வெற்றியாளர் என அவர் தெரிவித்தார். அதைக் கேட்டவுடன் மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால் இது உண்மைதானா என்பதனை ஒரு கணம் என்னால் நம்பவே முடியாமல் போனது. நண்பர்கள் யாராவது கேலிக்காக குழப்புகின்றார்கள் என்றுதான் நான் நினைத்தேன் உடனே பேசியவரிடம்

நீங்கள் சொல்வது உண்மைதானா என திருப்பி கேட்டேன். அதற்கு அவர் மொபிடெல் நிறுவனத்தின் அதிகாரியொருவரின் தொலைபேசி இலக்கத்தைச் தந்து, உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என தெரிவித்தார். உடனே நான் அந்த இலக்கத்துக்கு அழைத்து குறித்த அதிகாரியுடன் பேசினேன். அப்போதுதான் எனக்கு மொன்டெரோ ரக ஜீப் வண்டியொன்று பரிசாக கிடைத்தமை உறுதியானது. மறுநாளே என்னை கொழும்புக்கு வருமாறு தெரிவித்தார்.எனவே உறவுக்காரார் நண்பர் ஒருவருடன் நான் கொழும்புக்குச் சென்று விபரங்களையெல்லாம் கொடுத்துவிட்டு வீடு திரும்பினேன். உடனே பெற்றோர், மனைவி மற்றும் உறவினர்களிடம் இது போலியான தகவல்கள் அல்ல என தெரிவித்தேன்.உண்மையில் அனைவரும் சந்தோஷப்பட்டார்கள். எனக்கு கிடைத்த இந்த அதிஷ்டத்தைப் பற்றி அவர்களுக்கும் நம்பவே முடியாமல் இருந்தது. அதன்பிறகு குறித்த வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மொரட்டுவையில் நடைபெற்ற இசைநிகழ்ச்சிக்கு வருமாறு அறிவித்தனர். இதன்படி எனது குடும்பத்தினருடன் அங்கு சென்றோம். வாகனத்தைக் கண்டவுடன் என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் போனது. மிகவும் பிரமாண்டமான மேடையில் வைத்து 350 மில்லியன் ரூபா பெறுமதியான மொன்டெரோ வகை ஜீப் ரக வாகனத்தின் திறப்பை தந்தார்கள். ஆனால் என்னால் அந்த வாகனத்தை மீண்டும் ஊருக்கு திருப்பி கொண்டு செல்லவதற்கும், அந்த வாகனத்தை தொடர்ந்து பராமரிப்பதற்கும், கடினமாக இருந்ததால்,




வாகனத்தை மொபிடெல் நிறுவனத்திற்கு திருப்பிக் கொடுத்துவிட்டு பணத்தைத் தருமாறு கேட்டுக்கொண்டேன். அதன்பிறகு பிறிதொரு நாள் மீண்டும் கொழும்புக்கு வரவழைத்து 150 கோடி ரூபாவுக்கு வாகனத்தைக் கொடுத்து மொபிடெல் நிறுவனத்திடமிருந்து காசோலையைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன்.கிடைத்த பணத்திலிருந்து முதலில் எனது நீண்டநாள் கனவான சொந்த வீடொன்றைக் கட்டுவதற்கு தீர்மானித்தேன். இதன்படி வீட்டின் வேலைகளை சுபநேரத்தில் அடுத்த மாதம் ஆரம்பிக்கவும் எண்ணியுள்ளேன்.

கடந்த 8 வருடங்களாக மொபிடெல் சிம் அட்டை தான் பாவித்தேன். அதிஷ்ட சீட்டிழுப்பு வாங்குவதுதான் நாளாந்தம் செய்துவந்தேன். ஆனால் ஆரம்பத்திலிருந்து மொபிடெல் என்றால் ஒருவகையான அன்பு இருந்தது. இதனால் வேறு சிம் அட்டைகளை வாங்கிப் பாவிப்பதற்கு எண்ணியதும் கிடையாது. இந்த நம்பிக்கையும், என்னிடமிருந்த அதிஷ்டமும் தான் இன்று என்னை வெற்றியாளராக மாற்றியுள்ளது.

ஆனால் எனக்கு இப்படியொரு அதிஷ்டம் கிடைக்கும் என கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் எனது நீண்டநாள் கனவை கடவுள் பூர்த்தி செய்து கொடுத்தார். அதுமட்டுமல்லாது, இவ்வாறு நான் அதிஷ்டசாலியாகத் தெரிவான பின்னர் ஊரில் அதிகளவு வரவேற்பும், மரியாதையும் கிடைத்தது. என்னுடைய புகைப்படத்துடனான பெரிய போஸ்டர்கள் ஊரில் மாத்திரமல்லாது நாட்டின் பல்வேறு பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமையை காணமுடிந்ததுடன், எனது நண்பர்களும் தொலைபேசி அழைப்பின் மூலமாகத் தெரிவித்திருந்தனர். அதிலும் குறிப்பாக இந்த வெற்றியானது எனது பிள்ளைகளின் அதிஷ்டம்தான் என பலர் தெரிவித்திருந்ததாக மகிழ்ச்சி நிறைந்த முகத்துடன் அவர் தெரிவித்தார்.

தற்போது மொபிடெல் நிறுவனத்தினால் கிடைக்கப்பெற்ற அதிஷ்டத்தின் மூலம் ஆர்.டி நிமல் ஜயசிங்க, தனது வாழ்க்கையில் நீண்ட நாள் கனவொன்றை நனவாக்கிக்கொண்டார்.எனவே, எதிர்வரும் சில மாதங்களில் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் தனக்கென்ற சொந்த வீட்டில் குடியேறி சந்தோஷமாக வாழ்க்கையை ஆரம்பிக்கவுள்ளார். அத்துடன் தனது மகளின் மருத்துவச் செலவுக்காகவும் இப்பணத்தை பயன்படுத்தவுள்ளார். இறுதியாக மொபிடெல் கேஷ் பொனன்ஸா அதிஷ்ட சீட்டிழுப்பின் மூலம் எஞ்சியுள்ள பணத்தை நான் மரணித்த பிறகு பயன்படுகின்ற வகையில் மனைவி மற்றும் பிள்ளைகளின் தேவைகளுக்காக

சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடுவதற்கும் எதிர்பார்த்துள்ளேன் என அவர் தெரிவித்தார்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 12th MARCH 2017